விலை:
ரூபா 25.00

# உதயன்

பக்கங்கள் – 26

சுடர் 28 கதிர் 113 வள்ளுவர் ஆண்டு 2044 | பங்குனி 6 செவ்வாய் 19.03.2013 | UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

# ஈழத் தமிழ் மக்களுக்காக குமுறி வெடிக்கிறது தமிழகம்

## எங்கெங்கு திரும்பினும் போராட்டம் மாணவர் எழுச்சி உச்சம் தொட்டது

சென்னை, மார்ச் 19

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று கோரியும், இலங்கை அரசு மீதான போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தியும் தமிழகத்தில் மாணவர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் போராட்டங்கள் நேற்று உச்ச கட்டத்தை எட்டின. பார்க்க பக்கம் 04

## தேவை பிரேரணையில் திருத்தம் கருணாநிதி நேற்று திட்டவட்டம்

★ இறுதிப் போரில் நடைபெற்ற படுகொலைகளை இனப் படுகொலையாக அறிவிக்க வேண்டும்.

★ போர்க் குற்றங்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணைக்கு இந்தியா ஆதரவு கொடுக்க வேண்டும்.

★ குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

மேற்குறித்தவிடயங்களை ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்படவுள்ள அமெரிக்கத் தீர்மானத்தில் உள்ளடக்க இந்தியா முன்மொழிய வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி இந்திய மத்திய அமைச்சர்கள் குழுவிடம் உறுதியாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் மேற்குறித்த மூன்று விடயங்கள் தொடர்பாகவும் உடனடியாக இந்திய நாடாளுமன்றில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற பார்க்க பக்கம் 04

### பாதுகாப்புச் செயலர் சந்திப்பு இரத்து

சென்னை,மார்ச் 19

இந்திய - இலங்கை பாதுகாப்புச் செயலர்களுக்கு இடையே எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருந்த கலந்துரையாடல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக தமிழகத்தில் என்றுமில்லாத வகையில் வெடித்துள்ள மக்கள் போராட்டம், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்காது விட்டால் அரசிலிருந்து வெளியேறுவோம் என்ற கருணாநிதியின் மிரட்டல் என்பன காரணமாகவே இந்தச் சந்திப்பு இரத்துச்செய்யப்பட்டதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ங)

### இந்தியப் பிரதிநிதி திரும்புகிறார்

சென்னை,மார்ச் 19

ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான இந்திய விசேட பிரதிநிதி, ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை நகலுடன் அவசர அவசரமாக இன்று புதுடில்லி திரும்பவுள்ளார்.

நேற்று இந்தப் பிரேரணையில் இந்தியா சார்பில் மேற்கொள்ளப்படவேண்டிய முன்மொழிவுகள் பற்றி கருணாநிதி விடுத்த கோரிக்கைகளை அடுத்தே இந்திய விசேட பிரதிநிதி நாடு திரும்பவுள்ளார். இதன் மூலம் குறித்த பிரேரணையில் இந்தியா தன்சார்பான முன்மொழிவுகளை உள்ளடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ங)

## மதுரையில் இளைஞர் நேற்றுத் தீக்குளிப்பு

சென்னை, மார்ச் 19

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகவும், இலங்கை அரசுக்கு எதிராகவும் கோஷமிட்டபடி மதுரையில் நேற்றிரவு தமிழக இளைஞர் ஒருவர் தீக்குளித்தார். அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மதுரை கோரிப்பாளையத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்கு முன்னால் நேற்றிரவு 7.30 மணியளவில் தன்முகத்தைக் கறுப்புத் துணியால் மறைத்தபடி வந்த இளைஞர் ஒருவர் தன்னுடலில் திடீரெனப் பெற்றோலை ஊற்றினார். பின்னர் "தமிழீழம் வாழ்க" என்றும், இலங்கை அரசுக்கு எதிராகவும் கோஷமிட்டபடி தனக்குத்தானே தீ மூட்டிக்கொண்டார்.

தீயை அணைக்கும் முயற்சிகள் பயனற்றுப் போக குறித்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி மரணித்தார். பின்னர் அவரது சடலம் மதுரை அரச மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ்வாறு ஈழத்தமிழர்களுக்காக உயிர்க் கொடை புரிந்த குறித்த தமிழக இளைஞரின் பெயர் விவரங்கள் எதுவும் நேற்று நள்ளிரவு வரை கிடைக்கவில்லை.

இதேவேளை ஈழத் தமிழர்களுக்காகத் தன் இன்னுயிரை ஈர்ந்த இளைஞனின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்றிரவே மதுரைக்கு விரைந்தார். (ங)

பக்கம் 8 ஆட்சி செய்யும் தகுதி காங்கிரஸிடம் இல்லை

பக்கம் 11 நாட்டின் இறையாண்மையை காப்பதில் சீனா முழு உறுதி

பக்கம் 17 தேசத்துக்கு மகுடத்தில் மும்மொழிகள் கட்டாயம்

பக்கம் 25 இலங்கை முன்னிலை



### சிறுபோக செய்கையில் அரசியல் தலையீடு

கிளிநொச்சி, மார்ச்19

சிறுபோக செய்கையில் அரசியல் தலையீடுகள் காரணமாகத் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கல்மடுக்குளம் விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு மேற் பார்க்க பக்கம் 26

## அமெரிக்கப் பார்வை தமிழகத்தின் பக்கம்

### பிரேரணையில் எதிரொலிக்கும் உதயனிடம் கூறினார் டொனாஹே

கொழும்பு, மார்ச் 19

தமிழீழத் தனியரசுக்கான பொதுவாக்கெடுப்பு உட்பட எட்டு அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தில் தொடர் போராட்டங்கள் வெடித்துள்ள நிலையில், தமிழக மாணவர்களின் போராட்டத்தை சாதாரணமான விடயமாகக் கருதிவிட முடியாது என்றும், மாணவர் போராட்டம் குறித்து அமெரிக்கா மிகவும் கவனமாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது என்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்காவின் தூதுவர் எலின் சம்பர்லைன் டொனாஹே தெரிவித்தார்.

ஈழத்தமிழருக்கு ஆதரவாக 8 ஆவது நாளாக பார்க்க பக்கம் 04

### இருட்டடிப்பு செய்யும் 'கேபிள்'

யாழ்ப்பாணம், மார்ச்19

யாழ்ப்பாணத்தில் கேபிள் ரிவி வழங்குநர்களால் தமிழகத்திலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சிச் சேவைகளில் செய்தி நேரங்கள் உள்ளிட்ட ஈழத்தமிழர்கள் பற்றிய பதிவுகள் இடம்பெறும் பார்க்க பக்கம் 04

### யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர அழைப்புக் கருவி திருட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்19

யாழ். போதனா வைத்தியசாலையில் ஜப்பான் அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு அண்மையில் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த நவீன அவசர பார்க்க பக்கம் 04

## கடைசித் தமிழன் வரை போராட்டம் தொடரும்

### முழங்குகிறார் காசி ஆனந்தன்



யாழ்ப்பாணம் , மார்ச்19

இந்தியா உறுதுணையாக இருந்தாலும் இருக்காவிட்டாலும் தமிழீழ விடுதலைப் போர் தொடரும். அதில் எந்தத் தளம்பலும் இல்லை. ஈழத்தில் கடைசித் தமிழன் இருக்கும் வரை போராடுவோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் உயிர்த்தெழுவார்கள் என்பதைவிட உயிரோடு இருக்கிறார்கள் என்பதை அழுத்தமாகச் சொல்கின்றேன்.

இவ்வாறு ஈழத்து புரட்சிக் கவிஞரும் இந்தியாவில் வசித்து வருபவருமான காசி ஆனந்தன் முழங்கினார். பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அமெ.பிரேரணையின் கடுமையை குறைக்க இந்தியா பிரயத்தனம்

## மாறி மாறிப் பேச்சுக்கள் தீவிரம்

புதுடில்லி, மார்ச் 19

இலங்கைக்கு எதிராக ஐ. நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணை தொடர்பாக இந்தியா பெரும் குழப்பத்தில் உள்ளது.

இலங்கைக்குள் ஐ.நா. மனித உரிமைகள் ஆய்வாளர்கள் தடையின்றி வந்து செல்வதற்கு வசதி செய்ய வேண்டும் என்று பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருப்பது இலங்கையின் இறைமைக்குள் தலையிடுவதாகச் செய்யப்படும் அம்சமாகவே இலங்கை கருதுவதே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

அமெரிக்கா முன் வைத்துள்ள நகல் பிரேரணையில், சபையின் விசேட பணிப்புரை பெற்றுள்ள அதிகாரிகளுடன் இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளதுடன் நீதிபதிகள் மற்றும் சட்ட அறிஞர்களின் சுயாதீனம், மனித உரிமைப் பாதுகாவலர்கள், கருத்து சுதந்திரம், கூட்டம் கூடுதல், ஒன்று கூடுதலுக்கான சுதந்திரம், சட்டத்துக்கு மாறான விசாரணையற்ற ஒரு தலைபட்சமான கொலைகள், சிறுபான்மையினர் பிரச்சினைகள், பணியாளர் குழுக்கள் பலவந்தமாக காணாமற்போதல் மற்றும் பெண்களுக்கு எதிரான பாரபட்சங்கள் போன்றவைகள் உட்பட எஞ்சியிருக்கும் கோரிக்கைகள் தொடர்பாகவும் இலங்கை அரசு முறையாகப் பதிலளிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் கொண்டு வரப்பட்ட பிரேரணையின் கடுமையை புதுடில்லி பெரு முயற்சி எடுத்துத் தடுத்தது. அதேபோல் இந்திய அதிகாரிகள் இந்த முறையும் ஏதாவது செய்வதற்கு அமெரிக்காவுடனும் இலங்கையுடனும் தொடர்பு கொண்டு பாடுபட்டு வருகிறார்கள்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் பொதுமக்கள் உயிரிழப்புகள் தொடர்பான விசாரணைகள் சுதந்திரமாகவும் நம்பகத்தன்மையோடும் இருக்கும் என்று இந்திய அதிகாரிகள் இலங்கையோடும் அமெரிக்கா மற்றும் வேறு பல மேற்கு நாடுகளுடனும் நடத்திய பேச்சுக்களில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த 15 ஆம் திகதி இந்தியப் பிரதிநிதி பேசிய போது, மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வளிப்புச் செயற்பாடுகளில் எஞ்சியிருக்கும் பிரச்சினைகள் விரைந்து நிறைவேற்றப்படும் என்று தாங்கள் எதிர்பார்ப்பதாகவும், இந்தத் துறைகளில் வரவேற்கக் கூடிய அளவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

மீள் நல்லிணக்கம், உயர் பாதுகாப்பு வலயங்களைக் குறைத்தல், இராணுவத்தினரிடமுள்ள தனியார் காணிகளைத் திரும்பிக் கொடுத்தல், வடபகுதியில் இராணுவம், பொதுமக்கள் விவகாரங்களில் தலையிடுவதைக் கட்டம் கட்டமாக நீக்குதல் போன்றவை கால அவகாசத்துடனும் செயற்றிறனுடனும் செயற்படுத்தப்படும் என்றும் இந்தியா எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார். (த-ப)

# நலன்புரி நிலைய மக்களுக்காக 21.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். மாவட்டத்தில், சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்த மக்களுக்காகவும், நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்காகவும் அவர்களின் மேம்பாட்டு கருதி 21.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, மீள் குடியேற்ற அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களில் ஒரு தொகுதியினர் அவர்களின் சொந்த இடங்களில் கட்டம் கட்டமாக மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். அதனை விட விடுவிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களிலேயே தங்கியுள்ளனர்.

மக்கள் மீளக்குடியமர்ந்த தெல்லிப்பழை, மருதங்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கு 16 மில்லியன் ரூபா செலவில் மலசல கூடம் மற்றும் குடி தண்ணீர் வசதிகள் ஏற்டுத்திக் கொடுக்கப்படவுள்ளன. இதற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் அந்தந்தப் பிரதேச செயலகங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்காக, நலன்புரி நிலைய பராமரிப்புக்காக 5.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிதியில் நலன்புரி நிலையங்களைச் புனரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ண சரக்கோன் யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# திருடிய தாலி மண்ணினுள் புதைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வீட்டுக்குள் புகுந்து தாலிக் கொடியைத் திருடியவர்கள் அதனை வீட்டுக்கு வெளியே மண்ணினுள் புதைத்து வைத்த நிலையில் அது மீட்கப்பட்டதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நான்கு பேரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்.குருநகர் தொடர்மாடிப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்றது.

வீட்டில் யாரும் இல்லாத நேரம் இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது. தாலிக்கொடி சுமார் 3 பவுண் நிறையுடையது. அதனைத் திருடியவர்கள் ஏதோ காரணத்துக்காக வீட்டின் முன்புறமாக மண்ணைத் தோண்டி அங்கு புதைத்து வைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

தாலிக் கொடி காணாமற்போனவை பற்றி பாதிக்கப்பட்டவர் யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். இதன் போதே சந்தேகத்துக்கிடமான முறையில் நிலத்தில் அடையாளங்கள் காணப்பட்டதன் பின் அங்கு தேடிய போது தாலிக் கொடி இருப்பது கண்டறியப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அதே இடத்தைச் சேர்ந்த நான்கு பேரைத் தாம் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)



இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான 'மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம்' ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்றுத் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

# ஒரு குழந்தையின் தாயார் சடலமாக மீட்பு

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தம்பிராசா சுதாயினி (வயது–35) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

யாழ்ப்பாணம்,மார்ச் 19

ஒரு குழந்தையின் தாய் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் உரும்பிராய் மேற்கில் அவரது வீட்டில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தம்பிராசா சுதாயினி (வயது-35) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். அவரது கணவன் தொழில் நிமித்தம் வெளிநாட்டில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-4)

# இந்தியக் கடல் எல்லையில் தமிழக மீனவர் மீது தாக்கு

## மூன்று பேர் படுகாயம்

சென்னை,மார்ச் 19

தமிழகத்தின், புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி அருகில் உள்ள புதுக்குடி கிராமத்தைச் சேர்ந்த நாட்டுப் படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற போது இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கேலி செய்தபடி கொடூரமாகத் தாக்கியதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில், ராமன், பூமி, இலட்சுமணன் ஆகிய மூன்று மீனவர்கள் படுகாயம் அடைந்து மணமேல்குடி அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (த)

# கத்தி முனையில் மிரட்டி பெண்ணிடம் நகை கொள்ளை

யாழ்ப்பாணம், மார்ச் 19

கத்தி முனையில் குடும்பப் பெண்ணை அடித்துக் காயப்படுத்தியதோடு வீட்டிலிருந்து சுமார் 12 பவுண் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்.அரியாலையில் நெடுங்குளம் வீதியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

இது குறித்து அந்தப் பெண் தெரிவித்ததாவது:-

வீட்டில் அனைவரும் உறக்கத்தில் இருந்த வேளை அதிகாலை 2.30 மணியளவில் சமையலறைப் புகைக் கூட்டின் பக்கமாகச் சத்தம் கேட்டது. விழித்துக் கொண்ட யார் அது என்று கேட்ட போதும் பதில் வரவில்லை. பின்னர் மின் விளக்குகளை ஒளிரவிட்டபோது சமையலறையின் உள்ளே சத்தம் கேட்டது. நாம் திருடர் என்று கூறி சத்தமிட்டோம். எனினும் உதவிக்கு எவரும் வரவில்லை.

வீட்டுக்குள் புகுந்த இரண்டுக்கும் மேற்பட்ட கொள்ளையர்கள் பொல்லினால் எனது முகத்தில் அடித்தனர். நான் கீழே விழுந்து விட்டேன். ஒருவன் கத்தியை எனது கழுத்தில் வைத்து 'சத்தம் போடாதே' என்று மிரட்டினான். மற்றையவர்கள் வீட்டின் சகல அறைகளிலுள்ளும் புகுந்து சல்லடை போட்டுத் தேடி சங்கிலி, அட்டியல், காப்பு என சுமார் 12 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் - என்றார் அவர். (த-4)

# இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு எதிராக மனு

கொழும்பு,மார்ச் 19

இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணைக்குழு உறுப்பினர்கள் சிலருக்கு எதிராக ஆட்சேபனை மனுவொன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாக முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சேபனை மனுவை தாக்கல் செய்வதற்கு எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி வரை கால அவகாசம் வழங்க வேண்டும் என அவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணைக் குழுவிடம் நேற்று திங்கட்கிழமை கோரியுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் சொத்துக்களைக் குவித்த குற்றச்சாட்டில் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு விடுக்கப்பட்ட அழைப்பாணையை ஏற்று நேற்று விசாரணைக் குழுவில் முன்னிலையான போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (த)

# இலங்கை யாத்திரிகர்கள் தாக்கப்படுவதை நிறுத்துக

## ஜெயலலிதாவுக்கு மனோ கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

இலங்கை யாத்திரிகர்கள் தமிழகத்தில் தாக்கப்படுவதை முதல்வர் ஜெயலலிதா இரும்புக்கரம் கொண்டு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். இதுவே இலங்கைத் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளைப் பெற்றிட நாங்கள் கொடுக்கும் குரலுக்கு வலுச்சேர்க்கும் என்று நம்புவதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கோரியுள்ளார்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு அனுப்பி வைத்துள்ள மின்னஞ்சலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நடைபெற்று வரும் ஐ.நா.மனித உரிமைப் சபைக் கூட்டத் தொடரின் பின்னணியில் தமிழகத்தில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தப் போராட்டங்களை நடத்த தமிழக அரசியல் மற்றும் சமூக அமைப்புகளுக்கு இருக்கின்ற உரிமைகளை நாம் மதிக்கிறோம்.

இந்தப் போராட்டங்கள் சில சந்தர்ப்பங்களில் சட்ட வரம்பை மீறிச் செல்கின்றன. கடந்த சில தினங்களாக தஞ்சை, திருச்சி, சென்னையில் இலங்கையைச் சேர்ந்த பௌத்த துறவிகள் தாக்கப்பட்டுள்ளனர். இவற்றை நாம் கண்டிக்கிறோம். எமது இந்த உணர்வுகளை நீங்களும் பகிர்ந்து கொள்கிறீர்கள் என்று நாம் நம்புகின்றோம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட இயக்கமாக இருக்கின்ற அரசியல் சட்டப் பின்னணியில் விடுதலைப் புலிகள் தொடர்பான சட்டவிரோத தன்மையைக் கடுமையாகப் பேணும் அதேவேளையில் உங்களின் அரசு இலங்கை வாழ் அப்பாவித் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் எதிர்பார்ப்புகளுக்கும் பாதுகாப்பான நல்வாழ்வுக்கும் இயன்றதை செய்து வருகின்றது.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் நல்வாழ்வு தொடர்பில் இலங்கை அரசுக்குரிய அழுத்தங்களைக் கொடுப்பதும் தமிழகம் வரும் அப்பாவி சிங்கள யாத்திரிகர்கள் மீதான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தும் இரண்டு வெவ்வேறு விடயங்களைப் பகுத்து அறிந்து தூர நோக்குடன் உங்கள் அரசு கையாள்கின்றது.

இதனால், இலங்கை யாத்திரிகர்கள் தமிழகத்தில் தாக்கப்படுவதை இரும்புக்கரம் கொண்டு உடன்தடுத்து நிறுத்துங்கள். இதுவே இலங்கைத் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளைப் பெற்றிட உங்கள் அரசு கொடுக்கும் குரலுக்கு வலுச்சேர்க்கும்-என்றுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நிகழ்வுகள் இன்று

தீவுப்பகுதிதெற்குவேலணை பிரதேச செயலர் பிரிவின் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

பொ.நடராசா தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசனும் சிறப்பு விருந்தினர்களாக உதவி பிரதேச செயலர் பி.கஜேந்திரன், யாழ். மாவட்ட ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தைச் சேர்ந்த சு.கணேசலிங்கம், செ.சந்திரசேகரன் ஆகியோரும் கலந்து கொள்வர். புதிய செயற்குழுவும் தெரிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-/)

★ ★ ★

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் 'சில பூஜாக்ரம பத்ததி' எனும் நூல் வெளியீட்டு விழா பிற்பகல் 2 மணிக்கு இந்து சமயப் பேரவை நடராஜர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-ரி)

# அடுத்த பெரும்போகத்தில் விதை நெல் தட்டுப்பாடு வரும்

## விவசாய சம்மேளன தலைவர் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 19*

*யாழ். குடாநாட்டில் அடுத்த பெரும் போகத்துக்கு விதை நெல்லுக்கு பெரும் பற்றாக்குறை நிலவும் என்று விவசாய சம்மேளனத் தலைவர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:*

கடந்த போகத்தின் போது விவசாயிகள் மேற்கொண்ட நெற்செய்கை மழையால் பாதிக்கப்பட்டது. இந்த நிலையில் பெரும் பகுதியான நெல் தரமற்றுப்போனது.

இந்த நிலையில் அடுத்த போகத்துக்கு தேவையான விதை நெல்லுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்படும் நிலைமை தோன்றியுள்ளது.

பெரும்போக நெற்செய்கைகளில் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கிய விவசாயிகளுக்கு அடுத்த போகத்துக்கு தேவையான விதை நெல்லை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சு இதற்கென உலக உணவு நிறுவனத்தின் உதவியுடன் விதை நெல்லை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏற்கனவே மழையால் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கிய பாதிக்கப்பட்ட விவசாயிகளின் புள்ளி விவரங்கள் விவசாய சம்மேளனங்கள் ஊடாக சேகரிக்கப்பட்டு யாழ். செயலகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட இந்த விவசாயிகளுக்கு எந்தவித நிவாரணமும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இதுவரைக்கும் மேற்கொள்ளப்படவில்லை.

பெரும்பாலும் அடுத்த போகத்துக்கு தேவையான விதை நெல்லை மட்டும் அவர்களுக்கு பெற்று விநியோகிப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. அதுவும் அந்த விதை நெல் எந்த அடிப்படையில் வழங்கப்படவுள்ளது என்பது பற்றிய ஆக்கபூர்வமான ஏற்பாடுகள் இதுவரைக்கும் மேற்கொள்ளப்படவில்லை.- என்று மேலும் தெரிவித்தார். (ம-17)

## பொங்கல் விளக்கேற்றல்

சுழிபுரம், மார்ச் 19

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விளக்கேற்று வைவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து தினமும் அபிஷேக பூசை ஆராதனைகள் நடைபெற்று கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும். எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதலாவது பொங்கலும் நடைபெறும்.

பொங்கல் செய்பவர்களுக்கு வசதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ம-28)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 19

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் எஸ். பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் அங்கத்தவர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-253)

# மயானங்கள் முழுவதும் பற்றைக் காடுகள்

## துப்புரவாக்க வருமாறு அழைப்பு

தென்மராட்சி, மார்ச் 19

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட அனைத்து மயானங்களும் போதிய பராமரிப்பின்றி பற்றைகளாகக் காணப்படுகின்றன.


அவற்றைப் புனரமைக்க சமூகத்தினர் முன்வர வேண்டும் என்று பிரதேச நலனில் அக்கறை கொண்டவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதேசத்தில் 96 மயானங்கள் உள்ள போதிலும் அனைத்து மயானங்களும் புனரமைப்பின்றி பற்றைக் காடுகளாகவே காணப்படுகின்றன.

ஒவ்வொரு மயானமும் மூன்று அல்லது நான்கு பொது அமைப்புகள் செயற்படும் கிராமங்களை உள்ளடக்கிக் காணப்படுகின்றன.

மயானங்களில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வது பிரதேசசபையின் பொறுப்பு என்ற போதிலும் அதனை புனரமைத்து வைக்க வேண்டிய பெரும் பணி அந்தந்த கிராமங்களில் உள்ள பொது அமைப்புகளிடம் உள்ளன.

இந்த நிலையில் குறித்த மயானங்களை சிரமதானம் மூலம் துப்பரவு செய்ய அந்தப் பகுதியில் உள்ள பொது அமைப்புகள் முன்வர வேண்டும்.

பிரதேச சபையினர் மயான எல்லைகளை வரையறுத்து பாதுகாப்பு வேலிகளை அமைத்து வழங்க வேண்டும் எனவும் மேலும் கருத்துத் தெரிவித்தனர். (ம-9)



கன்னாகம் ஐயனார் ஆலயத்தால் வெளியிடப்பட்ட தாளையம்பதிக இறுவெட்டு வெளியீட்டு விழா ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவர் சி. குமாரவேல் தலைமையில் ஐயனார் ஆலயத் திருக் கல்யாண மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இறுவட்டை வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ், தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதிப் பணிப்பாளர் என் .ஈஸ்வரதாஸ், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஸ்ரீகாந்தக்குருக்கள் ஆகியோர் வெளியிட்டு வைக்க பிரபல வர்த்தகர் ஜெயகிருஸ்ணா முதல் பிரதியைப் பெற்றுக் கொள்கிறார். (ம-86)

## விளையாட்டு மைதானத்துக்கு புதிய காணி

வடமராட்சி, மார்ச் 19

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு புதிய காணி கொள்வனவு செய்யப்பபட்டுள்ளது.

கல்லூரிக்குப் பின்புறமாக உள்ள 5 பரப்பு தோட்டக்காணியே விளையாட்டு மைதானத்துக்காக கொள்வனவு செய்யப்பட்டதாகும்.

சங்கத்தின் கனடாக் கிளையினர் வழங்கிய நிதி உதவி மூலம் 20 இலட்சம் ரூபா செலவில் இந்தக் காணி கொள்வனவு செய்யப்பட்டு விளையாட்டு மைதானமாக செப்பனிடப்பட்டுள்ளது. (3-8)

# பூம்புகார் அரச காணிகளில் குடியிருப்போருக்கு உறுதிகள்

## விரைவில் வழங்குவது குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச்19

அரியாலை கிழக்கு பூம்புகார் பகுதியில் அரச காணிகளில் மீளக்குடியமர்ந்திருக்கும் மக்களுக்கு நிரந்தர உறுதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை விட இந்தப் பகுதியில் உள்ள வெற்று அரச காணிகளைக் காணி அற்ற மக்களுக்கு பகிர்ந்து வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அ.இரவீந்திரதாசன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது சம்பந்தமான கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் காலை அரியாலை கிழக்கு பூம்புகார் பகுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் இந்தப் பகுதி பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தப் பிரதேசத்தில் அரச காணிகளில் நீண்ட காலமாக குடியமர்ந்து பின்னர் போரால் இடம்பெயர்ந்து மீண்டும் அந்தப் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த மக்களுக்குக் காணிகளுக்கான நிரந்தர உறுதிப் பத்திரத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இவற்றைவிட பிரதேச தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டது. (ம-17)

## தீவுப்பகுதிக்கு 'இம்சான்'

யாழ்ப்பாணம், மார்ச்19

தீவுப் பகுதியில் மூன்று இடங்களில் 'இம்சான்' பரிவர்த்தனை அமைக்கப்பட்டு அதன் ஊடாக அந்தப் பிரதேச மக்களுக்கான 'கேபிள்' தொலைபேசி இணைப்புகள் விநியோகிக்கப்படவுள்ளன.

வேலணை, ஊர்காவற்றுறை, நாரந்தனை போன்ற பிரதேசங்களுக்கே இந்த 'இம்சான்' பரிவர்த்ததனை ஊடாக இணைப்புகளை வழங்க ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் தீர்மானித்துள்ளது.

தற்போது ரெலிக்கொம் நிறுவனத்தில் 'இம்சான்' பரிவர்த்தனைகளின் கையிருப்பு முடிவுற்றுள்ளது.

இந்த 'இம்சான்' பரிவர்த்தனைகள் இங்கு வந்து சேர்ந்ததும் தீவுப் பகுதியிலும் இவை அமைக்கப்பட்டு தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# காய்ச்சல் நோயாளரை கட்டுப்படுத்தத் திட்டம்

## சாவகச்சேரியில் நடவடிக்கை

**தினமும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு வாரத்தில் பகுப்பாய்வு செய்யப்படும்**

தென்மராட்சி, மார்ச் 19

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரும் சாவகச்சேரி ஆதார வைத்திசாலையினரும் இணைந்து தென்மராட்சி பிரதேசத்தில் காய்ச்சல் ஏற்படுவதைக் கட்டுப்படுத்த புதிய செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

தினமும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு வாரத்தில் அவை பொது சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாகப் பகுப்பாய்வு செய்யப்படவுள்ளது.

எந்த பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் டெங்கு, மலேரியா உள்ளிட்ட காய்ச்சல் அதிகமாக உள்ளதோ அந்தப் பிரிவில் முழுமையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி பிரதேசத்தில் காய்ச்சல் இல்லாமல் தடுப்பதற்கு, காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறு வேண்டும். இதன் மூலமே புள்ளி விவரங்களைப் பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் அறிமுகமாகியுள்ளது.

இந்தத் திட்டத்துக்காக யாழ். மாவட்டத்தில் மீள் எழுச்சித் திட்டக் கிராமங்களில் 50 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் பாடசாலை செல்லும் சிறுவர்களை உள்ளடக்கியதும், பிற வாழ்வாதார உதவிகளைப் பெறாதவரும், கிராம மீள் எழுச்சித் திட்டத்தில் அங்கத்துவம் உள்ளவர்களும் இந்தத் திட்டத்தில் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

திட்டத்துக்கான நிதியினைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கவுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வும் தமிழகத்தில் மாணவர்களின் போராட்டம் பேரெழுச்சி கொண்டுள்ள நிலையில், மாணவர்களின் இந்தப் போராட்டம் குறித்து அமெரிக்கத் தூதுவரிடம் ஜெனிவாவில் வைத்து 'உதயன்' வினவியது.

இதுகுறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் அரங்கம் ஒன்றில் வைத்து கருத்து வெளியிட்ட அவர், தமிழக மாணவர்களின் இந்தப் போராட்டத்தை சாதாரணமான ஒரு விடயமாக கருதி விட முடியாது என்றும் கூறினார்.

''கோடிக்கணக்கில் மாணவர்கள் ஒன்றுசேர்ந்து நடத்தும் ஒரு போராட்டத்தை இலேசான விடயமாக கருதிவிட முடியாது. அது அமெரிக்கா இங்கு கொண்டுவரவுள்ள தீர்மானத்தில் தாக்கங்களை ஏற்படுத்துமென நான் கருதுகிறேன் - என்றும் டோனஹே அம்மையார் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கை விடயம் குறித்தான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படுமா, இல்லையா என்ற கேள்வி நிலவிவரும் இவ்வேளையில், இதுகுறித்து இன்னும் ஓரிரு நாள்களில் முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# கடைசித்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே அவர் தனது உணர்ச்சிகரமான வாதத்தை முன் வைத்து முழங்கினார்.

அவர் நேர்காணலில் மேலும் தெரிவித்ததாவது;

இன்னும் 5 ஆண்டுகளுக்குள் ஈழத்தமிழர்களுக்கு விடியல் கிடைக்கவில்லையாயின் தமிழ் மக்கள் தேசிய இனமாக இருக்கமுடியாது. அன்று தொடங்கிய இன அழிப்பு இன்றும் தொடர்கிறது.

5 வயது நிரம்பிய தமிழ்க் குழந்தையை கொதிக்கும் சட்டியில் போட்டுக் கொன்றார்கள். தாயின் கருப்பையை கிழித்து எடுத்து அந்தத் தமிழ்க் குழந்தையை சுவரோடு அடித்துக் கொலை செய்தார்கள். இன்று பாலச்சந்திரன் வரை குழந்தைகளையே சிங்களவர்கள் கோரமாக கொலை செய்தார்கள்.

இதிலிருந்து எங்கள் தமிழ்க் குழந்தைகளை இந்தியாவாலும் காப்பாற்ற முடியவில்லை; உலகின் எந்த அரசுகளாலும் , ஏன் ஐ.நாவால் கூட எங்களைக் காப்பாற்ற முடியவில்லை.

அப்படியானால் நாங்கள் எங்களைப் பாதுகாப்பதற்கு எங்கள் குழந்தைகள் ஆயுதம் தூக்குவதில் என்ன பிழையிருக்கிறது? கருவறையில் பிறக்கும் குழந்தையும் ஆயுதத்தைத் தூக்கும். எங்களுக்கு வேறு வழியில்லை. எங்களைக் காப்பாற்றினால் நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிடுகின்றோம்.

இவ்வாறானதொரு நிலையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்றம் பெற்றது. எங்கள் போராளிகள் குற்றமற்றவர்கள். எங்களின் போராளிகளை விடுதலையாளர்கள் என்று 2008 ஆம் ஆண்டு கிலாரி கிளின்டனே கூறியிருந்தார்.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் உயிர்த்தெழுவார்கள் என்பதைவிட உயிரோடு இருக்கிறார்கள் என்பதை அழுத்தமாகச் சொல்கின்றேன்.

இந்தியாவின் விடுதலைப் போரே எங்களையும் போராடத் தூண்டியது என்பதைப் பெருமையாகச் சொல்கின்றோம். ஆனால் இந்தியப் போரைவிட எங்கள் போராட்டம் மகத்தானது.

தமிழீழத்தை விட மூன்று மடங்கு பெரியது இலங்கை . இலங்கையை விட இரண்டுமடங்கு பெரியது தமிழ்நாடு. தமிழ்நாட்டைப் போல் 26 மாநிலங்களைக் கொண்டது இந்தியா.

இந்தப் பெரிய இந்தியாவின் போராட்டத்தில் 30 ஆயிரம் பேர் தான் இறந்தார்கள். ஆனால் எங்கள் தமிழீழ போராட்டத்தில் மூன்று இலட்சம் பேர் வரையில் இறந்துள்ளனர்.

நாங்கள் வெறிகொண்டு போராடவில்லை. திமிர் கொண்டு போராடவில்லை. சிங்களவர்கள் எரிந்து அழிந்து போகவேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை.

போராட்டத்தை நடத்தும் எங்கள் ஈழ இளைஞர்களுக்கு காதல் இல்லையா? திருமணத்தில் ஆசையில்லையா? வாழ ஆசையில்லையா?

எங்கள் போராட்டத்தைப் புரிந்து கொண்டு இந்தியா உதவ வேண்டும்.

வியட்நாம் போராட்டத்துக்கு சீனாவும் ரஷ்யாவும் உதவின. பலஸ்தீனப் போராட்டத்துக்கு அரபு நாடுகள் உதவின. ஆனால் எங்கள் போராட்டத்துக்கே யாரும் உதவவில்லை. அதனால்தான் நாங்கள் போராடுகின்றோம்.

இந்திய அமைதிப்படையினர் ஈழத்துக்கு வந்தபோது அவர்களை நாங்கள் வரவேற்றோம். விமானத்தில் இருந்து உணவுப் பொட்டலங்களை இந்தியா போட்டபோது எங்களின் தீர்வுக்காக இந்தியா நிற்கின்றது என்று நம்பினோம். ஆனால் சிறிது நாள்களிலேயே உணவுப்பொட்டலங்களுக்குப் பதிலாக குண்டுகள் போட்டார்கள். அதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்திய இராணுவம் - தமிழீழ விடுதலைப் புலிகள் இடையேயான மோதல் தேவையில்லாத ஒன்றுதான் .

இவ்வளவு கொடுமைகளுக்குப் பிறகும் இந்தியா எங்களோடுதான் நிற்கவேண்டும் என்கிறோம். அமெரிக்கப் பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்றே விரும்புகின்றோம்.

தமிழீழ விடுதலைப் போராட்ட கோரிக்கைகளை இந்தியா மற்றும் ஐ.நா. என்பன கொச்சைப் படுத்துகிறார்கள் - சிறுமைப்படுத்துகிறார்கள்.

இந்திய அரசினால் உப்புச்சப்பில்லாத 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதில் வடக்கு - கிழக்கு பிராந்தியம் என்ற பதத்தைப் பாவித்தார்கள்.

தென் சூடானிலோ , திமோரிலோ, பொஸ்னியாவிலோ. இவ்வாறு நீங்கள் சொல்லவில்லையே. இங்கே மட்டும் தமிழீழம் என்று சொல்லும் போதுமட்டும் வடக்கு-கிழக்கு பிராந்தியம் என்கின்றீர்களே?

இலங்கையில் நாங்கள் நடத்துவது பிராந்தியங்களுக்கிடையிலான போர் அல்ல. இரண்டு தேசிய இனங்களுக்கிடையிலான போராட்டம் . இதைப் பற்றி சொல்லும் போது தமிழீழம் எனக் குறிப்பிடுவதை ஏன் மறுக்கிறீர்கள்.

ஐ.நா. அறிக்கையில் 2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த போர்க் குற்றம் பற்றியும், மனித உரிமைகள் சபையில் மனித உரிமை மீறல் பற்றி மட்டுமே சொல்லப் பட்டுள்ளது.

ஏன் எந்தவொரு இடத்திலும் இன அழிப்புப் பற்றிச் சொல்லவில்லை. ஈழத்தில் நடந்ததும்-நடப்பதும் பச்சை இன அழிப்பு.

ஈழத் தமிழர்கள் தேசிய இனம் என்ற பார்வை இந்தியாவிடம் தோன்ற வேண்டும். சிலர் ஈழத் தமிழர் பிரச்சினையையும், கஷ்மீருடன் ஒப்பிட்டுப் பேசுகின்றனர். அது தவறு. ஒரு கஷ்மீரி இந்தியாவின் பிரதமராக வரலாம். ஆனால் ஈழத் தமிழன் ஒரு போதும் ஜனாதிபதியாக வரமுடியாது.

பலர் இலங்கையின் இறையாண்மை ஒருமைப்பாட்டைப் பற்றி சொல்கின்றனர்.

எந்தவொரு நாட்டிலும் கொடுங்கோலாட்சி நடந்து கொண்டிருக்கும் போது ஒரு நாடும் பேசாமல் இருக்க முடியாது .

ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சி காரணமாக, அமெரிக்கா- பிரிட்டன், ஜேர்மனி மீது பாய்ந்து ஜேர்மனியை உடைக்கவில்லையா. இந்தியா, வங்காளிகளுக்காக பாகிஸ்தானிடமிருந்து பங்களா தேஷைப் பிரித்தெடுக்கவில்லையா. ஏன்? இலங்கை வான் பரப்புக்குள் அத்துமீறி இந்திய விமானங்கள் உணவுப் பொட்டலங்களைப் போடவில்லையா

எனவே இந்தியா தனது கடமையைச் செய்யும் என்று எதிர் பார்க்கின்றோம். ஜெனிவாவில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணை ஈழ விடுதலையைப் பெற்றுத் தரப் போவதில்லை.

இந்தியா உறுதுணையாக இருந்தாலும் இருக்காவிட்டாலும் தமிழீழ விடுதலைப் போர் தொடரும். ஈழத்தில் கடைசித் தமிழன் இருக்கும் வரை போராடுவோம்.

நாங்கள் நிமிர்வோம். ஈழத்தில் புயல் வீசும். நெருப்பு எரியும். எங்கள் தமிழ் ஈழத்தை நாங்கள் மீட்போம்- என்றார்.

(த-5)

# யாழ்....

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அழைப்பு சாதனம் திருடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அவசர அழைப்பு சாதனம் ஜப்பானில் இருந்து எடுத்து வரப்பட்டு பொருத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. கட்டடத்தின் 'எக்ஸ்றே' படப்பிடிப்பு பிரிவுக்கு முன்பாக பொருத்தப்பட்டிருந்த இந்தச் சாதனத்தை இனந்தெரியாதோர் களவாடிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

'ஜெய்க்கா' நிறுவனத்தின் அனுசரணையுடன் விசேட தேவையுடையவர்களின் நலன் கருதி சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் இந்தக் கருவி பொருத்தப்பட்டிருந்தது. இக்கருவியே களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல லட்சம் ரூபா பெறுமதியான இந்தச் சாதனம் திருடப்பட்டமை குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் கூறின.

(த-4-17-86-400)

# இருட்டடிப்பு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

நிகழ்ச்சிகள் இரத்துச் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக வேறு நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் தமிழகம் மட்டுமன்றி வட மற்றும் மத்திய மாநிலங்களிலும் இலங்கைக்கு எதிரான போராட்டங்கள் வலுத்துள்ளன.

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும். ஈழத் தமிழர் பிரச்சினைக்கு ஒரே தீர்வு தனித்தமிழீழமே, போர்க்குற்றவாளியான மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி இந்தப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் இவ்வாறான நிகழ்ச்சிகள் தமிழகத்திலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சிச் சேவைகளில் ஒளிபரப்பப்படுகின்றன. குறிப்பாக செய்தி நேரங்களில் இலங்கை விடயம் முதன்மைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தமிழகத்தில் நடைபெறும் நிகழ்வுகளைத் தணிக்கை செய்யும் வகையில் அரசுக்கு ஆதரவான சிலர் திட்டமிட்டு இந்த ஒளிபரப்புச் சேவைகளை இடையூறு செய்வதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

உள்ளூர் கேபிள் இணைப்புக்கள் மூலமே இவ்வாறான [illegible] நடைபெறுவதாக [illegible].

(ஐ)

# தேவை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வேண்டும் அவர் கோரியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வரும் இலங்கைக்கு எதிரான பிரேரணை தொடர்பாக தி.மு.க. தலைவர் கருணாநிதியுடன் மூன்று மத்திய அமைச்சர்கள் நேற்று 2 மணி நேரத்துக்கும் மேலாக ஆலோசனை நடத்தினர்.

இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆதரிக்காதுவிட்டால் மத்திய அரசில் இருந்து தி.மு.க. வெளியேறும் என்று கருணாநிதி எச்சரித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து கருணாநிதியுடன் ஆலோசனை நடத்த மத்திய அமைச்சர்கள் ப. சிதம்பரம், ஏ.கே. அந்தோனி, குலாம் நபி ஆசாத் ஆகியோர் நேற்று மாலை சென்னை வந்தனர். விமானநிலையத்தில் அவர்களுக்கு ம.தி.மு.கவினர் கறுப்புக் கொடி காட்ட முயற்சித்தனர். பொலிஸார் கறுப்புக் கொடி காட்ட முயன்றவர்களைக் கைது செய்தனர். பின்னர் மூன்று மத்திய அமைச்சர்களும் கருணாநிதியைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர். இதன் போதே இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள பிரேரணையில் இந்தியா சார்பில் முன்மொழியப்படவேண்டிய விடயங்கள் பற்றி தி.மு.கவின் நிலைப்பாட்டை கருணாநிதி உறுதியாக வெளிப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பை அடுத்து கருத்துத் தெரிவித்த மத்திய அமைச்சர்கள் குழு, ''கருணாநிதியின் கோரிக்கைகள் குறித்து இன்று பிரதமருடனும், சோனியா காந்தியுடனும் கலந்துரையாடவுள்ளோம்.' என்று தெரிவித்தனர். (ங)

# ஈழத்தமிழ்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களையும் சேர்ந்த மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் தம்மையும் இணைத்துக் கொண்டனர். மாணவர்களுக்கு ஆதரவாக சட்டத்தரணிகளும் களத்தில் குதித்துள்ளனர்.

**சென்னை**

சென்னைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுதல் உள்ளிருப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். ஏறக்குறைய 3 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

இதேவேளை மாணவர்களுக்கு ஆதரவாக சட்டத்தரணிகளும் நேற்றுக் களமிறங்கினர். நேற்றுக் காலை சென்னையில் அமைந்துள்ள சுங்கத்துறை அலுவலகத்தைச் சுற்றிவளைத்த சட்டத்தரணிகள் தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று கோரினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட சட்டத்தரணிகள் மீது பொலிஸார் வன்முறையைப் பிரயோகிக்க முயன்றனர். இதனால் சட்டத்தரணிகளுக்கும் பொலிஸாருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

**மதுரை**

மதுரை மாவட்ட சட்டத்தரணிகள் 6 பேர் நேற்றுமுதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இலங்கைக்கு எதிராக இந்தியா ஜெனிவாவில் வாக்களிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 8 கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை தமிழகத்தில் இராமநாதபுரம், விருதுநகர், திருச்சி, வேலூர், கோவை, சேலம் உள்ளிட்ட பல பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இலங்கைக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

பழனி மாவட்டத்தில் பழனியாண்டவர் கலைபண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த 12 மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் நேற்று திடீரென வீதி மறியல் போராட்டத்தில் இறங்கினர். இதனால் சிலமணி நேரம் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது.

திருவண்ணாமலை மாவட்ட அரசு கலைக்கல்லூரியைச் சேர்ந்த 15 மாணவர்கள் சென்னைக்கு நடைப்பயணத்தை ஆரம்பித்துள்ளனர். இன்று சென்னையை நடைப் பயணமாக வந்தடையும் இவர்கள் இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈரோடு மாவட்டம் பவானி சாகரிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளும், இலங்கை மீது சர்வதேச விசாரணை வேண்டும், உடனடியாக பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**புதுச்சேரி**

புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் நேற்று புதுச்சேரிச் சட்டமன்றம் வரை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றையும் நடத்தியுள்ளனர். இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்ற தீர்மானம் புதுச்சேரிச் சட்டமன்றத்தில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**இடிந்த கரையில்**

கூடங்குளம் அணு நிலையத்துக்கு அண்மையிலுள்ள இடிந்த கரைப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் இலங்கை அரசுக்கு எதிராக நேற்று கறுப்புக் கொடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**தொடர்கிறது போராட்டம்**

சென்னை நியூகாலேஜில் இருந்து கோட்டைவரை இன்று செவ்வாய்க்கிழமை மனிதச்சங்கிலிப் போராட்டத்திலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை ரயில் மறிப்புப் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளதாக தமிழீழ மாணவர் இயக்கம் அறிவித்துள்ளது.

தமிழகத்திலுள்ள பொறியியல் கல்லூரி மாணவர்கள் அனைவரும் இலங்கைக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இந்த நிலையில் தமிழகத்திலுள்ள சகல பொறியியல் கல்லூரிகளையும் உடனடியாக மூடுமாறும், இன்றிரவு 7 மணிக்கு முன்பாக உள்ள விடுதிகளிலுள்ள மாணவிகள் வெளியேறிவிட வேண்டுமெனவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

**மீனவர் மீது தாக்குதல்**

இந்தியாவில் இலங்கைக்கு எதிரான போராட்டங்கள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள தருணத்தில் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல்களை நடத்தத் தொடங்கியுள்ளது. நேற்றும் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் சிலர் இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்டுள்ளனர். இதனைக் கண்டித்து மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

**ஜப்பானிலும் ....**

ஜப்பானிலுள்ள தமிழ் மக்களும் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். தமிழீழத்துக்கான பொதுவாக்கெடுப்பு, இலங்கை மீதான சர்வதேச விசாரணை, உடனடிப் பொருளாதாரத் தடை என்பவற்றை வலியுறுத்தி ஜப்பான் வாழ் தமிழர்கள் ஜப்பானியப் பிரதமரிடம் நேற்று மனு ஒன்றையும் கையளித்துள்ளனர். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தொடர்புகளுக்கு

தலைமையகம்:

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாதிப்புற்ற தரப்புக்கு தெம்பு தரும் முடிவு கிட்டட்டும்

ஆளை ஆளைப் பார்க்கிறார்; ஆட்டத்தைப் பார்த்திடாமல், ஆளை ஆளைப் பார்க்கிறார். மிகப் பல வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த தமிழ்த் திரைப்படம் ஒன்றில் ஒலித்த பாடலின் முதல் வரி இது. ஆனால், நாட்டியம் ஆடும் ஆளைப் பார்க்காமல், நடனத்தில் கலை அழகை ரசித்து, அதன் ஆழத்தையும் நடனக்காரரின் ஆளுமையையும் கணித்துக் கொள்வதே பொருத்தம்; கலை ரசனை உள்ளவன் அதனையே செய்வான்; அவ்வாறே செய்ய வேண்டும் என்பதனை அந்தப் பாடல் மறை பொருளாகச் சொல்கிறது.

இலங்கையில் போர் நடைபெற்ற வேளையில் அரச தரப்பில் - அதன் படைகளினால் - அனைத்துலக மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட போர் விதிகளும், மனித உரிமைகளும் கடாசப்பட்டிருந்தன என்பதனை அனைத்துலக நாடுகள் அறிந்ததன் விளைவே, இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுமுன் எதிர்நோக்க நேர்ந்துள்ள பொறுப்புக்கூறும் விவகாரம்.

அமெரிக்கா தலைமையில் அனைத்துலக நாடுகள் ஒன்று சேர்ந்து, கடந்த வருடம் இதே காலப்பகுதியில் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதில் - செயற்படுத்துவதில் - அரசு தாமதம் காட்டுவதனாலும் புறமொதுக்குவதனாலும் -

இம்முறை (அநேகமாக நாளை மறுதினம்) முந்தியதை விட மிகவும் காரமான பிரேரணை ஒன்றை அமெரிக்கா தாக்கல் செய்ய உள்ளதாக ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், இலங்கை அரசு தானே நியமித்த நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை விரைந்து நிறைவேற்றி நாட்டில் வாழும் இனங்களுக்கு இடையே நல்லுறவை உண்டாக்கும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருந்தது.

அத்தோடு, வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற இறுதிப் போரின் போது இடம்பெற்ற உயிர் இழப்புகள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு அரசு பொறுப்புக் கூற வேண்டும். அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

அவற்றில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் மிகச் சிலவற்றை மட்டும் நடைமுறைப்படுத்திவிட்டு, ஏனையவற்றை மிச்சம் வைத்திருக்கிறது எங்கள் நாட்டு அரசு.

இராணுவ அதிகாரிகளை அங்கத்தவர்களாகக் கொண்ட விசாரணைக்குழு ஒன்றை நியமித்து, ஐ.நா. தீர்மானத்தை ஏய்க்காட்டும் பிரயத்தனத்தில் ஈடுபட்டது.

இப்போது, கடந்த வருடத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள், விவகாரங்களை நிறைவேற்ற மேலும் கால அவகாசம் கேட்டுநிற்கிறது.

அமெரிக்கா இம்முறை கொண்டுவந்து நிறைவேற்றவுள்ள பிரேரணையில், போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்த உள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

ஆனால் எந்தவிதத்திலும் அதனைத் தடுத்தாக வேண்டும் என்ற முனைப்புடன் அரசின் சார்பில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க பரிசீலனை அறிக்கை ஒன்றை ஜெனிவா மாநாட்டில் சமர்ப்பித்திருந்தார். அதனை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழு ஏற்றுக்கொண்டது. அது தமக்குக் கிடைத்த வெற்றி என்று ஒரு புறத்தில் திருப்தி தெரிவிப்பதோடு அரசு அடக்கி வாசிக்க முனைகிறது.

ஆனால் புதிய பிரேரணை, தீர்மானமாக நிறைவேறும் பட்சத்தில் அதனால் உண்டாகக் கூடிய கடும் விளைவுகள் குறித்து உள்ளூர அச்சமுறாமல் இருக்க முடியாது. விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்று சொல்லக் கூடியது அல்ல இப்போது எமது அரசாங்கம் எதிர்கொள்ளும் ( எதிர்) வினை...

இத்தனைக்கும் , அமெரிக்கப் பிரேரணையை இந்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழகத்தில் வலிந்து இறுகி வருகிறது.

போர்க் குற்றம் குறித்து விசாரணை கோரும் அமெரிக்கத் தீர்மானத்தை மத்திய அரசு ஆதரித்து அதற்கு வலுவூட்ட வேண்டும் என்று தமிழக மாணவர்கள் முன்னெடுத்து வரும் போராட்டம் உச்சக் கட்டம்வரை களைகட்டி வருகிறது.

அதனைக் கவனத்தில் கொண்டு சாதகமாக இந்திய மத்திய அரசு செயற்படும் என்ற அசுகையும் தெரிகிறது.

அமெரிக்கப் பிரேரணையின் அசலான நகல் கிடைத்ததும் அது குறித்துத் தீர்க்கமான முடிவு மேற்கொள்ளப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சகத்தின் செயலாளர் ஜி.வ. சிங்கா நேற்றுத் தெரிவித்திருந்தார்.

எப்படியோ, அமெரிக்கா, இந்தியா மற்றும் மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதனை மதிக்கும், ஏற்றுக் கொள்ளும் நாடுகள் மேற்கொள்ளும் முடிவுகள், பாதிப்புற்ற இலங்கைத் தமிழ் மக்களுக்குத் தெம்பு தருவதாக அமையும் என்று எதிர்பார்ப்போமாக.



# உள்ளூராட்சி சபைகளால் 2012 இல் ரூ.1842 மில் செலவில் வேலைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளால் 2012 ஆம் ஆண்டு ஆயிரத்து 842 மில்லியன் ரூபா செலவில் 553 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் 407 வேலைத் திட்டங்கள் கடந்த ஆண்டே முடிக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஒரு மாநகரசபை, 3 நகர சபைகள், 13 பிரதேச சபைகள் என்பன இயங்குகின்றன. இவற்றின் ஊடாகவே சேவைகளில் 553 வேலைத் திட்டங்கள் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வீதிகள் மற்றும் கால்வாய்கள் ஆயிரத்து 220,74 மில்லியன் ரூபா செலவில் 362 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 268 வேலைத் திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. 94 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராமிய கட்டுமான அபிவிருத்திக்கு 111 வேலைத் திட்டங்களுக்கு 520.936 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் 70 வேலைத் திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. 41 வேலைத் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கழிவகற்றல் முகாமைத்துவம் தொடர்பில் 21 வேலைத் திட்டங்களுக்கு 30.186 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 15 வேலைகள் முழுமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 6 வேலைத் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குடிதண்ணீர் விநியோகம் தொடர்பில் 43 வேலைத் திட்டங்களுக்கு 35.422 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 40 வேலைத் திட்டங்கள் கடந்த ஆண்டு நிறைவடைந்துள்ள நிலையில் 3 வேலைத் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராமிய மாற்று சக்தி தொடர்பாக 10 வேலைத் திட்டங்களுக்கு 9.77 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 9 வேலைத் திட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் ஒரு வேலைத் திட்டம் மாத்திரம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுற்றுலாத்துறை மற்றும் போக்குவரத்து தொடர்பில் 6 வேலைத் திட்டங்களுக்கு 24.55 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 5 வேலைத் திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ள போதும் ஒரு வேலைத் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று மாவட்ட செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-5)

# வடமாகாணத்தில் உள்ள வளங்களை சுற்றுலாத் துறை பயன்படுத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வடமாகாணத்தின் வளங்களை சுற்றுலாத் துறையினர் பயன்படுத்தக் கூடியதாக அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை வடமாகாண சுற்றுலாத் துறை ஒன்றியம் மேற்கொண்டு வருகிறது.

சுற்றுலாத் துறையினரின் வருகை தற்போது வடமாகாணத்தை நோக்கி நகர ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் அதனூடாகக் கிடைக்கக் கூடிய வருமானத்தை வளங்களை உடைய பிரதேசங்கள் இழக்க நேரிட்டுள்ளது.

சுற்றுலாத் துறையினரின் வருகைக்கு ஏற்ப வளங்களின் பயன்பாட்டை மெருகூட்டல் செய்தால் அதனூடாக அதிகளவு வருமானத்தை வளங்களைக் கொண்ட பிரதேசங்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இதன் முதல் கட்டமாக பிரதேச வளங்களைச் சுற்றுலாத் துறையினர் பயன்படுத்தக் கூடியதாக அது சார்ந்த ஆர்வலர்களை வடமாகாண சுற்றுலாத் துறையுடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை சுற்றுலாத் துறை ஒன்றியம் மேற்கொண்டு வருகிறது.

இலங்கை சுற்றுலாத்துறை ஒன்றியத்துடன் இணைந்து இலங்கைக்குள் நுழையக் கூடிய சுற்றுலாப் பயணிகள் வடமாகாணத்தின் வளங்களையும் பயன்படுத்துவதற்கு ஏற்ப அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கென ஒன்றியத்தின் விசேட குழுவினர் சுற்றுலாத் துறையில் வருமானம் எதிர்பார்க்கும் ஆர்வலர்களைச் சந்தித்து கலந்துரையாடி ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர். (ம-14)

# மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன்விழா நிகழ்வு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன்விழா நிகழ்வுகள் இன்று செவ்வாய்கிழமை ஆரம்பமாகி மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 8 மணி முதல் பரிசளிப்பு விழாவும் கல்லூரி நிறுவுனர் தினமும் இடம்பெறவுள்ளன.

கல்லூரி அதிபர் திருமதி எஸ். ஜெயவீரசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலனும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி வி.யோகநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவும் கலந்து கொள்வர்.

இதில் கல்லூரியின் நிறுவுநர் உரையை ஓய்வு பெற்ற நீதிபதி இ.வசந்தசேனன் நிகழ்த்தவுள்ளார்.

நாளை புதன்கிழமை கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவனும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராசா, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ரி.முரளிதரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இதில் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வுகள், மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் குறத்தி நடனம் என்பன இடம்பெறும். அத்துடன் கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் மற்றும் ஊழியர்கள் கௌரவிப்பும் இடம் பெறும்.

வியாழக்கிழமை இடம்பெறவுள்ள இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராஜாவும் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி ஏ.இராமநாதனும் கலந்து கொள்வர். (ம-400- ரி)

# இரண்டு ஆண்டுகளில் 1000 பேருக்கு பார்வை

## தேசிய கண் வங்கி சாதனை

யாழ்ப்பாணம், மார்ச் 19

தேசிய கண் வங்கி ஆரம்பிக்கப்பட்டு கடந்து சென்றுள்ள இரண்டாண்டுகளில் உயிரிழந்த நோயாளர்களின் கண்ணில் இருந்து பெறப்பட்டுள்ள விழிவெண்படலத்தின் மூலம் ஆயிரம் பேருக்குப் பார்வை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சிசிர லியனகே இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் களுபோவில வைத்தியசாலை அகியவற்றில் மாத்திரம் இறக்கும் நோயாளர்களிடமிருந்து இந்த விழி வெண்படலம் பெறப்படுகிறது.

அதுவும் ஆணோ, பெண்ணோ இறக்கும் போது மிக நெருங்கிய உறவினர்கள் விரும்பினால் மட்டுமே அவர்களின் விழிவெண்படலம் பெறப்படுகிறது.

இந்தக் கண் வங்கிக்கு இது வரையில் கிடைத்துள்ள ஆயிரத்து 100 விழிவெண்படலங்களுள் ஏறத்தாழ நூறு வரையிலானவை நாட்டிலுள்ள வேறு வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கு ஆபத்து கழிவுநீர் வாய்க்காலில்

புதுக்குடியிருப்பு,மார்ச்19

மூடப்படாத நிலையில் காணப்படும் கழிவு நீர் வாய்க்கால் மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகின்றது.

முள்ளியவளை- முல்லைத்தீவு வீதியில் வித்தியானந்தாக் கல்லூரிக்கு அண்மித்ததாக அமைந்துள்ள கழிவு நீர் வழிந்தோடும் வாய்க்கால் மூடப்படாது பாதுகாப்பில்லாத நிலையில் காணப்படுவதால் இரவில் அவ் வீதியால் பயணிப்போர் பெரும் ஆபத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

வித்தியானந்தாக் கல்லூரியில் இருந்து கலைமகள் வித்தியாலயம் வரையான பகுதியில் சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான இந்த வாய்க்கால் காணப்படுகின்றது.

இங்குள்ள வீதி செப்பனிடப்படும்போது கழிவு நீர் வழிந்தோடுவதற்கென வீதியின் ஓரத்தில் இந்த வாய்க்கால் அமைக்கப்பட்டது. ஆனால் பல மாதங்கள் கடந்த நிலையிலும் மூடப்படாது காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக இரவில் நடமாடுபவர்களின் நிலைதான் ஆபத்தாக மாறியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மாணவி ஒருவர் இந்த வாய்க்காலுக்குள் தவறி வீழ்ந்து படுகாயமடைந்தார். முதலில் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த வாய்க்காலைப் பாதுகாப்பான வகையில் மூடிவைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-400)

# விபத்தில் மூவர் காயம்



வவுனியா, தாண்டிக்குளம் விவசாயக் கல்லூரிக்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

தாண்டிக்குளம் பகுதியிலுள்ள உணவகமொன்றிலிருந்து வீதியைக் கடந்துசெல்ல முற்பட்ட ஓட்டோவுடன் எதிர்த் திசையிலிருந்து வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று முதலில் மோதியது. பின்னர் இம்மோட்டார் சைக்கிள் மேலும் ஒரு மோட்டார் சைக்கிளுடனும், சைக்கிளுடனும் மோதி விபத்திற்குள்ளானது.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ் விபத்துத் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-எ)

# ரூ.2 லட்சம் தண்ட வசூல்

## சட்டவிரோத மதுபான விற்பனையால்

கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சியில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டவர்களுக்கு 2 லட்சம் ரூபா வரை தண்டம் விதிக்கப்பட்டது.

வட்டக்கச்சி பகுதியில் 180 போத்தல் கசிப்பு வடித்தெடுப்பதற்கான கோடாவை வைத்திருந்த ஒருவரைக் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து கடந்த 13ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். அந்த நபருக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேபோன்று பிரமந்தனாறு பகுதியில் 750 மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்த நபருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது.

இதேவேளை வட்டக்கச்சிப் பகுதியில் 175 மில்லி லீற்றர் அரச சாராயத்தை பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு விற்பனை செய்ததுடன் மேலதிகமாக ஆயிரத்து 125 மில்லி லீற்றர் சாராயத்தைத் தன் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய் யப்பட்ட நபர் ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-6)

# பாடசாலை முன் உள்ள பற்றையை அகற்றுங்கள்

கிளிநொச்சி , மார்ச் 19

கண்டாவளை கட்டைக்காடு பாடசாலைக்கு முன்பாகவுள்ள பற்றைக்காடுகளை அகற்றுமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, கண்டாவளை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட கட்டைக்காடு அ.த.க.பாடசாலைக்கு முன்பாக மிக நீண்டகாலமாகவே பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன. இதனால் இந்தப் பகுதியில் பல சமூக விரோதச் செயற்பாடுகளும் இடம்பெற்று வருவதாகத் தெரியவருகின்றது.

இதனால் இதனை அகற்றித் தருமாறு பாடசாலை நிர்வாகம் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் தனிமையில் செல்லும் பெண் ஆசிரியர் எனப்பலரும் பெரும் அச்சத்துடன் இந்தப் பகுதியைக் கடந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. (க-6)

# ஆற்று மணலுக்கு முரண்பாடு இரண்டு கிராமங்கள் இடையே

அக்கராயன், மார்ச் 19

வன்னேரிக்குளம் முடக்கன் ஆற்று மணல் யாருக்குச் சொந்தம் என்பதில் இரு கிராமத்தவர்கள் முரண்பட்டு வருகின்றனர்.

ஜெயபுரம் வன்னேரிக்குளம் ஆகிய இரண்டு கிராமங்களையும் சேர்ந்த மக்களே மேற்கண்டவாறு முரண்படுவதால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இருகிராமங்களிலும் நிரந்தர வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் மணலுக்கான தேவை அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் பிரச்சினைகளும் அதிகரித்துள்ளன.

வன்னேரிக்குளம் கிராம அலுவலர் பிரிவிலேயே முடக்கன் ஆறு அமைந்துள்ளது.

வன்னேரிக்குளம் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலும், ஜெயபுரம் கிராமம் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# வீ·டு வசதிகள் இல்லாத வன்னேரிக்குளம் கிராமம்

அக்கராயன் , மார்ச் 19

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தில் எந்த வகையான வீடுகளும் வழங்கப்படாத நிலையில் 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அவலவாழ்வு வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிக்கடி பெய்துவரும் மழை காரணமாக இவர்களது இருப்பிடங்களில் நீர்க்கசிவு ஏற்படுவதால் இவர்களின் நிலை மோசமாக மாறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

> அடிக்கடி பெய்துவரும் மழை காரணமாக இவர்களது இருப்பிடங்களில் நீர்க்கசிவு ஏற்படுவதால் அவதி

தமது அவல நிலை நீங்க வேண்டுமாயின் தமக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வன்னேரிக்குளம் கிராமத்தில் காணிகள் இல்லாத குடும்பங்களை பளைப் பிரதேச செயலர் பிரிவில் சென்று வசிப்பதற்கு விருப்பமா என அந்தப் பிரிவிலுள்ள கிராம அலுவலர் கேட்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். அங்கு சென்றால் காணி, வீடு என்பன வழங்கப்படுமெனத் தம்மிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவில் காணி இல்லாத மக்களுக்கு வழங்குவதற்கான காணிகள் இல்லையென கரைச்சிப்பிரதேச செயலர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# மன்னாரில் பெண்களுக்கான கருத்தரங்கு

மன்னார், மார்ச்.19

மன்னார் சர்வோதய அமைப்பின் ஏற்பாட்டில் பெண்கள் அரசியலில் ஈடுபடுவது தொடர்பான கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் சர்வோதய அமைப்பு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளரான ஸ்ரீநிவாசன் யுகேந்திரா இதற்குத் தலைமை தாங்கினார்.

இதில் மன்னார், நானாட்டான் ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட சுமார் 40 பேர் கலந்து கொண்டனர்.

இங்கு பெண்களின் குறைந்தளவு அரசியல் ஈடுபாடு, அரசியலில் ஈடுபடுகின்றபோது அவர்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டன.

இந்தக் கருத்தரங்கில் சர்வோதய அமைப்பின் சமூக வேலைத் திட்ட இணைப்பாளர் எஸ்.கணேஸ், மகளிர் இயக்கப் பணிப்பாளர் தயானி கிரேஷா, உப தலைவர் விமலரணதுங்க, உப செயலாளர் அன்னபூரணி, வளவாளர் ஜெசி. ஆரியரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-12)

## முத்திரையிடாத நிறுத்தல் அளவைக் கருவிகளை வைத்திருந்த

# வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

வவுனியா, மார்ச் 19

முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகளை வைத்திருந்த 15 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகளை வைத்திருந்த 15 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பொறுப்பதிகாரி பாலஸ்கந்தன் இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகளை வைத்திருந்த 9 வர்த்தகர்களுக்கு எதிராக இன்று செவ்வாய்க்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகளை வைத்திருந்த 6 வர்த்தகர்களுக்கு எதிராக நாளை மறுதினம் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், வவுனியா மாவட்டத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகளை வைத்திருந்த வர்த்தகர்களுக்கு எதிராக 07 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 12 ஆயிரம் ரூபா தண்டம் அவர்களிடமிருந்து அறவிடப்பட்டன. இதில் 4 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதேபோன்று பெப்ரவரி மாதம் வவுனியாவில் 17 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 42 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டது.

மேலும் மன்னார் மாவட்டத்தில் இதைப்போன்று வர்த்தகர்களுக்கு எதிராக 17 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 32 ஆயிரத்து 500 ரூபா தண்டம் அறவிடப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு வவுனியா மாவட்டத்தில் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடாத வர்த்தகர்களுக்கு எதிராக 73 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் 56 வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டு ஒரு இலட்சத்து 85 ஆயிரத்து 500 ரூபா தண்டம் அவர்களிடமிருந்து அறவிடப்பட்டது. ஏனைய வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-எ)


# பாராட்டி வாழ்த்துகிறோம்




"பொதிகை" அல்வாய் வடக்கைச் சேர்ந்தவரும்
ஓய்வு பெற்ற அதிபரும், நக்கீரன் சி.க.வ.கூ. சங்கத்தின் தலைவருமான

**கி.கணேசன்** அவர்கள்

அகில இலங்கை சமாதான நீதிவானாக
பருத்தித்துறை மாவட்ட நீதிபதி
திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்களின் முன்னிலையில்
28.02.2013 அன்று சத்தியப்பிரமாணம் செய்து
கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
மு.வரதராஜன் குடும்பத்தினர்,
இ.இராசநாயகம் குடும்பத்தினர்,
ந.உதயகுமார் குடும்பத்தினர்,
சி.ஸ்ரீகரன் குடும்பத்தினர்,
ந.கிருஷ்ணகுமார் குடும்பத்தினர்,
த.இந்திரன் குடும்பத்தினர்.

அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(T/7130)(8.6.7).

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## புதுமுக மாணவர்களைப் பதிவு செய்தல்

கல்வியாண்டு 2011/2012 இற்கான மாணவர் பதிவினை இன்னும் மேற்கொள்ளாதவர்கள் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை அனுமதிகள் கிளையில் பின்வரும் திகதிகளில் தங்கள் பதிவினை மேற்கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்.

| | கற்கை நெறி | திகதி |
|---|---|---|
| 1 | கலை, சட்டம், இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் | 22.03.2013 வெள்ளிக்கிழமை |
| 2 | பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், கணினி விஞ்ஞானம் | 23.03.2013 சனிக்கிழமை |
| 3 | முகாமைத்துவம், வணிகம் | 25.03.2013 திங்கட்கிழமை |
| 4 | விவசாயம், சித்த மருத்துவம், தாதியியல், மருந்தாக்கவியல், மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானம் | 27.03.2013 புதன்கிழமை |

(C/7129)(6.7.11)

பதிவாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.செம்மணி வீதியில் திருத்தப்பட்டு வரும் பகுதிக்கு பாதுகாப்பு வேலியுடன் குறியீட்டு பலகையும் நாட்டப்பட்டுள்ளது. கடந்த வாரம் பாதுகாப்பு வேலியும் உரிய குறியீடும் இல்லாத நிலையில் இரு இளைஞர்கள் தவறி விழுந்து இறந்தனர். இந்த நிலையிலேயே பாலத்துக்கு பாதுகாப்பு வேலி இடப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் இவ்வாறான பல விபத்துக்கள் இதே இடத்தில் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# இடைவிலகும் மாணவர் விவரங்கள் ஆராய்வு

## யாழ். அரச அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 19

மாவட்ட மட்டத்தில் பாடசாலைகளில் இருந்து இடை விலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக சிறுவர்கள் தொழிலில் அமர்த்தப்படுவதும் அதிகரித்துள்ளது என்று யாழ். செயலக வட்டாரங்கள் கூறுகின்றன.

**மாணவர்கள் இடை விலகுவதால் சிறுவர் தொழிலாளர்களும் அதிகரித்துள்ளனர்**

இந்த நிலை குறித்து ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட அரச அதிபர் சு. அருமைநாயகம் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களிலும் கல்வி தொடர்பான அபிவிருத்தி கூட்டங்களிலும் உயரதிகாரிகளால் இந்த விடயங்கள் தொடர்பாக அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனை அடுத்தே யாழ். மாவட்ட அரச அதிபர் பிரதேச செயலாளர் ஊடாகவும், மாவட்ட மட்டத்தில் பிரத்தியேகமாக பட்டதாரி அலுவலர்களைக் கொண்டு ஒரு பிரத்தியேகமான குழுவை அமைத்தும் ஆய்வு செய்யவுள்ளார்.

வலய ரீதியாகவும் இந்த ஆய்வுகளை நடத்தி இடைவிலகும் மாணவர்களை இனம் காண்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மாணவர்கள் இடைவிலகுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கும் நிவாரணமளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ம-50)

## கணினிகள் உண்டு மின்சாரம் இல்லை

### கீரிமலை நகுலேஸ்வராவின் நிலைமை

வலி. வடக்கு, மார்ச் 19

கீரிமலை நகுலேஸ்வரம் வித்தியாலயத்தில் மாணவர்களின் பாவனைக்கென கணினிகள் பாடசாலையில் இருக்கின்றபோதிலும், அதனைப் பயன்படுத்த மின்சாரம் இல்லை என்று மாணவர்கள் முறையிடுகின்றனர்.

கடந்த ஆண்டு குறிப்பிட்ட பாடசாலை தனது சொந்த இடத்தில் புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

பாடசாலை மாணவர்களின் பயன்பாட்டுக்கென ஒரு தொகுதி கணினிகள் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்டன.

உரிய அதிகாரிகள் இந்த நிலையைக் கருத்தில் கொண்டு மின்சாரம் வழங்க நடவடிக்கைகளை எடுக்க முன் வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ம-86)

## தென்மராட்சிப் பகுதியில் விழிப்புணர்வுப் பலகைகள்

தென்மராட்சி, மார்ச்.19

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர், தென்மராட்சி பிரதேசத்தில் மக்கள் கூடும் பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள், சந்தைகள் போன்ற இடங்களில் 'உணவு அருந்து முன்னர் ஒரு நிமிடம் சிந்திப்போம்' என்னும் சுகாதார விழிப்புணர்வு விளம்பரப் பலகைகளை நட்டு வருகின்றனர்.

'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் உணவு மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கும் உணவு, சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும், மக்களை விழிப்புணர்வூட்டும் முகமாகவும் உணவகங்களின் தரம் தொடர்பாகவும் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

'ஏ' மிக நன்று, 'பி' நன்று, 'சி' முன்னேற இடமுண்டு என்ற தரச் சான்றிதழ்கள் உணவு கையாளும் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையங்களின் உணவு வகைகளை பயன்படுத்தலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-9)

## பதிவுத் தபால், பொதிகள் விவரம் இனி கணினி வலையமைப்புக்குள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். குடாநாட்டிலும் பதிவுத் தபால் மற்றும் தபால் பொதிகள் குறித்த விநியோக முறைகளை கணினி வலையமைப்பின் ஊடாக மக்கள் பார்வைக்கு விடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது தென் பகுதியில் சில தபாலகங்களில் இந்தப் பதிவு தபால், தபால் பொதிகள் போன்றவற்றின் விநியோக முறைகள் கணினி வலையமைப்பின் ஊடாக மக்கள் பார்வைக்கு விடப்பட்டுள்ளன.

இந்த நடைமுறையை நாடு முழுவதும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு தபால் மா அதிபர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

பதிவுத் தபால் மற்றும் தபால் பொதிகள் போன்றவற்றை விநியோகிப்பதற்கு முன்னர் அவை கணினி வலையமைப்புக்குள் கொண்டு வரப்படும்.

இதன் மூலம் மக்கள் தமக்கு வந்து சேர்ந்துள்ள பதிவுத் தபால்கள், பொதிகள் போன்றவற்றின் விவரங்களை இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம-17)

## அவசியமின்றி இரவு வேளைகளில் நடமாடுவோர் மீது நடவடிக்கை

### சுன்னாகம் பொலிஸார் அறிவிப்பு

வலி. வடக்கு, மார்ச் 19

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் இரவு வேளைகளில் அவசியம் இன்றி நடமாடுபவர்கள் குறித்துப் பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட 15 பேர் ஒரு வார காலத்தில் கைது**

பொலிஸாரின் இவ்வாறான நடவடிக்கைகளால் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொலிஸ் பொறுப்பதிகாரியாக தெஹிவளை குற்றத்தடுப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் பரிசோதகர் டி.துஸ்மந்தா பொறுப்பேற்றதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒரு வார காலத்தில் இத்தகைய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் பதினைந்துக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.(ம-86)

## வேலணையில் நம்பிக்கை நிதியத்தால் 80 பேருக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

வேலணை பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் கடந்த 2012 இல் கண் சத்திர சிகிச்சைகளுக்கான உதவித் தொகையையும் சுகாதாரம், இறப்பு போன்றவற்றுக்கான மானியக் கொடுப்பனவையும் 80 பேருக்கு வழங்கியுள்ளது என்று சங்கத்தின் செயலாளர் எஸ்.சிவலோகநாதன் தெரிவித்தார்.

சங்கத்தில் உறுப்பினரான ஓய்வூதியர்களின் முக்கிய நிகழ்வுகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஓய்வூதியர்கள் சங்கத்தில் இணைந்து கொண்டு இந்தப் பயனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## தேங்காய் குலையுடன் தலையில் வீழ்ந்தது

அளவெட்டி, மார்ச் 19

கிணற்றடிக்கு முகம் கழுவச் சென்றபோது தென்னை மரத்தில் இருந்து தேங்காய் குலையுடன் தலையில் விழுந்ததால் ஒருவர் காயமடைந்தார்.

உடுவிலைச் சேர்ந்த சகாயம் கமலராஜா (வயது 30) என்பவரே காயமுற்று தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை காலையில் இடம்பெற்றுள்ளது. (ம-36)

## வேட்டைக் காரர்களால் துரத்தப்பட்ட பன்றி தாக்கி நபர் காயம்

தென்மராட்சி, மார்ச் 19

வேட்டைக்காரர்களால் துரத்தப்பட்ட பன்றி வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றவரைத் தாக்கிக் காயப்படுத்தியது.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக் கிழமை வரணி நாவற்காட்டில் இடம்பெற்றது.

பன்றி தாக்கியதில் காலில் பலத்த காயம் ஏற்பட்டு பெருமளவு இரத்தம் சிந்திய நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

வரணியைச் சேர்ந்தவரே பன்றியால் தாக்கப்பட்டுக் காயமடைந்தவராவார். (ம-9)

## பாண் விற்பனையை தடுத்து எச்சரிக்கை

### பிரதேச சபை அனுமதி பெறாததால்

தென்மராட்சி, மார்ச் 19

அனுமதிப் பத்திரமின்றி சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மா உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த நடமாடும் வாகனம் தடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபைத் தலைவரும், பொதுச்சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

யாழ்.நகரப் பகுதியைச் சேர்ந்த பேக்கரியில் தயாரிக்கப்பட்ட பாண் மற்றும் பணிஸ் போன்றவற்றை சாவகச்சேரி நகரசபையின் அனுமதிப் பத்திரம் பெறாமல் நடமாடும் வாகனம் மூலம் விற்பனை செய்த போதே தடுக்கப்பட்டது.

நடமாடும் வாகனத்தில் மா உற்பத்திப் பொருள்கள் தினமும் விற்பனை செய்யப்படுவதால் தமது உற்பத்திப் பொருள்கள் விற்பனையாவதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பேக்கரி உரிமையாளர்கள் முறையிட்டனர்.

அதனையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மா உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்த வாகனச் சாரதி எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

(3-9)

## வாக்குறுதி தரப்பட்டு ஒரு வருடம்; மின்சாரமோ கிடைக்கவில்லை

### அராலி கிழக்கு மக்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 19

அராலி கிழக்கில் உள்ள அம்மன் வீதிக்கும் வீமன் காமம் வீதிக்கும் 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் உடன் மின்சாரம் பெற்றுத் தரப்படும் என்று வலி. மேற்கு பிரதேச செயலர் கூறி ஒரு வருடம் பூர்த்தி அடைந்துள்ளது. எனினும் மக்கள் இருளிலேயே மூழ்கி அபிவிருத்தி இன்றி அவலத்தில் உள்ளனர்.

வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வலி. மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின் கீழ் உள்ள வறிய கிராமம் அராலி கிழக்கு.

இங்கு மக்கள் ஒரு போதும் மின்சாரத்தைப் பெறாத நிலையிலேயே உள்ளனர்.

அராலி கிழக்கு வீமன் காமம் கலட்டி வீதியுடன் தொடர்புபட்ட வீதியாக அம்மன் வீதி, வீமன் காம வீதி என்பன உள்ளன.

குறிப்பிட்ட வீதிகளுக்கு மின்சாரம் வழங்கக் கோரி பல தடவைகள் வட்டுக்கோட்டை அத்தியட்சகருக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

23 -02-2012 இல் வலி. மேற்கு பிரதேச செயலருக்கும் யாழ். மாவட்ட அரச அதிபருக்கும் இது தொடர்பான கடிதங்கள் அனுப்பப்பட்டன.

இதன் பின்னர் வலி. மேற்கு பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் 27-03-2012 அரச அதிபருக்கு முகவரியிட்டு மின் வழங்கல் தொடர்பாக கோரிக்கை விடுத்திருந்தார்.

தற்போது குடாநாட்டில் அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டு வருகின்ற போதும் மின்சாரம் இன்றி இன்னும் எத்தனையோ கிராம மக்கள் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்மோகனுக்கு ஜெயலலிதாவும் எழுதினார் கடிதம்

சென்னை, மார்ச் 19

இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பிரதமர் மன்மோகன் சிங் குக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதி யுள்ளார்.

இதுதொடர்பாக அவர் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில், அமெரிக்கத் தீர்மானத்தில் தேவையான திருத்தங்களை இந்தியா கொண்டுவர வேண்டும்.

இலங்கை விவகாரம் குறித்து இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் வெளியிட்ட கருத்து கவலை அளிப்பதாக உள்ளது என்றும் குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணை தொடர்பில் இந்தியா திருத்தங்களைக் கொண்டு வந்து ஆதரவு அளிக்க வேண்டும். இல்லையேல் ஐக்கிய முன்னணி கூட்டணியிலிருந்து தி.மு.க. விலகும் என்று மன்மோகன்சிங்க சோனியாவுக்கு கடிதம் மூலம் எச்சரிக்கை விடுத்திருந்தார். (வ)



இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தர்மபுரி அரச கலைக் கல்லூரி மாணவர்கள் நான்கு தினங்களாக தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள நிலையில் நேற்று தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 500 பேர் உண்ணாவிரதத்தில் சேர்ந்தனர். (வ)

## சென்னை ரயில் நிலையத்தில் இலங்கைப் பிக்கு மீது தாக்கு

சென்னை, மார்ச் 19

டில்லியில் சுற்றுலாவை முடித்துவிட்டு ஆன்மிக குழுவுடன் சென்னை மத்திய ரயில் நிலையம் வந்த இலங்கைப் பிக்குவை தமிழ் உணர்வாளர்கள் நேற்று கடுமையாகத் தாக்கியுள் ளனர்.

டில்லியிலிருந்து 'தமிழ் நாடு எக்ஸ்பிரஸ்' மூலம் சென்னைக்கு வந்த அவர் மீது சென்னை மத்திய ரயில் நிலையத்தில் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தமிழீழ ஆதரவாளர்கள் எனக் கூறப்படும் சிலர் அவரை சரமாரியாகத் தாக்கியுள்ளனர். எனினும் தாக்குதல் நடத்தியவர்கள் உடனடியாக அங்கிருந்து தப்பிச் சென்று விட்டனர். தகவல் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் பௌத்த பிக்குவை பொலிஸ் நிலையதுக்கு அழைத்துச் சென்று விசாரித்ததுடன் உதவிகளையும் வழங்கினர்.

கண்டியிலிருந்து இந்தியாவுக்கு சுற்றுலா சென்ற 20 பேர் கொண்ட குழுவில் இந்தப் பிக்குவும் இடம்பெற்றிருந்தார். ஆன்மீகச் சுற்றுலாவுக்குச் சென்று விட்டு ரயிலில் சென்னை திரும்பியபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சுற்றுலா வந்த ஏனையோர் விமானம் மூலம் இன்று இலங்கை திரும்புகின்றனர்.

பௌத்த பிக்கு மீது தாக்குதல் நடத்தியவர்கள் "தமிழர்களை அங்கே கொன்று விட்டு இங்கே வருகிறீர்களா?" என்று கேட்டுத் தாக்கியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ)

# ஆட்சி செய்யும் தகுதி காங்கிரஸிடம் இல்லை

### பா.ஜ.க. எகத்தாளம்




சென்னை, மார்ச் 19

இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவளிப்பது தொடர்பில் தகுந்த முறையில் செயற்பட முடியாத காங்கிரஸ் கட்சிக்கு இந்தி யாவைத் தொடர்ந்து ஆட்சி செய்யும் தகுதி இல்லை என்று பாரதீய ஜனதா கட்சி தெரிவித் துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் பேச்சாளர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை செய்தியாளர் களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழர் விடயத்தில் மத்திய அரசின் செயற்பாடு திருப்திகரமானதாக இல்லை. இந்த விடயத்தில் தமிழகத்தில் இந்த அளவு ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்புகளும் வலியுறுத்தப்படுகின்ற நிலையில், மத்திய அரசும் தொடர்ந்தும் மௌனமாகவே இருக்கின்றமையை ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறான நிலையிலும் திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசுடன் இணைந்தே இருக்கின்றமை, அது தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்படுகின்ற விடயம் ஒன்றில் செயற்படமுடியாத அரசு, ஆட்சி நடத்த தகுதி அற்ற ஒன்றாகவே இருக்கும்- என்றார். (வ)

## போர்க்கால ஒத்திகைக்கு விமானப் படை தயார்

டில்லி, மார்ச் 19

போர்க்கால ஒத்திகைக்கு இந்திய விமானப் படையின் அனைத்து விமானத் தளங்களும் தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் போர்க்கால ஒத்திகை இந்த முறை மிகப் பெரியளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

2007இல் நடைபெற்ற ஒத்திகைக்குப்பின், இந்திய விமானப் படை பெரியளவில் வளர்ந்துள்ளது என்று அதிகாரிகள் கூறுகின்றனர். இதன் அனைத்துப் பிரிவு களும், மிக் ஜெட் விமானங்களில் இருந்து எஸ்.யு, எம்.கே.ஐ. வரை அனைத்தும் ஒத்திகையில் ஈடுபடும்.

குண்டு வீசும் நேரடி ஒத்திகைகளும், பயிற்சிகளும் விமானப்படை வலைத் தொகுப்பில் நேரடியாக ஒளிபரப்பப்படும்.

ஒரு வருடத்துக்கு முன்பே இந்த ஒத்திகை குறித்து முடிவுகள் எடுக்கப் பட்டாலும், இந்தியா-பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இடையே உறவுகளில் சுமுக நிலை குறையத் தொடங்கியுள்ள நிலையில், இந்த ஒத்திகை இடம்பெறுவது என்பது எதேச்சையான நிகழ்வாகக் கூறப்படுகிறது. (வ)


## அரசாங்கத்தின் ஊடாக உடன் பயணம்

ஜப்பான், கொரியா, இத்தாலி நாடுகளில் தொழில் செய்யும் வாய்ப்பு உள்ளது. உத்தர வாதத்துடன் பெற்றுத்தருவதற்கு இலவச ஆலோசனையும் குறைந்த செலவில் யூரோ, யுகே எந்த நாட்டு விசாவுக்கும் ஸ்பொன்சர், வங்கி ஸ்டேட்மெண்ட். இந்த சேவையைப் பெற

தொடர்பு:

0775977626

(C77854)(10.6.7)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தின்
28 ஆவது பட்டமளிப்பு விழாவில்
(B.BA (Hons) HRM Spl. I St Class பட்டம்
பெற்ற செல்வன் தனபாலசிங்கம் அருள்பிரசாத்
அவர்களை மேன் மேலும் பல
பட்டங்களைப் பெற்று
சிறப்பாக வாழ எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுவதோடு
பல்கலையும்
பெற்றுவாழ வாழ்த்தி நிற்கும்

அன்பு அப்பா, அம்மா,
அக்காமார், தங்கை,
மருமக்கள்,
மைத்துனர்கள்.

கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.

(#7124)(1.6.7)


## பிக்குவைத் தாக்கிய மூவருக்கு மறியல்

தஞ்சாவூர் பெரிய கோயிலுக்குச் சென்ற இலங்கைப் பிக்கு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 9 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள அதே வேளை மூவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

46 வயதான பௌத்த பிக்கு வட மாநிலங்களைச் சேர்ந்த தொல்லியல் ஆய்வு நிறுவனம் ஒன்றில் பயின்று வருகிறார்.

ஆயிரம் வருட பழைமை வாய்ந்த கோயில் எனக் கருதப்படும் தஞ்சாவூர் கோயிலில் ஆய்வு ஒன்றுக்காக சென்ற போது கடந்த 16 ஆம் திகதி அவர் தாக்கப் பட்டார்.

குறித்த பௌத்த பிக்குவை நாம் தமிழர் கட்சி, தமிழ் தேசப்பொதுவுடமைக் கட்சி, ம.தி.மு.கவினர் உள்ளிட்ட தமிழ் அமைப்பினர் தாக்கினர். சம்பவம் தொடர்பில் 12 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் கூறுகின்றனர். (வ)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி இரத்தினசபாபதி



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரத்தினசபாபதி நேற்று (18.03.2013) திங்கட் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப் பிள்ளை- சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற லீலாவதி பாக்கியத்தின் அன்புக் கணவரும், கருணாரத்தினம் (G.S) திருவதனி, கணேந்திரா ஆகியோரின் அன்புத்தந்தையும், ஸ்ரீகாந்தி, சோமலிங்கம், விஜயலட்சுமி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2013)செவ்வாய்க் கிழமை பி.ப 3.00 மணியளவில் NO-73, இராணி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 322 5200

கல்வியங்காடு. (35408)(6.7.11)


## குருக்கள் தேவை

பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு குருக்கள் தேவை. உதவி மண்டபம், சகல விதமான கிரியைகளும் செய்யக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். இருப்பிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். கோயில் வேலைகள் செய்யக்கூடிய வேலையாளும் தேவை.

தி. நாகராசா.

(C77127)(10.6.7)

## ஆள்கள் தேவை

கைதடி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் நிரப்புநர் தேவை. 28.03.2013 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:021 320 7042 (27897)(6.7.11)

## வாடகைக்கு வாகனம்

ஹையஸ் வாகனம் அரச, அரச சார்பற்ற தனியார் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 077 407 2459 (27898)(6.7.11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று பதவியேற்கிறார் புதிய பாப்பரசர்

## பிரான்ஸிஸ்



வத்திக்கானோடு பல முரண்பாடுகளைக் கொண்ட சீனா உட்பட உலகம் முழுவதும் புதிய திருத்தந்தையை அன்போடு வரவேற்று, பாராட்டி, அவர் மூலமாக கத்தோலிக்க திருச்சபை மட்டுமல்ல, முழு உலகமுமே இறைவனின் தூய ஆவியாரின் வழிநடத்தலைப் பெறவேண்டும் என்று ஆசித்து நிற்கிறது.




செங்கடகல பினான்ஸ் தனது 50வது வியாபார சேவை ஸ்தானத்தை யாழ் மாநகரில் திறந்து வைப்பதில் பெருமிதமடைகின்றது

முக்கிய வர்த்தக நடவடிக்கைகள்: குத்தகை வாடகை, வாடகைக் கொள்வனவு, அடகுச் சேவை, வெளிநாட்டு நாணய மாற்றல், சேமிப்பு மற்றும் நிலையான வைப்புப் பணங்களை ஏற்றுக்கொள்ளல்.

கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள்: அளுத்கம, அநுராதபுரம், எம்பிலிப்பிட்டிய, பதுளை, கொழும்பு, காலி, கம்பஹா, ஹட்டன், கட்டுகஸ்தோட்டை, கேகாலை, கடுவலை, களனி, கண்டி, குளியாப்பிட்டிய, குருநாகல், மாத்தளை, மாத்தறை, கல்கிசை, திட்டம்புவ, நிக்கவெரெட்டிய, நீர்கொழும்பு, நுகேகொட, நுவரெலியா, பாணந்துறை, [illegible] வெள்ளவத்தை, வென்னப்புவ, மஹரகம, ஹொரணை, வெலித்த, அம்பாறை, [illegible] வவுனியா, கந்துருவெல, கொட்டாஞ்சேனை, தம்புள்ள, ஏனைய [illegible] மஹியங்கனை, சீதுவை, களுத்துறை, சிலாபம்.

Est. 1968

செங்கடகல பினான்ஸ்

நேர்த்தி தவறாதது

SL BBB+ Fitch Rating Lanka Limited

(C 7051 K6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mahindra
MAXXIMO PLUS
பெரியவர்களில் மிகப்பெரியவன்

## அதிகரித்துவரும் எரிபொருள் விலைக்குரிய தீர்வு
# அதிக டீசல் சிக்கனத்துடன்கூடிய மஹிந்திரா மெக்சிமோ ப்ளஸ்

மஹிந்திரா மெக்சிமோ வண்டி மேலும் மெருகூட்டப்பட்டு மெக்சிமோ ப்ளஸ் எனும் நாமத்துடன் சந்தைக்கு வருகின்றது. அதிக டீசல் சிக்கனத்துடன்கூடியது என்பதனால் இந்த ட்ரக் வண்டி "எரிபொருள் விற்பன்னர்" (Fuel Smart) எனும் புனைப் பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றது. மஹிந்திரா மெக்சிமோ ப்ளஸ் ஃபுவல் ஸ்விட்ச் (Fuel Switch) எனப்படும் விஷேட அங்கத்தையும் தன்னகத்தே கொண்டது. ஃபுவல் ஸ்விட்ச்சை இகோ மொட் (Eco Mode) இற்கு மாற்றுவதன் மூலம் எரிபொருட் சிக்கனத்தை உயரளவில் பேணிக்கொள்ளலாம். இந்நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரிகளுக்கு மற்றும் சுயதொழில் புரிபவர்களுக்கு மெக்சிமோ ப்ளஸ், சிறந்த தெரிவாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதிக நிறையை ஏற்றிக்கொண்டு எவ்வித தளம்பல்கள் மற்றும் அதிர்வுகளின்றி நிலையாக பயணிக்கத்தக்க ஆளுமை இவ்வண்டியிலிருக்கும் விஷேட இயல்பாகும்.

**இந்த ட்ரக் வண்டி ஃபுவல் ஸ்விட்ச் (Fuel Switch) விஷேட அங்கத்துடன் கூடியது. ஃபுவல் ஸ்விட்ச்சை இகோ மொட் (Eco Mode) இற்கு மாற்றுவதன் மூலம் எரிபொருள் சிக்கனத்தை உயரளவில் பேணிக்கொள்ளலாம்.**

பொதுவாக ட்ரக் வண்டி பாவனையாளர்களுக்கு உள்ள பாரிய சவால் என்னவெனில், மிகவும் சிக்கனமான முறையில், தமது செலவினத்தை குறைத்துக் கொண்டு தமது தேவைகள் மற்றும் செயற்பாடுகளை பூர்த்திசெய்து கொள்வது எப்படியென்பதாகும். "இதென்ன டீசல் குடிக்குதோ?" "எவ்வளவு அடித்தாலும் போதாது" போன்ற விடயங்கள் அதிகளவில் ட்ரக் வண்டி சாரதிகளால் அடிக்கடி முணுமுணுக்கப்படும் விடயங்களாகும். இவற்றிலிருந்து இவர்களது தேவையைப் புரிந்துகொள்ளலாம். மஹிந்திரா, இவ்விடயம் பற்றி தொடர்ச்சியாக கரிசனை செலுத்துகின்றது. உயர் ரக நவீன தொழில்நுட்பத்தை எப்போதும் தனது உற்பத்திச் செயற்பாடுகளில் புகுத்திக்கொள்வதை வழமையாக்கிக் கொண்டுள்ள மஹிந்திரா, மெக்சிமோ ப்ளஸ் வண்டியை அறிமுகப்படுத்தியுள்ளதும் அதே கொள்கை அடிப்படையிலேயாகும்.

ட்ரக் வண்டி பாவனையாளர்களிடத்தில் இருக்கும் ஒரு தவறான புரிந்துணர்வு என்னவெனில், கியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது எரிபொருள் சிக்கனமும் அதிகரிக்கின்றது என்பதாகும். மஹிந்திரா நிறுவனத்தின் தொழில்நுட்பவியல் நிபுணர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் மூலமும் ட்ரக் வண்டிப் பாவனையாளர்களது உண்மையான அனுபவத்தின் மூலமும் வெளிப்படுவது என்னவெனில், அவர்களிடத்தில் இருக்கும் அப்புரிந்துணர்வு உண்மையற்றது என்பதாகும். மெக்சிமோ ப்ளஸ் வண்டி சந்தைக்கு வருவது மஹிந்திராவின் ஆராய்ச்சிகள் மற்றும் சோதனைகளின் வெற்றிகரமான பெறுபேற்றின் பிரதிபலனாகவேயாகும். இதன் மூலம், "கொஞ்சம் அடித்தும் அதிக தூரம் ஓடும்" ட்ரக் வண்டியாக மஹிந்திரா மெக்சிமோ ப்ளஸ் வண்டியை எவ்வித பயம் சந்தேகமின்றி அறிமுகப்படுத்த முடியும் என இதனை இறக்குமதி செய்து விநியோகிக்கும் ஐடியல் மோட்டர்ஸ் நிறுவனம் தெரிவிக்கின்றது.



* ட்ரக் வண்டியில் பாரமேற்றாத சந்தர்ப்பங்களில் மட்டும் Fuel Switch இனை Eco Mode இற்கு மாற்றவும்.






**Rs. 885,000/=**
சகல வரிகளும் அடங்கலாக

2 வருட உத்தரவாதம் அல்லது கி.மீ 75,000

எரிபொருள் விற்பன்னர்

Mahindra
Rise.

(C7050)

IDEAL Motors
ஐடியல் மோட்டர்ஸ் தனியார் நிறுவனம்
271, காலி வீதி, கொழும்பு 03
பசிந்து: 0773 911611/ ரயன்: 0772 770266


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் இறையாண்மையை காப்பதில் சீனா முழு உறுதி

## புதிதாகப் பதவியேற்றுள்ள பிரதமர் தெரிவிப்பு



பீஜிங், மார்ச் 19

நாட்டின் இறையாண்மையைக் காக்க சீனா முழுமையாக உறுதி பூண்டுள்ளது என்று அந்த நாட்டின் புதிய பிரதமர் லீ கெகியாங் தெரிவித்துள்ளார்.

பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு லீ கெகியாங், சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதன் முறையாக செய்தியாளர்களைச் சந்தித்தார். அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''நாட்டின் இறையாண்மையைக் காக்க சீனா உறுதி பூண்டுள்ளது. சீனாவின் பொருளாதார வளர்ச்சி மந்தமாக இருப்பது குறித்து கவலைப்பட வேண்டியதில்லை. அதேபோல், சீனா ஓர் உலக சக்தியாக எழுச்சி பெறுவது குறித்தும் யாரும் அச்சமடையத் தேவையில்லை. இந்த இரு கவலைகளுமே தேவையற்றவை. நீடித்த மற்றும் ஆரோக்கியமான பொருளாதார வளர்ச்சியையும், சமூக வளர்ச்சியையும் எட்டுவதற்கான திறன் சீனாவிடம் உள்ளது. இந்த நாட்டில் 130 கோடி மக்கள் இருக்கிறார்கள்.

எனவே, நவீனமய நடவடிக்கைகளை மேற்கொள்ள நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அதை எட்டுவதற்கு, சர்வதேச அளவில் நிரந்தர அமைதிச்சூழல் தேவைப் படுகிறது.

சீனா வலுவான நாடாக உருவெடுத்தாலும், பிற நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தாது. ஏனெனில் தன் மீது பிறர் ஆதிக்கம் செலுத்துவதை ஒருவன் எப்படி விரும்ப மாட்டானோ, அதே போல் ஒருவன் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பதை நவீன காலத்தில் எங்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தில் இருந்து கற்றுக் கொண்டுள்ளோம்.

அமைதியான வளர்ச்சிக்கு சீனா உறுதிபூண்டுள்ளது. அதேபோல், நாட்டின் இறையாண்மையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் காக்க சீனா உறுதி பூண்டுள்ளது. தனது இறையாண்மையை உறுதிப்படுத்த வேண்டும் என்ற சீனாவின் விருப்பம் மற்றும் அமைதியான வளர்ச்சிக்கான ஆர்வம் ஆகிய இரண்டும் முரண்பாடான விஷயங்கள் அல்ல. உண்மையில் இவை இரண்டும் பிராந்திய ஸ்திரத்தன்மைக்கும், உலக அமைதிக்கும் இன்றியமையாதவை.''- என்று தெரிவித்தார்.(ற)

**வரலாற்றில் முதன்முறையாக**

# பதவிக் காலத்தை முடித்தது பாகிஸ்தான் நாடாளுமன்றம்



இஸ்லாமாபாத், மார்ச் 19

பாகிஸ்தான் அரசியல் வரலாற்றில் முதல் முறையாகத் தனது நாடாளுமன்றம் முழு பதவி காலத்தை முடித்துள்ளது.

பாகிஸ்தான் உருவாகி, கடந்த 66 ஆண்டுகளில் ஒரு முறை கூட தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம் முழு பதவிக் காலத்தை முடித்ததில்லை. இராணுவப் புரட்சி, ஆட்சி கவிழ்ப்பு போன்றவை மூலம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விடும். இதுவரை 12 நாடாளுமன்றங்கள் அற்ப ஆயுளிலேயே முடிந்து விட்ட நிலையில், முதன்முறையாக 13வது நாடாளுமன்ற சபை நேற்றுமுன்தினம் முழுப் பதவிக் காலத்தை முடித்ததுள்ளது.

பாகிஸ்தான் அரசியல் சட்டப்படி ஓர் அரசு பதவிக் காலம் முடிந்ததும் ஆளும்கட்சியும், முக்கிய எதிர்க்கட்சியும் இணைந்து இடைக்கால பிரதமரை தேர்ந்தெடுக்கும். தேர்ந்தெடுக்கப்படும் பிரதமரின் கண்காணிப்பிலேயே பொதுத்தேர்தல் நடத்தப்படும்.

பிரதமரை தேர்ந்தெடுப்பதில் இரு கட்சிகளுக்கும் ஒருமித்த கருத்து ஏற்படாதுவிட்டால், இரு கட்சிகளில் இருந்தும் தலா 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுப் பிரதமர் தெரிவு செய்யப்படுவார்.

தற்போது பிரதமர் தெரிவு குறித்து பாகிஸ்தான் ஆளும் கட்சியும், பிரதான எதிர்க்கட்சியும் பேச்சுகள் நடத்தி வருகின்றன: இன்று அதுகுறித்து இணக்கப்பாடு எட்டப்படாதுவிட்டால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. அமைக்கப்படும் குழு மூன்று நாள்களுக்குள் பிரதமரைத் தெரிவு செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ற)

## ஐ.நா. பெண்கள் அமைப்பின் தலைவர் பதவி விலகுகிறார்

ஜெனிவா, மார்ச் 19

ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் அமைப்பின் தலைவராக இருந்த மிசேல் பெசெலெட் பதவி விலகவுள்ளார் என்று கூறப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையால் 2010ஆம் ஆண்டு ஜூலை 2ஆம் திகதி இந்த அமைப்பு தொடங்கப்பட்டது. இந்த அமைப்பு பெண்கள் சமத்துவம் மற்றும் பெண்கள் மேம்பாட்டுக்காக அமைக்கப்பட்டதாகும். அமைப்பின் தலைவராக இதுவரை பதவி வகித்த மிசேல் பெசெலெட் தற்போது பதவி விலகவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிலி நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான இவர் ஐக்கிய நாடுகளின் பெண்கள் அமைப்பின் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார். தற்போது பதவியில் இருந்து விலக முடிவு செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, அண்மையில் சிலியின் நடத்தப்பட்ட அடுத்த ஜனாதிபதி குறித்து வாக்கெடுப்பு ஒன்றில் மிசேல் பெசெலெட் முதல் இடத்தை பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## ஈராக் கார் குண்டு வெடிப்பில் 10 பேர் சாவு; பலர் படுகாயம்

பாக்தாத், மார்ச் 19

ஈராக்கில் இடம்பெற்ற கார் குண்டு வெடிப்பில் 10 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

ஈராக்கின் தென் பகுதி நகரான பஸ்ராவிற்கு அருகாமையில் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இரண்டு குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அதை உறுதிப் படுத்த முடியவில்லை.



குறித்த பிரதேசத்தில் அதிகளவில் ஷியா முஸ்லிம்களே வசிக்கின்றனர். ஈராக்கின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பீடு செய்யும் போது பஸ்ராவில் அடிக்கடி தாக்குதல்கள் இடம்பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ற)



*ஈராக்கில் இரசாயன ஆயுத தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 25 ஆவது ஆண்டு நிறைவை அந்த நாட்டு மக்கள் அனுஷ்டித்துள்ளனர். ஈராக்கின் ஹலாப்ஜா நகரில் மக்கள் ஒன்று கூடி தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். உயிரிழந்தவர்களின் புகைப்படங்களை அவர்கள் தமது கைகளில் ஏந்தியிருந்தனர்.*

*1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சதாம் ஹுசைனின் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இரசாயன ஆயுதத் தாக்குதலில் சுமார் 5 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளும் ஆவர். (ற)*

## வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை

### குற்றஞ்சாட்டுகிறது தென்கொரியா

சியோல், மார்ச் 19

வடகொரியா கடந்த வாரம் இருமுறை ஏவுகணைச் சோதனையில் ஈடுபட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ளது தென்கொரியா.

தாம் அமெரிக்காவுடன் இணைந்து மேற்கொள்ளும் இராணுவ கூட்டுப்பயிற்சிக்குப் பதிலடியாகவே வடகொரியா ஏவுகணைச் சோதனையை மேற்கொண்டுள்ளது என்றும் தென்கொரியா மேலும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள தென் கொரிய இராணுவ அதிகாரிகள்:-

வடகொரியா கடந்த வாரம் இரு ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தென்கொரியா - அமெரிக்கா இராணுவக் கூட்டுப் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயமே இந்தச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த வாரம் வடகொரியாவின் கிழக்குப் பகுதியில் கே.என்.-02 வகை ஏவுகணைகளே வடகொரியாவினால் சோதனை செய்யப்பட்டுள்ளன. தென்கொரியா மற்றும் அமெரிக்காவை எச்சரிக்கும் நோக்குடனேயே இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. - என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தென்கொரியா - அமெரிக்க இராணுவக் கூட்டுப் பயிற்சிக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்த வடகொரியா, தென்கொரிய தலைகர் சியோல் மற்றும் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தக்கூடிய திறன் தம்மிடம் உள்ளதாக எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## ஆற்றுக்குள் பாய்ந்தது பஸ்; ஈகுவடோரில் 13 பேர் சாவு

புயுனஸ் ஏரேஸ், மார்ச் 19

ஈகுவடோரில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். 25 பேர் காயமடைந்துள்ளனர்.

குயாஸ் மாகாணத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் பாய்ந்தது என்று கூறப்படுகிறது.

மோசமான காலநிலையே விபத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவிக்கிறனர். விபத்துக் குறித்த விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (ற)

## வெடித்துச் சிதறின பட்டாசுகள் மெக்ஸிக்கோவில் 13 பேர் சாவு

மெக்ஸிக்கோ சிட்டி, மார்ச் 19

மெக்ஸிக்கோவில் இடம்பெற்ற பட்டாசு விபத்தொன்றில் 13 பேர் உயிரிழந்தனர். 154 பேர் காயமடைந்தனர்.

மத நிகழ்வு ஒன்றுக்காக வாகனத்தில் பட்டாசுகள் கொண்டு செல்லப்பட்டபோதே விபத்து இடம் பெற்றுள்ளது. விபத்தின் போது பட்டாசுகள் ஏற்றிச் செல்லப்பட்ட வாகனம் வெடித்துச் சிதறியது என்று கூறப்படுகிறது.

வாணவேடிக்கையில் பயன்படுத்தப்பட்ட பட்டாசு ஒன்று குறித்த வாகனத்தில் வீழ்ந்தமையாலேயே விபத்து இடம் பெற்றது என்று கூறப்படுகிறது.

சம்பவம் குறித்த விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற)



## எமது ஏவுகணைகளை எதுவும் தடுக்க முடியாது

### சவால் விடுகிறது வடகொரியா

பியாங்யாங், மார்ச் 19

அமெரிக்காவால் தமது ஏவுகணைகளை முறியடிக்க முடியாது என்று தெரிவித்துள்ளது வடகொரியா.

வடகொரியாவினால் காணப்படும் அச்சுறுத்தல்களை தணிக்கும் பொருட்டு, அலஸ்கா மற்றும் கலிபோர்னியா போன்ற பகுதிகளில் ஏவுகணைப் பொறிமுறைகளை மேம்படுத்த உள்ளதாக அமெரிக்கா கூறியிருந்தது.

அதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள வடகொரியா,

அமெரிக்கா நினைப்பது போல எமது ஏவுகணைகள் சாதாரணமானவை அல்ல. அணுத்திணிவுடன் தயாரிக்கப்பட்டுள்ள எமது ஏவுகணைகளை எதனாலும் முறியடிக்க முடியாது - என்று தெரிவித்துள்ளது.

(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முன்னோடி அபிவிருத்தி வங்கி DFCCயின் இணையத்தளம் மும்மொழிகளில்




**LK Domain** பதிவகத்தின் தலைவர் ஆர்.பீ.ஏக்கநாயக்க (இடது). **DFCC** வங்கியின் தொடர்பாடல் குழுமத்தின் துணைத் தலைவி ரெஷீனி விஜேசேகர மற்றும் சிரேஷ்ட சந்தைப்படுத்தல் அதிகாரி வைகுந்தவாசன் டெனிஷன்.

இணையத்தளங்கள் மூலமாக சேவைகளை பெறுபவர்களின் எண்ணிக்கை உலகளவில் அதிகரித்து வருகின்றது. அனேகர் அகலப்பட்டை அலைவரிசை சேவைகளினூடாக (mobile broadband services) நகர்வுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு விரும்புகின்றனர். இந்த நிலையில் வர்த்தக நிறுவனங்கள் பல்வகையான ஒன்லைன் சேவைகளை ஈடுபடுத்தி வருகின்றன. இன்று பயனாளிகள் தாம் அன்றாட அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் போதே மிகக்குறைந்தளவு நேரத்தில் மிகக்கூடுதலான பெறுமானங்களை தரும் தகவல்கள் மீது தமது கவனத்தை குவித்து செயற்படுகின்றனர். இந்த வகையில் உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் தகவல்களை பெற்று அடைவதற்கான மேலதிக அனுகூலங்களை இணையத்தளம் வழங்குகிறது.

DFCC வங்கி அதன் அண்மையில் நடைபெற்ற கிளை முகாமையாளர்கள் கூட்டத்தில் சிங்களம், தமிழ் மொழிகளை இணைத்த இணையத்தள சேவையை மீள அறிமுகம் செய்துள்ளது. நாட்டில் செயற்படும் அனேகமான இணையத்தளங்கள் மும்மொழித்தளங்களாக தம்மை மாற்றி ஒன்லைன் பயனாளிகள் அனைவரையும் உள்ளடக்கும் விதத்தில் தம்மை தயார் நிலைப்படுத்த வில்லை. ஆயின் DFCC இணைய தளத்திற்கு வருகை தருவோர் தமது விருப்பத்திற்குரிய மொழியைத் தெரிவு செய்து தகவல்களையோ, கொடுக்கல் வாங்கல்களையோ உலகின் எப்பகுதியிலும் செய்து கொள்ளலாம்.

வர்த்தக நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் ஆகிய அனைவருக்கும் DFCC வங்கிச் சேவைகளை ஒன்றிணைத்து வழங்கும் இணையத்தளமானது LK Domain பதிவகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள Best Web Competition இனால் அங்கீகரிக்கப்பட்டதுடன் கூட்டிணை நிறுவன இணையத்தள வகைக்கான வெண்கல விருதினையும்பெற்றிருக்கிறது. நவீனமானதும், உற்சாகம் தருவதும், பயனாளி நட்புறவுக்கானதுமான இடைமுகம் பற்றி பெருமையடையும் அதேவேளை, சமூகத்தின் அனைத்து தரப்புகளையும் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் கிடைக்கப் பெறுவதையும் அவற்றின் தரத்தை உறுதிப்படுத்துவதையும் முன்னெடுக்கும் DFCC யின் பிரயத் தனங்களுள் இந்தவகை சிறப்புகளும் ஒரு பகுதியாக உள்ளன.

இன்றைய உயிர்த்துடிப்பு மிக்க சூழலில் வெற்றிகரமாக முன்னேறிச் செல்வதற்கு வாடிக்கையாளருக்கு எல்லையில்லா வங்கிச் சேவைகளை வழங்கும் பல முயற்சிகளில் இதுவும் ஒன்று. கூட்டிணை தொடர்பாடல்

குழுமத்தின் துணைத் தலைவி ரெஷீனி விஜேசேகர தெரிவிக்கையில்,மாற்றங்களை ஏற்படுத்தி வரும் ஒரு வங்கியாக விரைந்து முன்னேறும் எமக்கு இணையத் தளமானது உண்மையில் ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

DFCC வங்கியானது, இடைவிடாத வளர்ச்சியும் தொடர்ச்சியாக இலாபத்தை பெற்றுக்கொள்வதுமான நாட்டின் மிகச்சிறந்த முன்னோடி வங்கிகளுள் ஒன்றாக விளங்குகிறது. 1955 ஆம் ஆண்டின் பாராளுமன்ற சட்டத்தினால் உருவாக்கப்பட்ட இந்த வங்கி இலங்கை யின் நிதித்துறையில் அனேகமான புதுமைகளின் முன்னோடியாக விளங்குவதுடன் முன்னோடியாக திகழும் பல நிறுவனங்களுக்கு நிதிவசதிகளையும் வழங்குகின்றது. DFCC குழுமத்தின் இன்றைய மொத்த சொத்துக்கள் 136.4 பில்லியன் இலங்கை ரூபாக்களாகும். DFCC வங்கி மற்றும் அதற்கு முற்றிலும் உரிமையான வர்த்தக வங்கியான வர்தன வங்கி ஆகிய இரண்டும் நிதிச் சேவை கள் துறையில் ஒன்றிணைந்த ஒரு வங்கியாக செயற் படுவதுடன் ஒன்றிணைந்த கிளை வலையமைப்பின் ஊடாக வர்த்தக மற்றும் தனியார் வங்கிச் சேவைகளை முழுமையாகவும், தொடர்ச்சியாகவும் வழங்கிவருகிறது.




தமிழ் மொழி இணையத்தள சேவை அறிமுகத்தை **DFCC** வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.ரவீந்திர மற்றும் மட்டக்களப்பு கிளை முகாமையாளர் எ.பிரேமிலாகாந்தி ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

# Apache RTR

## மோட்டார் சைக்கிள் அறிமுகம்



புதிய வடிவமைப்பில் கண்கவர் முறையில் அமைந்த புதிய Apache RTR ரக மோட்டார் சைக்கிள்களை இலங்கையில் TVS லங்கா பிரைவேற் லிமிடெட் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. புதிய வடிவமைப்பு மிகச் செம்மையான உயர் வினைத்திறன் வாய்ந்த மோட்டார் சைக்கிளாக இந்தப் புதிய Apache RTR ரக சைக்கிள்கள் அமைந்துள்ளன. அனைத்துப் புதிய அம்சங்களும் புதிதாக வெளிவரும் அனைத்து TVS Apache RTR 150, TVS Apache RTR 180 களில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய சைக்கிள் குறித்து TVS லங்கா பிரைவேற் லிமிடெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சம்பத் அகலவத்த கருத்து தெரிவிக்கையில், நவீன பொறியியல் நுட்பம் மற்றும் கண்கவர் வடிவமைப்பின் மூலம் நாம் தற்போது Apache RTR இனை அடுத்த நிலைக்கு கொண்டு சென்றுள்ளோம். உண்மையான ஓட்டப் பந்தய கள நிலைவரங்களை பரீட்சார்த்தமாகக் கொண்டு அனைத்து வித Apache வர்த்தக நாமத்தில் அமைந்த மோட்டார் சைக்கிள்களும் தயாரிக்கப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

உயர் வினைத்திறனை அடிப்படையாக கொண்டு ஒவ்வொரு கட்டமைப்பும், விபரமும் உதிரிப் பாகங்களும் சீர் செய்யப்படுகின்றன. ஒரு வர்த்தக நாமமாக Apache சிறந்த வரவேற்பை பெற்றுள்ளது என்றார். புதிய TVS Apache RTR மோட்டார் சைக்கிள் வகை களில், முன்பக்க ஒளி விளக்கு களில் கண்கவர் வகையில் கண்க ளைப் போன்ற வடிவமைப்பு மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பகலிலும், இரவிலும் ஒளிரக்கூடிய வகையில் அமைந்த ஒரு மிருகத்தின் கண்களை ஒத்த இந்த ஒளி விளக்குகள், நவீன LED மின்குமிழ் தொழில்நுட்பத்தில் அமைந்துள்ளன.

சைஸ்லெட் மற்றும் நுணுக்கமான தாங்கி காப்புறை போன்றனவற்றில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றமானது, காற்றியக்கவியல் உந்துசக்தியை வழங்கக்கூடிய வகையில் அமைந்துள்ளதுடன், என்ஜின் வெப்பமடைதலையும் குறைக்கும் வகையில் அமைந்துள்ளது, மோட்டார் சைக்கிள் ஓட்டப் பந்தய வீரர்கள் அதிகளவில் எதிர்பார்க்கும் அதிகளவு வினைத்திறன் சக்தி மற்றும் பயன்படுத்தக்கூடிய வலு மற்றும் குறுகிய காலப்பகுதியில் செயற்படுவது போன்றன அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக இந்த புதிய Apache RTR மோட்டார் சைக்கிள் அமைந்துள்ளது.

டிஜிட்டல் கொன்சோல் கொண்ட ஸ்போர்ட்ஸ் தோற்றத்தை வழங்குவதுடன், நவீன வடிவமைப்பு மற்றும் ஓட்டப்பந்தையத்துக்கு விரும்பப்படும் கார்பன் பைபர் கியுஸ் போன்றவற்றைக் கொண்டமைந்துள்ளது. நீல நிறத்திலான [illegible] வடிவமைக்கப்பட்டுள்ளது. (த)

# 'கொமர்ஷல் கிரெடிட்' தொகுதிக்கடன் பத்திரங்கள் மிகை விநியோகம்

கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் ஒவ்வொன்றும் ரூபா 100/- பெறுமதியான தொகுதிக் கடன் பத்திர வழங்கலானது, மிகை விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மிகவும் எதிர்பார்க்கப்பட்டிருந்த 2,500,000 தொகுதிக்கடன் பத்திரங்களுக்கான இவ் வழங்கல் 2013 ஜனவரி 23ஆம் திகதி ஆரம்பமானது. மொத்தப் பெறுமதி ரூபா 500 மில்லியனாகும் விதத்தில் மேலும் 2,500,000 தொகுதிக்கடன் பத்திரங்களை வழங்குவதற்கான விருப்பத் தெரிவையும் இந்த வழங்கல் கொண்டிருந்தது.

கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஷான் எகொடகே இது குறித்து கூறுகையில், இந்த கடன் பத்திர வழங்கலின் சிறப்பான செயற்பாடு தொடர்பில் நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். அதேநேரம், இலங்கைப் பொதுமக்களும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையின் புலம்பெயர் சமூகமும் கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கைக்காக அவர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம்.

மேலும் அதிகமான மக்களைச் சென்றடைவதற்காக நாம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற முன்முயற்சிகளில் ஒரு அங்கமாக பங்கெடுப்பதற்கான தனிச் சிறப்புமிக்க வாய்ப்பினை முதலீட்டாளர்களுக்கு இந்த தொகுதிக் கடன் பத்திர வழங்கல் அளிக்கின்றது. இதன் காரணமாக அவர்களது வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

பிணையற்ற (Unsecured), பிரதியீடான (Subordinated), மீட்கக்கூடிய (Redeemable) விதத்திலமைந்த ஐந்து வருடங்களுக்கான இத்தொகுதிக் கடன் பத்திரங்கள் கொழும்பு பங்குச் சந்தையின் இரண்டாம்நிலை தளத்தில் பட்டியலிடப்படுவதுடன், காலாண்டு அடிப்படையில் 20% வட்டித் தொகை செலுத்தப்படும். இத் தொகுதிக் கடன் பத்திரங்கள் 21.55% வருடாந்த விளைவு வீதத்தை வருமானமாக உழைத்துத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு'

## பேஸ்புக்கில் ஆரம்பம்

நெல்லை, மார்ச் 19

தமிழகத்தில் இடம் பெற்று வரும் மாணவர்கள் போராட்டத்தை ஒருங்கிணைக்கும் நோக்கில் 'பேஸ்புக்கில்' கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு' என்ற அமைப்பினரே இதனை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை இராணுவத்தினரால் கொடூரமாகக் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் படத்துடன் குறித்த பேஸ்புக்கின் முகப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பேஸ்புக் பக்கத்தில் கடந்த இரு தினங்களில் மட்டும் 8 ஆயிரம் பேர் இணைந்துள்ளனர். 7 ஆயிரம் பேர் இத்தளத்தை பார்வையிட்டுள்ளனர்.

நாளுக்கு நாள் தீவிரம் அடைந்து வரும் மாணவர்கள் போராட்டத்தை ஒருங்கிணைத்திட மாணவர்களுக்கு குறித்த பேஸ்புக் களமாக அமைந்துள்ளது.

# முருகேசு சுவாமியின் 16 ஆம் ஆண்டு குருபூசை

வடமராட்சி, மார்ச் 19

தவத்திரு வே.முருகேசு சுவாமியின் 16 ஆம் ஆண்டு குருபூசை நாளை புதன்கிழமை தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிஷேக, பூசை வழிபாடுகளுடன் குருபூசை ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறும்.

அன்னைதாசன் கவிமணி க.ஆனந்தராசாவின் இசைச் சொற்பொழிவுடன், தொடர்ந்து 63 நாயன்மார் குரு பூசையுடன் நிறைவுபெறும்.

முருகேசு சுவாமிகளின் ஞாபகார்த்தமாக கடந்த வெள்ளிக்கிழமை செல்வச் சந்நிதி ஆலயத்தில் வருடாந்த சங்காபிஷேகமும், சண்முகார்ச்சனையும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-8)


## இந்தியாவில் உயர்கல்வி

**ENGINEERING COURSES**
- Aeronautical Engineering
- Electronics and Communication
- Mechanical Engineering
- Civil Engineering
- Information Technology
- Textiles Technology
- Textile Chemistry

**SCIENCE DEGREES**
- Bsc Microbiology
- BSc Biotechnology
- BSc Genetics
- BSc Nursing
- BSc Computer Science
- BSc Physiotherapy
- BSc Fashion and Apparel Design

❑ Bachelor of Computer Application (BCA), ❑ Business Management (BBM), ❑ Business Administration (BBA), ❑ Hotel Management (BHM), ❑ BA Journalism, ❑ Textiles and Fashion Designing, ❑ B.Com, ❑ BSc Maths,

ANNA ENGINEERING UNIVERSITY, BANGALORE UNIVERSITY, PERIYAR UNIVERSITY affiliated Colleges

* இந்தியாவில் சேலம், பெங்களூர் இல் உள்ள சிறந்த கல்லூரிகளில் அனுமதி.
* Engineering Courses 4 வருடம், மற்றய Degreeகள் 3 வருடங்கள்.
* எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வி கற்கின்றனர்.
* Degree ஐ பூர்த்தி செய்யும் மாணவர்கள் எதிர்காலத்தில் UK, CANADA, USA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு குடும்பம் சகிதம் Permenant Residental Visa பெறுவதற்கான வாய்ப்புண்டு.

Scholars Information Center
# 01, Vaverset Place,
Wellawatte,
Colombo 06.
Call : 0777-767818

மார்ச் 20ம் திகதி (புதன்கிழமை) எம்மை யாழ்பாணத்தில் சந்திக்க முடியும்.

MBBS
LUGANSK MEDICAL UNIVERSITY (Ukraine)
புலமைப்பரிசில் அனுமதி பெறமுடியும்

(34637)(6,7)


## கல்விமாணி பட்டக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

தேசிய கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் கல்வித் துறையினால் நடத்தப்படும் 2013 க்கான கல்விமாணிப் பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச அல்லது அரச அனுமதி பெற்ற பாடசாலைகளில் ஆசிரியர் சேவையிலுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்று ஆசிரியர் கலாசாலைப் பயிற்சி அல்லது தேசிய கல்வி டிப்ளோமா அல்லது பல் தொழில் நுட்ப நிலைய மனைப்பொருளியல் டிப்ளோமா அல்லது அரச அங்கீகாரம் பெற்ற விவசாய டிப்ளோமா அல்லது உயர்தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட உயர்தேசிய ஆங்கில டிப்ளோமா எனும் சான்றிதழ்களைக் கொண்டவர்கள் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

தகுதியானவர்கள் எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் [illegible]


## மரண அறிவித்தல்

### புவனேஸ்வரி திருநாவுக்கரசு
### (சின்னம்மா)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், புத்தூரை வதிவிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி திருநாவுக்கரசு 17.03.2013 ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான முத்துசாமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத்துசாமி திருநாவுக்கரசு (முன்னாள் தலைவர்-புத்தூர் கிராம சபை, முன்னாள் தலைவர், அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) அன்பு மனைவியும், நகுலேஸ்வரனின் (U.K) அன்புத் தாயும், சாரதாதேவியின் (U.K) அன்பு மாமியும், மகேஸ்வரியின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற துரைராஜா (சினிமாஸ் லிமிட்டெட்) மற்றும் கணேசன் (முன்னாள் உப அதிபர், வசாவிளான் ம.ம.வி), காலஞ்சென்ற சிற்றம்பலம் (மீசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கிந்திசிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி.நகுலேஸ்வரன் (மகன்),
து.இராகினி (பேறாமகள்-ஆசிரியை-அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை).

புத்தூர் மேற்கு, புத்தூர்.
தொ.பே:0213007405

(34697)(10,6,7)


# இலங்கையின் உறுதிப்பாட்டை தகர்க்கவே போர்க்குற்றச்சாட்டு

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க கொதிப்பு



கொழும்பு,மார்ச்19

இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படுகின்ற போர்க் குற்றச்சாட்டுக்கள், நாட்டின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டைத் தகர்க்கும் நோக்குடனானவை என்று ஜனாதிபதியின் மனித உரிமை விவகாரங்களுக்கான சிறப்புத் தூதரும் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியின்போது அவர் இவ்வாறு கூறினார்.

ஜெனிவா தீர்மான விடயத்தில் இந்தியா என்ன நிலைப்பாட்டை எடுக்கும் என்பது எனக்குத் தெரியாது.

இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைக்கும் அமைப்புகள் விடுதலைப்புலிகளுடன் கைகோர்த்துச் செயற்பட்டன.

அமெரிக்காவால் கொண்டுவரப்படவுள்ள இலங்கை குறித்த தீர்மானத்தின் இறுதி வடிவம் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே இலங்கையினால், அது குறித்து ஒரு முடிவுக்கு வரமுடியும் .

கடந்த மார்ச் மாதத்தில் நாங்கள் என்ன நிலைப்பாட்டில் இருந்தோமோ அந்த நிலையில்தான் இன்றும் இருக்கிறோம். எனவே இவ்வாறான தீர்மானம் தேவையற்ற ஒன்று என்பது தான் எமது நிலைப்பாடு.

இதுவரை அமெரிக்காவுடன் முறைப்படியான கலந்துரையாடல் எதனையும் நாம் மேற்கொள்ளவில்லை. - என்றார். (ச)

# மக்களை வாழ வைத்த பின்பே அரசியல் தீர்வுத் திட்டம்

## மீள்குடியமர்த்துகை அமைச்சர் தெரிவிப்பு

மக்களை வாழ வைத்ததன் பின்னரே அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து சிந்திப்போம் என்று மீள்குடியமர்த்துகை அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்தார்.

மக்கள் வாழ முடியாத சூழ்நிலையில் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை என்று அவர் கூறினார். மக்களை மீள்குடியமர்த்தி அவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தியதன் பின்னர், அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதே எமது நோக்கமாகும் என்று அவர் மேலும் கூறினார். (ச)

# மின் தடைப்பட்டிருக்கும்

வீதி அகலிப்புப் பணிகளுக்காக மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதால் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

இன்று செவ்வாய்க்கிழமை சங்கரத்தை, அராலி தெற்கு, வடக்கு, கிழக்கு, மத்தி, யாழ்ப்பாணக் கல்லூரிப் பிரதேசம், வட்டு பொலிஸ் நிலையப் பகுதி ஆகிய இடங்களிலும் நாளை புதன்கிழமை குஞ்சர் கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித் துறை, தொண்டமானாறு, உடுப்பிட்டி ஆகிய இடங்களிலும்- வியாழக்கிழமை அச்சுவேலிப் பிரதேசத்தின் இடைக் காடு, தம்பாலைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (3)

# மகளிர் தின விழா

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்குழு இணைந்து நடத்தும் மகளிர் தின விழா இன்று செவ்வாய்க்கிழமை தியாகி அறக்கொடை நிறுவனத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ.மாவட்டச் செயலக பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் உதயனி நவரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக யூ.என்.எச்.சி.ஆர். யாழ். தலைமை அதிகாரி சொய்ரா றுசிபேவா, புங்குடுதீவு வட இலங்கை சர்வோ தய அறங்காவலர் பொன் னம்பலம் ஜமுனாதேவி, ஓய்வு பெற்ற யாழ்.மாவட்ட விளை யாட்டு உத்தியோகத்தர் திருமதி ஜே. ரூபசிங்கம் ஆகி யோர் கலந்து கொள்வர். (3-13)


## அல்சேஷன் நாய் விற்பனைக்கு

1½ வயது நிரம்பிய அல்சேஷன் ஆண் நாயும் 1½ வயது நிரம்பிய ஜேர்மன் சப்பேட் பெண் நாயும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: A.G செல்வம்,
107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
(34698)(6.7.11)

## தேவை

பெண் தாதிய உத்தியோகத்தர் தேவை.
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
LAVA HOSPITALS
75, Temple Road, Jaffna.
(c/7123)(6.7.11)

## விற்பனைக்கு

HX-XXXX இலக்கமுடைய Town Ace white colour, Auto petrol KR 42 நல்ல நிலையிலுள்ளது.
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772247875
(34688(6.7.11)

## கடை வாடகைக்கு உண்டு

நெல்லியடி சந்திக்கு அருகில் கொடிகாமம் வீதியில் சகல வசதிகளுடன் இணைந்த இரு கடைகள் வாடகைக்கு உண்டு. (பழைய மக்கள் வங்கிக் கட்டடம்) தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல:
0212263208
(34699)(6.7.11)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் முன்னாள் உப அதிபராகக் கடமையாற்றிய பாலு திலகராசா அவர்கள் கடந்த16.03.2013அமரத்துவமடைந்துள்ளார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
(34695)(45,6,7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர்கள் தொடர்ந்து போராட வேண்டும்

ஜெனீவாவில் இருந்து
■ ஆர்.சிவராஜா

2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் எட்டாம் திகதி கொலன்னாவை முல்லேரியாவில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரங்களுக்கான ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர எம்.பியின் சகோதரி சுவர்ணா குணரத்ன ஜெனிவாவில் வைத்து உதயனுக்கு வழங்கிய செவ்வி....

''சிங்களவர்களுக்கே நீதி கிடைக்காத இலங்கையில் தமிழ் மக்களுக்கு எங்கே நீதியும், நியாயமும், கிடைக்கப் போகிறது. என்றாலும் எனது சகோதரனின் படுகொலைக்கு நீதி ஒரு நாள் கிடைக்கும்'' என்று கண்ணீருடன் சொல்கிறார் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் சகோதரி சுவர்ணா குணரத்ன.

ஜெனிவாவில் , ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை கட்டடத்தில் அவரை நாம் சந்தித்தோம்.

அவரின் கருத்துக்கள் இதோ...

**கேள்வி:-** இலங்கையில் பாரத கொலை தொடர்பில் விசாரணைகள் நடக்கின்றன. இருந்தும் நீங்கள் நியாயம் கேட்டு இங்கு வரக் காரணம் என்ன?

**பதில்:-** இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இப்போது பாருங்கள்... பாரத கொலை நடந்தது முதல் இன்று வரை நிலைமைகளை பாருங்கள்... பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்புடன் துமிந்த சில்வா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அரச அனுசரணையுடன் எல்லாம் நடந்தது. பாதுகாப்பு செயலாளர் சுமார் ஆறு மணி நேரம் வைத்தியசாலையில் இருந்ததாக தகவல் உள்ளது.

பின்னர் யாருக்கும் தெரியாமல் துமிந்தவை சிங்கப்பூருக்கு அனுப்பினர். அவரைப் பாதுகாக்க அன்றிலிருந்து இன்று வரை பெரிய அளவில் முயற்சிகள் நடந்தன. நாங்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டுத்தான் இதனை வழக்கு வரை கொண்டு சென்றோம். இவ்வளவு நடந்த பின்னரும் இப்போது ஒன்றுமே நடக்காததுபோல் இலங்கை வந்துள்ள அவர் வைத்தியசாலையில் சொகுசாக இருந்துகொண்டு சிகிச்சை பெறுவதுபோல் பாசாங்கு செய்கிறார்.

அவருக்கு எந்தவொரு மருந்தையும் கொடுக்கவில்லை. எங்களுக்கு அந்தத் தகவல் கிடைத்துள்ளது. நாடித்துடிப்பு மட்டும் சோதிக்கப்படுகின்றது.

ஜூலை அளவில் அரசியலுக்கும் வரப்போகின்றாராம். நன்றாக இதனை பாருங்கள். ஜெனிவாவில் ஒரு தீர்மானம் ஒன்று வரும்போது கண்கட்டு வித்தை செய்வதுபோல் நடக்கும் இலங்கை அரசு, துமிந்தவுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பது போல் காட்டுகின்றது.

இலங்கை அரசிடம் நாம் நீதியை எதிர்பார்க்கவில்லை. உலகத்திடம் நாம் இவற்றை சொல்ல வந்தமைக்கு பல நியாயங்கள் எமது பக்கம் உள்ளன. நவநீதம்பிள்ளை ஆணையாளருக்கும் நாம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளோம்.

**கேள்வி:-** மனித உரிமைகள் பேரவை இதற்குச் சாதகமான பிரதிபலிப்பைத் தருமென எதிர்பார்க்கின்றீர்களா?

**பதில்:-** நிச்சயமாக. நாங்கள் கடந்த முறை இதே போல் முயற்சிகள் எடுத்தோம். கடந்த முறை இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்த நாடுகளுக்கு நாம் கடிதங்களை அனுப்பினோம். கனடா பிரதமருக்கு நாம் கடிதம் அனுப்பி முறையிட்டோம். அவர் எமக்கு பதிலும் அனுப்பினார்.

கனடா வெளிவிகார அமைச்சகத்துக்கு இது தொடர்பில் பணிப்புரைகளை விடுப்பதாக அவர் கூறினார். எமக்கு நீதி கிடைக்கும் என்று நாம் உறுதியாக நம்பி இந்த வேலைகளைச் செய்கிறோம்.

**கேள்வி:-** ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் பாரத லக்ஷ்மனின் சகாக்கள் அதாவது சிரேஷ்ட உறுப்பினர்கள் உங்களது இந்த போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குகிறார்களா?

**பதில்:-** அமைச்சர்கள் கதைக்க பயத்துடன் உள்ளனர். அவர்களுக்கு கதைக்க முடியாத நிலைமை உள்ளது. இருந்தும் தனிப்பட்ட முறையில் சில அமைச்சர்கள் எங்களுடன் தொடர்பில் இருந்து இது அநீதி என்பதனை கூறியுள்ளனர். எங்களுக்குத் தேவையான ஆவணங்கள் தர முடியுமென சில அமைச்சர்மார் எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

இப்போது சுதந்திரக் கட்சியின் செயலாளரது நிலைமையை பாருங்கள். உயிர் சம்பந்தமான பயம் இருப்பதாக அவர் கூறியுள்ளார். நாட்டை ஆட்சி செய்யும் ஒரு கட்சியின் செயலாளருக்கே உயிர் பயம் என்றால் மற்றவர்களின் நிலைமை என்ன?

**கேள்வி:-** இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படப் போகிறது. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?

**பதில்:-** அதனை நாங்கள் ஏற்கிறோம். மனித உரிமைகள் அங்கு மீறப்படவில்லை என்று நாம் கூறினால் எம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வதாகவே இருக்கும். தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். தமிழர்களுக்குத்தானே அநீதி என்று நாங்கள் பேசாமல் இருந்தோம். இப்போது எங்களுக்குத் தெரிகிறது.

இப்படிப் பேசும் எங்களை அல்லது இங்கு முறையிட வருபவர்களை தேசத் துரோகி என்கிறார்கள். யார் தேசத் துரோகிகள்? மனித உரிமைகளை நிலை நாட்டாத ஆட்சியாளர்களே தேசத்துரோகிகள்.

தமிழர்கள், சிங்களவர்கள் என்று இப்போது அது முஸ்லிம் மக்கள்வரை வந்துள்ளது. புதுமைப்பட வேண்டாம். அடுத்த ஜெனிவா அமர்வுக்கு முஸ்லிம் மக்களும் சிங்கள மக்களும் வந்து மனித உரிமை மீறல்கள் குறித்துப் பேசுவார்கள். அரசின் விசாரணைகளில் நம்பிக்கை இல்லாதமையால்தான் இப்படியான தேவை உள்ளது. இலங்கை மக்களுக்காக அமெரிக்கா கொண்டு வந்துள்ள இந்தப் பிரேரணை வரவேற்கப்பட வேண்டும்.

**கேள்வி:-** பெரும்பான்மையான இனத்தவரான நீங்கள் நீதி கோரி இங்கு வந்துள்ளீர்கள். சிறுபான்மை மக்களின் நீதிக் கோரிக்கைகளை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பதில்:-** அவர்களின் கோரிக்கைகள் முற்றும் நியாயமானவை. சிங்கள மக்களான எங்களுக்கே நீதிக்காக இவ்வளவு போராட வேண்டியுள்ளது. தமிழ் மக்கள் நீதிக்கான தங்களது போராட்டத்தைத் தொடர வேண்டும். நாட்டில் மாற்றம் ஏற்பட வேண்டும் .

**கேள்வி :-** மாற்றம் என்று நீங்கள் குறிப்பிடுவது ஆட்சி மாற்றமா?

**பதில்:-** ஆமாம்.இப்போது போகும் நிலைமை மாற வேண்டும். ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழு அவர்களால் நியமிக்கப்பட்டது. அதன் சிபாரிசுகளில் 99 வீதமானவை நிறைவேற்றப்பட்டுள்ளதாக கூறுகின்றனர். இவை நம்பும்படியானவையா? இலங்கையைக் கேலிப் பொருளாக்கியுள்ளனர். இதற்கு ஆட்சியாளர்களே காரணம். எனவேதான் இந்த நிலைமை மாறவேண்டுமெனக் கூறுகிறேன். ★

# UNCTAD தகவல், பொருளாதார அறிக்கையில் முதன் முதலாக இலங்கையும் சேர்ப்பு

தகவல்தொழில்நுட்ப துறையில் எடிசலாட் நிறுவனம் வழங்கி வரும் பங்களிப்பு காரணமாக UNCTAD தகவல், பொருளாதார அறிக்கை-2012 இல் இலங்கையும் முதல் தடவையாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

இன்று உலகளாவிய ரீதியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையானது சமூகங்களில் மாற்றத்தை ஏற்படுத்திய வண்ணமுள்ளது. வியாபார மற்றும் அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் (UNCTAD) தகவல் பொருளாதார அறிக்கையானது, இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதில்




பங்களிப்பை வழங்கியிருந்த தேர்வு பற்றிய ஆய்வுகள் மற்றும் பொருளாதார நிலைகள் போன்றவற்றை குறிப்பிட்டு வெளியாகிறது.

2012ஆம் ஆண்டில் இந்த அறிக்கையில் மென்பொருள் கட்டமைப்பு விருத்தியும் பொருளாதாரத்தில் அவற்றின் பங்களிப்பு குறித்தும் ஆராயப்பட்டிருந்தது. யுத்தம் நிறைவடைந்த சூழ்நிலையில் இலங்கையில் வேகமாக வளர்ச்சியடைந்து வரும் துறைகளில் மென்பொருள் துறையின் வளர்ச்சி முக்கிய பங்கை வகிக்கிறது.

உள்நாட்டுச் சந்தையில் புதிய வாய்ப்புகள், கையடக்க தொலைபேசிகள், புரோட்பாண்ட் இணைய சேவைகள் மற்றும் ஸ்மார்ட் போன் வகை சாதனங்கள் போன்ற பிரிவுகளில் அதிகளவில் எழுந்த வண்ணமுள்ளன.

2012ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இலங்கை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள உயர்ச்சி மற்றும் மக்களின் ஆளுமைகள் மற்றும் அறிவார்ந்த திறன் போன்றவற்றுக்காக பட்டிய்ல்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதியும், மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கான இணைப்பாளருமான சுபினே நாண்டி கருத்து தெரிவிக்கையில், இந்த அறிக்கையானது, ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 194 அங்கத்துவ நாடுகளைச் சேர்ந்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சியை இனங்கண்டு பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் – மன்னார்: 0232222052 'மீசாலை கஜாவன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

# எல்லாப் பிழையும் எங்களிலைதான்

வீதியில் ஏதோ ஒரு அலுவலாக நீங்கள் சென்று கொண்டிருக்கிறீர்கள். மாலை நேரம் என்பதால் வாகன நெரிசல் அதிகம். ஒரு சந்தியில் எதிர்பாராத விதமாக முன்னால் வந்த வாகனம் ஒன்று உங்களை மோதித் தள்ளி விடுகிறது. என்ன செய்வீர்கள்?

எடுத்த எடுப்பிலேயே துள்ளிக் குதித்து, உங்களுக்கும் உங்களது வாகனத்துக்கும் உண்டான பாதிப்புகளுக்கு நஷ்டஈடு தராவிட்டால் மோதிய வாகனத்தை ஒரு அங்குலம் கூட நகர விடமாட்டீர்கள். போதாக்குறைக்கு உங்களுக்கு 'சப்போர்ட்டாக' விடுப்புப் பார்க்கும் கூட்டமும் 'ஆமா' போட்டபடி இருக்கும். கூட்டத்தையும் உங்கள் கூச்சலையும் கண்டு பயந்து, தன்னில் பிழை உண்டோ இல்லையோ உரிய காசைத் தருவதாக வாகனத்தின் சாரதி சொல்லும் நிலையை உருவாக்கி விடுவீர்கள். அவ்வாறில்லாமல் சாரதி சண்டித்தனம் செய்தால் பொலிஸுக்கு 'போன்பண்ணி' விட்டுத்தான் மறுவேலை பார்ப்பீர்கள்.

இவ்வளவும் சாதாரணமானவர்களின் வாகனம் உங்களை மோதினால் மாத்திரமே. தப்பித்தவறி உங்களைப் பந்தாடியது சீருடை தரித்த வாகனம் என்றால் நிலைமையே தலைகீழாக மாறிவிடும். அடிபட்டு விழுந்து கால் கை முறிந்தால் கூட "ஐயோ, அம்மா!" என்று கத்துவதற்குப் பதிலாக, முகத்தில் அசடு வழிய, "சொறி சேர்! தெரியாம நடந்து போச்சுது" என்று நீங்கள் பிழையை உங்கள் தலையில் போட வேண்டும். இல்லாவிட்டால் சீருடையினரின் 'கவனிப்புக்கு' ஆளாக வேண்டியிருக்கும். வழமையாக சேற்றில் சறுக்கி விழுந்தால் கூட வேடிக்கை பார்க்க விரைந்து கூட்டமாக வருபவர்கள், உங்களை மோதியது சீருடையின் வாகனம் என்று தெரிந்ததும் எதுவுமே நடவாதது போல தம் பாட்டில் தத்தம் அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கி விடுவார்கள்.

பின்னர் யார் உங்களை அடித்து விழுத்தினார்களோ அவர்களே தங்களது வாகனத்தில் உங்களை அலுங்காமல் குலுங்காமல் ஏற்றிச் சென்று வைத்தியசாலையில் அனுமதிப்பார்கள். "பார்த்தீங்களே! அவங்கள் எவ்வளவு நல்லவங்கள். அடிபட்டுக் கிடந்த ஆளை ஆஸ்பத்திரியில கொண்டு போய் விடுறாங்கள்" என்று இலவசமாக நற்சான்றுப் பத்திரத்தை சீருடையினருக்கு பார்த்தவர்களது வாய்கள் வழங்கும்.

வைத்தியசாலையில் மருத்துவரோ, பொலிஸோ, ஊடகவியலாளரோ "விபத்து எப்படி நடந்தது?" என்று உங்களிடம் கேட்டால்,

"மோட்டார் சைக்கிள்ல போய்க் கொண்டிருக்கேக்க, நாங்களாவே காத்தோட மோதி விழுந்து போனம். ஒருத்தரும் எங்களை மோதேல்ல. அப்படி மோதின வாகனத்தையும் நாங்கள் காணேலை. பிழை எங்களிலை தான்" என்று திரும்பத் திரும்ப கிளிப்பிள்ளை போல நீங்கள் சொல்ல வேண்டியிருக்கும். தற்செயலாக ஏதாவது ஏடாகூடமாக சொல்லி விட்டீர்களானால், நீங்கள் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் விடுதிக்கு வெளியே கண்காணித்தபடி இருக்கும் பத்துச் சோடி விழிகளின் தீராக் கோபத்துக்கு ஆளாக நேரிடும்.

ஏனெனில் ஜனநாயகம் பாலாகவும் தேனாகவும் சொரிந்தோடும் இலங்கை மணித்திருநாட்டில் இதுவெல்லாம் சகஜம்.

# ஜெனிவாவில் வெல்லப் போவது யார்?

ஜெனிவாவிலிருந்து
■ குகா

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடர் இறுதிக்கட்டத்துக்கு வந்துவிட்டது.

இந்தக் கூட்டத் தொடரில் ராஜதந்திரக் களமாக மாறியுள்ள இலங்கை -அமெரிக்க-இந்தியா களமும் இந்த வாரத்தில் முடிவுக்கு வருகின்றது.

இந்த வாரம் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள இலங்கை விவகாரம் தொடர்பான களத்துடன் கூட்டத்தொடர் முடிவுக்கு வந்துவிடும்.

இலங்கைக்கு எதிரான அமெரிக்க பிரேரணை நிறைவேறுவதுடன், 24 ஆவது கூட்டத்தொடரை நோக்கி காத்திருக்க வேண்டியதுதான்.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போர்க் காலகட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக் கூறும் சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை என்ற பொறிமுறையை உருவாக்குவதற்கு கால்கோள் இடுவதுடன் கூட்டத் தொடர் முடிவு பெறவிருக்கின்றது.

அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணை பெரும்பாலான நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறி தீர்மானமானாலும் உடனடியாக அந்தப் பொறிமுறை உருவாக்கப்படமாட்டாது.

அந்தப் பொறிமுறையை உருவாக்கும் பொறுப்பு அந்தத் தீர்மானம் மூலம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிடம் ஒப்படைக்கப்படும்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 24 ஆவது கூட்டத் தொடரில் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையால் சமர்ப்பிக்கப்படும் அந்த இடைக்கால அறிக்கையூடாக அந்தப் பொறிமுறை அறிவிப்பு வெளிவரும் என ஐ.நா.தகவல்கள் உறுதி செய்கின்றன.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகியது. அந்த கூட்டத்தொடர் எதிர்வரும் 22 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்து விடும்.

கடந்த வருடம் மார்ச் மாதம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவால் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணை 24 உறுப்புநாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு அத்தீர்மானம் மூலம் இலங்கை கேட்கப்பட்டிருந்தது.

அத்தீர்மானத்தை உதாசீனம் செய்யும் வகையில் இலங்கை செயற்பட்டதன் காரணமாக கடுமையான தொனியில் மீண்டும் இம்முறை பிரேரணை அமெரிக்காவால் கொண்டு வரப்பட்டுள்ளது.

முதலில் அந்தப் பிரேரணை உறுப்பு நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. மீண்டும் கடந்த 8 ஆம் திகதி ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 22 ஆம் அறையில் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை அமெரிக்கா கூட்டியது. அக்கூட்டத்தில் உறுப்புநாடுகளின் ராஜதந்திரிகளும் அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

பேரவையின் அமெரிக்கா பிரதிநிதி எய்லின் டொனாகோ தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் எஸ்.கஜேந்திரன் ஆகியோரும் பங்குபற்றினர். புலம்பெயர் தமிழர் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பேரவையின் உறுப்புநாடாக இல்லாத சீனா, ஈரான், ரஷ்யா ஆகிய நாடுகளும், உறுப்பு நாடான பாகிஸ்தானும் பிரேரணைக்கு எதிராகக் குரல் கொடுத்தன. இலங்கை உறுப்பு நாடாக இல்லாதபோதும், கூட்டத்தில் கலந்துகொண்டு பிரேரணையை எதிர்த்துப் பேசிவிட்டு வெளியேறிவிட்டது.

ஆசிய ஆபிரிக்க, தென்அமெரிக்கா, கனடா, பிரித்தானியா போன்ற நாடுகள் பிரேரணையை ஆதரித்துப் பேசியதுடன் பிரேரணை மேலும் கடுமையாக இருக்க வேண்டும் என்றும் கூறின. திருத்தங்களை முன்வைக்கப் போவதாக அந்த நாடுகள் தெரிவித்தன. திருத்தங்கள் முன்வைக்கப்பட்டால் அவை உள்வாங்கப்படும் என அமெரிக்கா கூறியது.

இந்த கூட்டத்துக்கு சிலநாள்களுக்கு முன்னர் சனல் 4 தயாரித்த "நோ பயர் சோன்" என்ற விவரணப் படம் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு காண்பிக்கப்பட்டது. அந்தப் படத்தை இலங்கை கடுமையாக ஆட்சேபித்த போதும், ஐ.நா.மனித உரிமைகள் பேரவை இலங்கையின் ஆட்சேபத்தை நிராகரித்ததை அடுத்து, படம்திரையிடப்பட்டிருந்தது. நாடுகடந்த தமிழீழ அரசின் ஆதரவுடன் இந்தப் படம் அங்கு காண்பிக்கப்பட்டது.

## "நோ பயர் சோன்" பலரின் நிலைப்பாட்டை மாற்றியது

அந்தப் படத்தைப் பார்த்த பெரும்பாலான உறுப்புநாடுகளின் பிரதிநிதிகள் மனம் இளகி கவலை கொண்டனர். அந்தப்படத்தைப் பார்த்த பின்னரே பல நாடுகள் தமது நிலைப்பாட்டை மாற்றி பிரேரணைக்கு ஆதரவு வழங்க முன்வந்தன.

திருத்தப்பட்ட அமெரிக்காவின் பிரேரணை கடந்த 14 ஆம் திகதி பேரவையில் உத்தியோக பூர்வமாக சமர்பிக்கப்பட்ட நிலையில், இலங்கையும் அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டு தமது ராஜதந்திர நகர்வை ஆரம்பித்தன. பேரவையின் ஓர் அறையில் இலங்கைக் குழுவின் தலைவர் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழுவினர் ராஜதந்திரிகளை சந்தித்துத் தமது நிலைப்பாட்டை விளக்கினர்.

அதேபோன்று மற்றுமொரு அறையில் பேரவையின் அமெரிக்க பிரதிநிதி எய்லின் டொனாகோ தலைமையிலான குழுவினர் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர். கடந்த வருட தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்ட எதனையும் இலங்கை நிறைவேற்றவில்லை. அதன் காரணமாக இம்முறை இந்தப் பிரேரணை கொண்டு வரப்படுகின்றது என்று அமெரிக்கா உறுப்புநாடுகளுக்கு விளக்கம் அளித்தது. இவற்றுக்குப் புறம்பாக தமிழர் அமைப்புக்கள் அரசசார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் வெவ்வேறு அறைகளில் உறுப்புநாடுகளுக்கு இலங்கை நிலவரம் குறித்து விளக்கமளித்து பிரேரணைக்கு ஆதரவு கோரின.

இவ்விதம் மும்முனையாக ஆதரவு தேடும் படலம் இடம் பெற்றுக் கொண்டிருந்த போது, பேரவைக்கு வெளியிலும் காய்நகர்த்தல்கள் இடம்பெற்றன.

அமெரிக்க ராஜாங்க திணைக்கள அதிகாரிகளும், உறுப்புநாடுகளின் தலைவர்களுடன் பேசி ஆதரவைத் திரட்டும் பணியில் ஈடுபட்டனர் என ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோன்று இலங்கை அரசும் உறுப்பு நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டதாகத் தகவல்கள் வெளியாகின.

பிரேரணை மீது வாக்கெடுப்பு கோருவதில்லை என இலங்கை அரசு முன்னர் கூறிவந்தது. ஏகமனதாக பிரேரணை நிறைவேறினால் தமக்கு ஆதரவாளர்கள் யார் என்பதை கண்டறிய முடியாது என்பதால் வாக்கெடுப்பைக் கோர இலங்கை முடிவு செய்துள்ளதாக கூறப்படுகின்றது.

பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டால் மதில் மேல் பூனையாக இருக்கும் இந்தியா போன்ற நாடுகளின் போக்கு வெளிச்சத்துக்கு வராமல் போய் விடும் என்று இலங்கை கருதுவதாகக் கூறப்படுகின்றது. இலங்கை, பேரவையில் உறுப்புநாடாக இல்லாததால் வாக்கெடுப்பை இலங்கை கோர முடியாது. அதன் காரணமாக பாகிஸ்தான் மூலம் வாக்கெடுப்பைக் கோர இலங்கை முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## தளும்பும் இந்தியா

**கடந்தவருடம் மார்ச் மாதம் நடந்த பேரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற வாக்களித்த 24 நாடுகளில் இந்தியாவைத் தவிர ஏனைய நாடுகள் பிரேரணையை இம்முறையும் ஆதரித்து வாக்களிக்கவிருக்கின்றன. இந்தியாவின் நிலைப்பாடு இன்னமும் உறுதியாக வெளியாகவில்லை. இந்தியா எதிர்த்து வாக்களிப்பதன் மூலமோ அல்லது நடுநிலை வகிப்பதன் மூலமோ,** அது பிரேரணை நிறைவேற்றப்படுவதைப் பாதிக்காது என ராஜதந்திரிகள் கூறுகின்றனர். கடந்தவருடம் எதிர்த்து வாக்களித்த ரஷ்யா, கியூபா, சீனா போன்ற நாடுகள் இம்முறை உறுப்புரிமையை இழந்துள்ளன. புதிதாக உறுப்புரிமை பெற்ற நாடுகள் பல தீர்மானத்தை ஆதரித்துத்தான் வாக்களிக்கப்போகின்றன.

குறிப்பாக கடந்த வருடம் பிரேரணைக்கு எதிராக வாக்களித்த தென்ஆபிரிக்காவும் அதனோடு இணைந்த நாடுகளும் இம்முறை பிரேரணையை ஆதரிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் பலப் பரீட்சையாக இருக்குப் போகும் வாக்கெடுப்பில் கடந்த முறையை விடக் கூடுதலான பெரும்பான்மை ஆதரவுடன் பிரேரணை நிறைவேறும் என்று அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. இந்தப் பிரேரணை நிறைவேறும் பட்சத்தில் இலங்கை இரு விதமான ஆபத்துக்களுக்கு முகம் கொடுக்க நேரிடலாம்.

ஒன்று - இத்தீர்மானத்தின் ஊடாக, இறுதிப் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரிக்க சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை என்ற பொறிமுறை ஒன்றுக்கு அத்திவாரம் இடப்படும்.

இரண்டு - எதிர்வரும் நவம்பரில் இலங்கையில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு வேறு ஒரு நாட்டுக்கு இடமாற்றப்படும் ஏதுநிலை உருவாகலாம்.

சர்வதேச மட்டத்தில் ஏற்படப் போகும் பெரும்நெருக்கடிகளை சமாளிக்க இலங்கை உடனடியாக உருப்படியாக ஏதாவது செய்தாக வேண்டும். இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவாவது உடன் ஏற்பாடுகளை இலங்கை செய்தாக வேண்டும். அப்படி எதையாவது இலங்கை செய்ய முனையாவிட்டால் சர்வதேசத்தில் இருந்து இலங்கை தனிமைப் படுத்தப்படுவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**இடபம்:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். வீட்டிலும், வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**மிதுனம்:** எதிர்காலம் பற்றிய பயம், கவலைகள் வந்து செல்லும். உடன்பிறந்தவர்கள் அதிருப்தி அடைவார்கள். அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம் அடையலாம். எதிர்பாராத பயணங்கள் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போங்கள்.

**கடகம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மன நிம்மதி கிடைக்கும். அரச கரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிங்கம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

**கன்னி:** நட்பு வட்டாரம் விரிவடையும். உறவினர்களின் வருகையுண்டு. பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**நாளை**

பங்குனி-07 புதன்கிழமை 20.03.2013
திதி: அட்டமி மு.ப. 11.36 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.இ. 03.52வரை
சுபநேரம்: 04.47- 06.17 வரை
இராகுகாலம்: 12.17-01.47 வரை

**துலாம்:** இனந்தெரியாத கவலைகள் வந்து நீங்கும். யாரும் உங்களைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். நெருங்கியவர்கள் சிலரால் தர்மசங்கடமான சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆலோசனையின்றி முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** சில தினங்களாகத் தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். வியாபாரத்தில் மறைமுக போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.

**தனுசு:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். முன் கோபம் குறையும்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் கிடைக்கும். தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மீனம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிடைக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 9 | 1 | 2 | 8 | | | |
| | 4 | | | 9 | 7 | | | |
| 7 | | | | | 4 | 6 | 9 | |
| 4 | | | | 6 | | 9 | 7 | 8 |
| 8 | | | | | | | | 6 |
| 1 | 2 | 6 | | 8 | | | | 4 |
| | 5 | 2 | 8 | | | | | 3 |
| | | | 3 | 1 | | | 2 | |
| | | | 9 | 4 | 2 | 8 | | 5 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 9 | 1 | 2 | 8 | 4 | 3 | 7 |
| 2 | 4 | 3 | 6 | 9 | 7 | 5 | 8 | 1 |
| 7 | 1 | 8 | 5 | 3 | 4 | 6 | 9 | 2 |
| 4 | 3 | 5 | 2 | 6 | 1 | 9 | 7 | 8 |
| 8 | 9 | 7 | 4 | 5 | 3 | 2 | 1 | 6 |
| 1 | 2 | 6 | 7 | 8 | 9 | 3 | 5 | 4 |
| 9 | 5 | 2 | 8 | 7 | 6 | 1 | 4 | 3 |
| 6 | 8 | 4 | 3 | 1 | 5 | 7 | 2 | 9 |
| 3 | 7 | 1 | 9 | 4 | 2 | 8 | 6 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
08.07.1928

மறைவு
17.02.2013

## அமரர் வீரகத்தி பொன்னையா

நீங்கள் எமை விட்டு இறைவனிடம்
சென்றீர்கள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம்முடன் அலைபாய்கின்றன
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
உங்களுக்காகப் பிரார்த்திப்போம்.

அன்னாரின் பிரிவால் நாம் துயரமடைந்திருந்தபோது அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (19.03.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெரிய அரசடி,
சங்கத்தானை,,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(34668) (45.6.7)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
உதயன்
☎ 0215671111
advt@uthayan.com

**QP மூலம்**



**சவுதி அரேபியாவுக்கு பலதியா சுத்திகரிப்பாளர்கள்**

**உடனடி வேலைவாய்ப்பு**

இலங்கையிலிருந்து பயணிக்க பணம்தேவையில்லை

சம்பளம் - SR 650/- (1 SR = Rs.35/-)

பயணத்திற்கான செலவு மாத சம்பளத்திலிருந்து அரசாங்க அனுமதிக்கட்டணம் ரூபா. 38,500/- அறவிடப்படும்.

AL/1316 Advt:04/13

**Terms & Conditions:**

- தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் இலவசம்
- ஒப்பந்த காலம் 3 வருடம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்தில் 48 மணித்தியால வேலை
- 2 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்து நாடுதிரும்பும்போது விமான டிக்கட் இலவசம்.
- ஏனையவை சவுதி அரேபிய சட்டத்திற்கு உட்பட்டது.

பாஸ்போட், 8 பாஸ்போட் அளவு போட்டோக்களுடன் உடன் நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு: 0112681515

(34668)(6.7)

**QP Employment (pvt) Ltd,**
No.06, Campbell Terrace, Punchi Borella, Colombo -10.
Tel: 0112 681212, 2684433, 2681515. e-mail: admin@qpjobsonline.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அம்பாறையில் நடைபெறவுள்ள

# தேசத்துக்கு மகுடத்தில் மும்மொழிகள் கட்டாயம்

அம்பாறை,மார்ச்19

தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சியின்போது மும்மொழிகளையும் கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

கண்காட்சிப் பூமியில் அமைக்கப்படும் காட்சிக் கூடங்கள், பதாகைகள், 'கட்அவுட்'கள் ஆகியவற்றில் விசேடமாக அரச கரும மொழிகளான சிங்களம் மற்றும் தமிழ் கட்டாயம் பொறிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று அம்பாறை மாவட்ட அரச அதிபர் நீல் த அல்விஸ் தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டுக்கான தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சி எதிர் வரும் 23 ஆம் திகதிமுதல் அம்பாறை ஹாடி உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம் மற்றும் அதனை அண்டியுள்ள சுமார் 120 ஏக்கர் நிலப்பரப்பில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி ஏற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சகல ஆலோசனைக் கூட்டங்களின் போதும் அரச கரும மொழிகளின் பயன்பாடுகள் தொடர்பில் அவர் விளக்கியுள்ளார். மும்மொழி கொள்கையை கண்காட்சியின் போது கட்டாயம் நடைமுறைப்படுத்துமாறு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு விசேட சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

அநுராதபுரம், ஓயாமடு பிரதேசத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஆறாவது தேசத்துக்கு மகுடம் கண்காட்சியின் போது மும்மொழிக் கொள்கை கடைப்பிடிக்கப்படவில்லை. அதனை நிவர்த்தி செய்யும் வகையில் விசேட சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு கூறுகின்றது. (ச)



கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நிந்தவூர் பிரதேசத்தைச் சேர்ந்த முதியோர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை வழங்கப்பட்டன.

# தமிழ்- முஸ்லிம் கட்சிகள் இணைய முன்வரவேண்டும்

## லோகநாதனின் கோரிக்கை இது

அம்பாறை, மார்ச் 19

இந்த நாட்டில் தமிழ்பேசும் மக்கள் நிம்மதியாக வாழும் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். அரசியல் ரீதியில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்து செயற்படவேண்டிய கால கட்டம் இது என்பதை நாம் உணர வேண்டும். அதன்மூலம் சிறுபான்மை சமூகங்கள் அரசியல் அங்கீகாரத்தைப் பெற முனைய வேண்டும்.

- இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் கூறினார்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவ சபைக் கூட்டம் கல்முனை சனசவெளி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக செயற்படும் பொது பல சேன போன்ற அங்கீகரிக்கப்படாத அமைப்புக்களைத் தடை செய்ய வேண்டும். இனவாதத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு அரசு முன்வரவேண்டும்.

நாட்டில் இன்று இனவாதம் உக்கிரமடைந்து சிறுபான்மை சமூகங்கள் அதன் மூலம் வஞ்சிக்கப்படும் நிலைமை தோன்றியுள்ளது.

பௌத்த பேரினவாத மதவாதிகள், இனவாதிகளின் வேண்டத் தகாத செயற்பாடுகள் இன்று உக்கிரமடைந்து சிறுபான்மை சமூகங்களுக்கெதிராக முடுக்கி விடப்பட்டுள்ளன.

முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகள், மத சுதந்திரம் என்பவற்றுக்கு எதிராக பல செயற்பாடுகளை பொது பலசேனா அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது.

முஸ்லிம் சமூகம் இனவாத அச்சுறுத்தலுக்கு உட்பட்டு அல்லலுறுகின்றது.

அந்த வேளை முஸ்லிம் தலைவர்களின் குரல்கள் ஓங்கிலிக்காது, மௌனமாகின்றன.

அவர்கள் இன்னும் அரசுடன் ஒட்டிக்கொண்டிருப்பதும் ஏன் என முஸ்லிம் மக்கள் கேள்விக்கள் கேட்கத் தொடங்கி விட்டனர்.

இன்றைய நிலைமை முஸ்லிம் இளைஞர்களைப் கொதிப்படைய வைத்துள்ளது. அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்க தலைவர்களெனக் கூறுபவர்கள் முன்வர வேண்டும்- என்றார். (ச)

# தனியார் கல்வி நிறுவனங்கள் விடுமுறையில் செயற்பட தடை

## மட்டு.மாநகர முதல்வர் அதிரடி

மட்டக்களப்பு,மார்ச்19

மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்தில் விடுமுறை தினங்களில் முழுமையாக தனியார் கல்வி செயற்பாட்டினை இடை நிறுத்த வேண்டும். அத்தோடு ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி வரை தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கக் கூடாது.



இவ்வாறு மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரன் அதிரடி அறிவித்தல்கள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்தில் பூரணை, மற்றும் விடுமுறை தினங்களில் முழுமையாக தனியார் கல்வி செயற்பாட்டினை இடை நிறுத்தும் விதிமுறை நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தது. ஆனால் தற் போது இந்த விதிமுறையை மீறி சில தனியார் கல்வி நிறுவனங்கள் செயற்படுகின்றன.

அதனால் அறநெறிக் கற்றல், கிறிஸ்தவ தேவாலயங்களில் மத அனுஷ்டானங்கள் ஆகியவற்றில் மாணவர்கள் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது கிறிஸ்தவர்களின் தவக் காலம் அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருப்பதால் இந்தச் செயற்பாடானது மாண வர்கள் சமய செயற்பாடுகளில் ஈடுபட இடையூறாக அமைத்துள்ளது.

எனவே சகல தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளும் ஞாயிற்றுக் கிழமையில் பிற்பகல் 2 மணிவரை தனியார் கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்த வேண்டும்.

இந்த விதிமுறையை தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள் மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**MBBS / MD**
UKRAINE (யுக்கிரேன்) EUROPE
* LUGANSK STATE MEDICAL UNIVERSITY - UKRAINE
* Sri Lanka Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்டது.
* 6 வருட பாடநெறி.
* எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட 30 மேற்பட்ட யாழ்பாணத்தை சேர்ந்த மாண்வர்கள் தற்பொழுது கல்வி கற்கின்றனர்.
Call: 0777 - 767818
Scholars Information Centre, No. 01, Veverset Place, Colombo 06.
(34536)(6.7)

**Study in MALAYSIA**
**மலேசியாவில் உயர்கல்வி**
மலேசிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கபட்ட
SAL COLLEGE இனால் நடத்தப்படும்
HOTEL MANAGEMENT & CATERING FACULTY
Pastry Certificate Course - 1 Year
◆ 8 மாதங்கள் "3 Star" Hotel களில் பயிற்சி. மாதாந்த பயிற்சி ஊதியம் வழங்கப்படும்.
◆ பாடக்கட்டணம் visa பெற்றபின் செலுத்தமுடியும்.
◆ IELTS தேவையில்லை.
◆ course முடிவின் பின் மலேசியாவில் வேலை பெறுவதற்கான தகைமை.
◆ மேற்படிப்பிற்காக UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு transfer பெறமுடியும்.
◆ தகைமை: கணிதம்,ஆங்கிலம் உட்பட O/L சித்தி.
மார்ச் 20ம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திக்கமுடியும்.
Call : 0777-767818
Mr. Jude James
Scholars Information Center
# 01, Vaverset Place, Wellawatte,
Colombo 06.
(34536)
(6.7)

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.
## FACULTRY OF ARTS

University of Jaffna entertain applications up to 2nd April 2013 from suitably qualified persons for the Post of Visiting Instructor in English Language Teaching.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Academic Establishments,University of Jaffna,Sri Lanka,either in person or by post on a payment of Rs.100/= per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order /Postal Order drawn in favour of the Bursar,University of Jaffna together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications for the above post should be sent to the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Jaffna.

Applications from University System/Government Departments/Corporations and Statutary Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applications will be called for interview.

**Registrar**
**18.03.2013**

(C/7124)(6.7.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெரினாவிலும் மக்கள் திரள்




தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்தக் கோரி 'மே பதினேழு' இயக்கத்தின் ஏற்பாட்டில் சென்னை மெரினா கடற்கரையில் ஞாயிறன்று ஒன்று கூடல் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, உலக தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன், பீகார் சட்ட சபை உறுப்பினர் சோம்பிரகாஷ் சிங் உட்பட பலர் உரையாற்றினர்.

# தமிழீழத் தனி அரசுக்கு பொது வாக்கெடுப்பு நடத்து

## வலியுறுத்தி திரைப்பட இயக்குநர்கள் இன்று உண்ணாவிரதப் போராட்டம்

சென்னை, மார்ச்19

தமிழீழத் தனியரசுக்கான பொதுவாக்கெடுப்பு நடத்து, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதி என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை ஒருநாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவுள்ளதாக தமிழ் நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் அறிவித்துள்ளது. சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய திரைப்பட இயக்குநர்கள் சங்கத் தலைவர் அமீர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

இனம் சார்ந்த, மொழி சார்ந்த பொதுப் பிரச்சினைகளில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

இலங்கை ஜனாதிபதியை போர்க் குற்றவாளியாக அறிவிக்கவேண்டும். இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். தமிழீழத் தனியரசுக்கான பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடும்.

இன்றைய தினம் சகல இயக்குநர்களும் படப்பிடிப்பை ரத்து செய்துவிட்டு உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை கூட்டத்துக்குப் பிறகு தமிழ் திரைப்பட உலகைச் சேர்ந்தவர்கள் இலங்கையுடன் இணைந்து செயற்படுவதற்கு எதிராக உறுதியான முடிவு எடுக்கப்படும் - என்றார்.

(வ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
**விவசாயபீடம்**
**புதுமுக மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பம்**

விவசாயபீடத்துக்கு 2011/2012 கல்வி ஆண்டுக்கு தெரிவுசெய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 03.04.2013 புதன் கிழமை காலை 9 மணிக்கு விவசாய பீட பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகின்றது.

அனைத்து புதுமுக மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

(ƒ/7125) (45.6.7) பதிவாளர்.

**முக்கிய அறிவித்தல்**

கடை பிரித்து புதிதாக கட்டடம் அமைப்பதற்கு ஒழுங்குகள் செய்துள்ளோம். ஆகவே உங்களின் பொருள்களை இந்த மாதம் (25.03.2013) 25 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

பிரகாஷ் ரான்ஸ்போட் 457, கே.கே.எஸ் வீதி,
உரிமையாளர்- அ.குலசிங்கம் யாழ்ப்பாணம். (35404) (6.7.11)

**நாஹா மருத்துவ நிலையம்**

மூளையில் இரத்தக் கட்டியினால் வாய் பேச முடியாது கை, கால் செயலிழக்கின்றதா? அதிக உடற் பருமன் கொலஸ்ரோல், குழந்தை பேறின்மை, ஆஸ்மா அல்சர் கட்டி, தீராத புண்கள் தெய்வீக மருந்தியல்

கிழமை நாள்- 3 pm-7 pm
சனி,ஞாயிறு-8 pm-2 pm
077 521 2740

வங்கி முன் லேன்,சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதி வீடு) மானிப்பாய். (35405) (6.7.11)

**ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு 18.09.1935 இறப்பு 25.03.2007



அமரர்
**சட்டநாதர் சிதம்பரம்**
(காஞ்சனா)
திதி: 19.03.2013 (பூர்வபக்க அட்டமி)

அன்புள்ள அம்மா!
ஆண்டு ஆறு ஆனாலும் ஆறாது உங்கள் நினைவு
காலம் ஓடிப் போனாலும் மறந்து விட முடியாதம்மா உங்களை
சிரித்து வாழ்ந்த காலமெல்லாம் சிறகடித்துப் போனதுவோ!
இறப்பும் பிறப்பும் இறைவன் கட்டளை அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறையருளை வேண்டுகின்றோம்.

ஆறுமுகம் வீதி, கந்தரோடை, சுன்னாகம்.
கணவர் இ.சட்டநாதர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(c/7126) (6.7.11)

**புலமைப் பெற்றோர்களே!**
**இதோ புதுப்பொலிவுடன் வெளிவந்துவிட்டது புலமை 23**
**உங்கள் பிள்ளைகளின் வெற்றிக்கான கையேடு**

உங்கள் எதிர்பார்க்கை வினாத்தாள்கள் உள்ளடங்கலாக

தமிழ்
கணிதம்
சுற்றாடல்
ஆங்கிலம்
சிங்களம்
மாதிரி வினாத்தாள்
கடந்தகால வினாக்கள்
மேலும் பல தகவல்களுடன்




**உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்**

(6.7)

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855
வடமாகாணத் தொடர்புகளுக்கு -

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**அபூர்வசிங்கம் பவளகாந்தி**
(கிளி)

தோற்றம் 22.09.1942
மறைவு 30.03.2012

அன்பிற்கு ஊற்றாய்!
பாசத்திற்கு உறைவிடமாய்!
பண்பிற்கு சிகரமாய்
வாழ்ந்த எம் அம்மாவின்
அன்பகலா பிரியங்களுடன்

இன்று (19.03.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வைஷ்ணவி புடைவை மாளிகை
இமையாணன் மேற்கு, சந்தைவீதி.
உடுப்பிட்டி. 075 835 7447
(27799)(5.6.7)

அபூர்வசிங்கம்,
அனுஷ்காந்த்-சுபத்திரா,
பேரப்பிள்ளைகள்(வைஷ்ணவி, வைசாளினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்கள் மீது மீண்டும் பொது பலசேனா பாய்ச்சல்

## கூரகலை மக்கள் வெளியேற காலக்கெடு

அடுத்தமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பௌத்த பூமியான கூரகலையை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் முஸ்லிம்கள் வெளியேறவேண்டும்.

கொழும்பு,மார்ச்19

பௌத்தர்களின் வரலாற்றுப் பூமியான பலாங்கொடை, கூரகலை பகுதியிலுள்ள முஸ்லிம்களின் தர்கா அகற்றப்பட வேண்டும் என்று போர்க்கொடி தூக்கியுள்ளது பொது பலசேனா. அத்துடன் அங்குள்ள முஸ்லிம் மக்களும் வெளியேற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இவை அனைத்தும் அடுத்த மாதம் 31ஆம் திகதிக்குள் இடம்பெறவேண்டும் என்று பொது பலசேனா அமைப்பு காலக்கெடு விதித்துள்ளது.

கூரகலையில் முஸ்லிம்களை வெளியேற்றியதன் பின்னர் பௌத்த பூமியில் வெசாக் பண்டிகையை இந்த வருடம் சிங்களவர்கள் கொண்டாட வேண்டும் என்று அந்த அமைப்பின் செயலர் கலபொட அத்தே ஞானாசார தேரர் தெரிவித்தார்.

கண்டியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பொது பலசேனா அமைப்பின் மாநாட்டில் அவர் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஹலால் பிரச்சினை முடிந்துவிட்டது. இனி அதுபற்றி நாம் பேசமாட்டோம். பிறக்கவிருக்கின்ற சித்திரைப் புத்தாண்டில் ஹலால் இல்லாத பாற்சோற்றை நாம் சாப்பிட வேண்டும். அதனை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு எமக்கு உதவிய ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, சிஹல ராவய அமைப்பு, அமைச்சர்கள், பாதுகாப்புச் செயலர் உட்பட அனைவருக்கும் நன்றிகள்.

பௌத்த பூமியான கூரகலையை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் முஸ்லிம்கள் வெளியேற வேண்டும். கூரகலை எனப்படுவது பௌத்தர்களின் பூமி. அது தொல்பொருள் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இங்கு முஸ்லிம்கள் தர்கா அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

இங்குள்ள தர்கா அகற்றப்படுவதுடன், முஸ்லிம்களும் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று குறித்த முஸ்லிம் தரப்பினருடன் பேசினோம். அதன்போது அவர்கள் தமக்கு ஒருமாத கால அவகாசம் கோரியிருந்தனர். ஆனால் நாம் அவர்களுக்கு இரு மாத கால அவகாசம் வழங்கினோம்.

இதற்கமைய அடுத்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும். அத்துடன் அங்குள்ள தர்காவும் அகற்றப்படவேண்டும். பௌத்த பூமியான கூரகலையில் வெசாக் பண்டிகையை நாம் கொண்டாட வேண்டும் -என்றார். (ச)

# புத்தரின் உருவத்தை பச்சை குத்தலாம்

## பிரிட்டன் அரசு அறிவிப்பு



கொழும்பு,மார்ச்19

புத்தரின் உருவத்தை பச்சை குத்தி இருக்கின்றமை பௌத்த மதத்தை அவமதிப்பதாக அமையாது என்று பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது.

கடந்தவாரம் புத்தர் உருவத்தை கையில் பச்சைக்குத்தி இருந்ததன் காரணமாக பிரிட்டன் நபர் ஒருவர் இலங்கையில் இருந்து நாடுகடத்தப்பட்டார். அதனைத் தொடர்ந்தே இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சு, இலங்கையின் வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளது என்று ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையில் பௌத்த மதச்சின்னங்களை எடுத்துச் செல்வது, அதனை புகைப்படம் எடுப்பது போன்ற விடயங்களை தவிர்க்குமாறு பிரிட்டன் தமது பயண கட்டுப்பாட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ச)

# 'காவியநாயகன்' திருப்பாடுகளின் நாடகம்

யாழ்ப்பாணம்,மார்ச் 19

யாழ்.திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் மாபெரும் அரங்க ஆற்றுகை நிகழ்வான 'காவியநாயகன்' திருப்பாடுகளின் நாடகம் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள் ளது.

தினமும் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ள 'காவியநாயகன்' நாடக ஆற்றுகை வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய 'காவியநாயகன்' ஆற்றுகைக்கான நெறியாள்கையை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன்ராஜ்குமார் மேற்கொண்டுள்ளார்.

மனிதம் என்ற தேடலுக்கு பதில் தரும் வகையில் இறைமகன் இயேசுவின் வாழ்க்கை அமைந்துள்ளது. அவர் வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், கட்டத்தையும், சவாலையும் எவ்வாறு அணுகி மனிதத்தின் உச்சமாகவும் எடுத்துக்காட்டாகவும் விளங்கினார் என்பதைக் கூற முனைகின்றது 'காவியநாயகன்' ஆற்றுகை (த-8-51)

சுகாதாரப் பிரிவினரின் திடீர்ச் சோதனை

# மாட்டிக் கொண்டது வர்த்தக நிலையம்

தென்மராட்சி, மார்ச் 19

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் தினமும் மாலை வேளைகளில் கடையைத் திறந்து வியாபாரம் செய்யும் வர்த்தக நிலையத்தின் மீது சாவகச்சேரி நகரசபை சுகாதாரப் பகுதியினர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

வர்த்தக நிலையத்தில் திகதி காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த வர்த்தக நிலையத்தில் திகதி காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக நகரசபைக்கு பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டது. அதனையடுத்து நகரசபைத் தலைவரின் பணிப்பின் பேரில் நகரசபை பொது சுகாதார பரிசோதகர் பி.தளிர்ராஜ் தலைமையிலான சுகாதாரக் குழுவினர் இரவு வேளையில் குறித்த வர்த்தக நிலையத்தில் பரிசோதனைகளை மேற் கொண்டனர். இதன்போது பெருமளவு உணவுப் பொருள்கள் திகதி காலாவதியான நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த வர்த்தகருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-9)

# புகலிடம் கோரியோரை நாடு கடத்த வேண்டும்

## சம்பிக்க ரணவக்க வலியுறுத்து

கொழும்பு,மார்ச்19

இலங்கையில் புகலிடம் கோரியுள்ளவர்களை நாடு கடத்த வேண்டும் என்று அமைச்சர் பாடலி சம்பிக்க ரணவக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற புத்தக வெளியீட்டு நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றிய அவர் மாலைதீவில் அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ள நிலையில், அங்குள்ள மக்கள் தற்போது இலங்கையின் பல பாகங்களுக்கும் வந்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

தெஹிவளை, இரத்மலானை, நுகேகொட போன்ற பகுதிகளில் அவர்கள் தங்கி இருக்கின்றனர் என்று தெரிவித்தார். இந்த நிலையில் அவர்களை உள் நாட்டில் தங்கி இருக்க அனுமதிக்காமல், மீண்டும் மாலைதீவுக்கு நாடு கடத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். (ச)

## சமய சந்நிதிகளில்

சரித்திரப் பிரசித்தி பெற்ற நெடுந்தீவு ஆலமாவனப் பிள்ளையார்ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் திருவிழாவில்எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (3-7)

★ ★ ★

யாழ்- நல்லூர் சிவஞானப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 29 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் மறுநாள் காலை 8.30 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. (3)

★ ★ ★

உடுவில் தொம்பை வைரவர் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.(3-ரி)



யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள சீரடி சாயி மந்திரில் மகா சிவராத்திரி விழாவும் பாபாவின் 90 ஆவது ராஜபவனியும் இடம்பெற்றது. அன்றைய தினம் மாலை விசேட ஆராதனைகள் இடம்பெற்ற போது . (3-7)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்

# தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 19

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய அறங்காவல் சபையின் தலைவராக கே.பரமலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (எ-7)

# கட்சி உறுப்பினர்கள் செயற்படவில்லையா?

## ரணிலுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பலாம்

கொழும்பு,மார்ச் 19

ஐக்கிய தேசியக் கட்சிப் பணிகளில் செயற்படாது இருக்கும் உறுப்பினர்களது விவரங்களை உடனடியாக குறுஞ் செய்தி (எஸ்.எம்.எஸ்) அனுப்பி தெரியப்படுத்துமாறு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

கல்கமுவ பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கட்சி தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடாதிருக்கும் நகரசபை மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் தொடர்பில் குறுஞ் செய்தி [illegible] இணையத்தளம் [illegible] வருமாறு அவர் கேட்டுள்ளார். (ச)




# பராமரிப்பு சேவை அவசியம் தேவை

நெல்லியடி, மார்ச் 19

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்படும் நோயாளர்களைப் பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் சேவையை நோயாளர் நலன்புரிச் சங்கம் வழங்குவதில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நோயாளர்களைப் பராமரிக்க ஆள்வசதிகள் இல்லாதவர்களது எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

குடும்ப உறுப்பினர்களில் அதிகமானோர் அரச தனியார் நிறுவனங்களில் தொழில் புரிபவர்களாக இருக்கின்றனர். அதே நேரம் பெற்றோர்கள் ஊரிலும் பிள்ளைகள் வெளிநாடுகளிலும் வசிக்கின்றனர். இதனால் நோயாளிகளைப் பராமரிக்க பராமரிப்பாளர் சேவை அவசியமான ஒன்றாகும்.

இந்த விடயத்தில் நோயாளர் நலன்புரி சங்கம் நோயாளர் பராமரிப்பு சேவையை வழங்க முன்வர வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANNAI NAGAA
FOOD CITY
FOR ALL YOUR DAILY NEEDS
உங்கள் தினசரி தேவைகளுக்கு

# வாஞ்சை மிகு வாடிக்கையாளப் பெருமக்களுக்கு !

# அன்னை நாகா வின்

## அன்பு மிகு வணக்கங்கள்

யாழ். மண்ணில் மிகுந்த அச்சுறுத்தல்களுக்கும், இடையூறுகளுக்கும் மத்தியில் 2003ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19ஆம் திகதி ஒரு சவாலாக ஏற்று மிகுந்த துணிச்சலுடனும் தன்னம்பிக்கையுடனும், உறுதியுடனும் எமது மண்ணின் முதலாவது பூட்சிற்றியாக அன்னை நாகா பூட்சிற்றியை நிர்மாணித்ததை எமது மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதனைத் தொடர்ந்து எமது வாடிக்கையாளர் எமக்களித்த அன்பும், ஆதரவும் எமது ஸ்தாபனத்தின் உயர்வையும், உறுதியையும் நிலைநாட்டியது இவை அனைத்தையும் கடந்து **இன்று 2013-03.19 செவ்வாய்க்கிழமை 11ஆவது அகவையில்** அடியெடுத்து வைத்திருக்கும் **அன்னைநாகா பூட்சிற்றி** அனைத்து வாடிக்கையாளப் பெருமக்களுக்கும் தங்கள் அன்பையும் நன்றியையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது. தொடர்ந்தும் எமது உன்னத சேவையைத் தொடர உங்கள் அனைவரது அன்பையும் ஆதரவையும் என்றும் நாடி நிற்கின்றோம்.

**உயர்ந்த தரம் மிக்க பொருள்கள், சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட தரம்மிக்க உற்பத்திகள், மேலைத்தேய உணவுப் பொருள்கள், அனைத்து அழகு சாதனப் பொருள்கள், உள்ளத்தைக் குளிர வைக்கும் உயர்தரக் குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், மழலைகளுக்கான உணவுவகைகள், குழந்தைகளுக்கான ஆடைவகைகள், ஏனைய வீட்டுப் பாவனைக்கு உரிய பொருள்கள் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்குரிய பொருள்கள், பொம்மை வகைகள் இவை அனைத்தும் விஷேட விலைக்கழிவுகளுடன் ஒரே கூரையின் கீழ்பெற்று மகிழ நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்**

## அன்னைநாகா பூட்சிற்றி

இந்த நிகழ்வை முன்னிட்டு பொருள்கள் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு விஷேட அதிர்ஷ்டங்கள், பெறுமதி மிக்க பொருள்களைக் கொண்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கள், கொள்வனவு செய்யும் பொருள்களுடன் கூடிய பொருள்கள், நன்கொடைகள், இன்னும் பல இன்னோரன்ன அதிர்ஷ்டங்கள் புத்தாண்டு வரை காத்திருக்கின்றது. உங்கள் அனைவரையும் அன்னைநாகா பூட்சிற்றி இரு கரம் நீட்டி அழைக்கின்றது. வாருங்கள், வந்து பாருங்கள் ஆனந்தம் அடையுங்கள்.

*வாழ்க வையகம்!*

## 11ஆவது அகவையில் அன்னை நாகா பூட்சிற்றி வழங்கும் விசேட சலுகைகள்

அன்னைநாகா பூட்சிற்றி 11ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு எமது வாடிக்கையாளர்களுக்கு பரிசுப்பொருள்களை அளிக்க முன்வந்துள்ளோம்.

★ இன்று 19.03.2013 கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு பின்வரும் அடிப்படையில் பரிசுப்பொருள்கள் வழங்கப்படும்.

1) 5000/= இக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கை யாளர்களில் ஒருவர் அதிர்ஷ்டமுறையில் தெரிவுசெய்து துவிச்சக்கரவண்டி ஒன்றும்.
2) 3000/= இக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் ஒருவர் அதிர்ஷ்டமுறையில் தெரிவுசெய்து DVD பிளேயர் ஒன்றும்.
3) 2000/= இக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கை யாளர்களில் ஒருவர் அதிர்ஷ்ட முறையில் தெரிவு செய்து றைஸ் குக்கர் ஒன்றும் வழங்கப்படும்.

### ★ இன்று 19.03.2013, 1000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் 1000 வாடிக்கையாளர்களுக்கு சக்தி பூட் இன்டஸ்ரீஸ் இனால் வழங்கப்படும் ஆறுதல் பரிசுகள்.

1. MD Lanka Products 5% Discount
2. Edinborough Products 15% Discount

| | | |
|---|---|---|
| 3. Daintee Mr.Bitz Snacks | 14g | 10% Discount |
| " Mr.Bitz Onion | 15g | |
| " Fruit Jelly | 75g | |
| " Sugar free Pepper Mint | 13g | |
| " Milady Chocol Eclairs | 100pcs | |
| " Mango Candy | 310g 150pcs | |
| " Fruit Jelly Assorted | 450g | |
| " Chocolate Assortment | 350g | |
| " Express w/Chocolate | 8g | |
| " Choco Nut | 65g | |
| " Chito Eclairs Creamy | 150pcs | |
| " Longlive xylitol Sugar Free | 100g | |
| " Choco Assortment Canister | 40g | |

| | | |
|---|---|---|
| 4. Maaruthi Delicious Pop Corns | | 5% Discount |
| Maaruthi Marsh Mellow | 50pcs | |
| " Marsh Mellow | 25pcs | |
| " Marsh Mellow Small | 15pcs | |
| " Marsh Mello Ball | 100g | |
| " Jujubes | 100g | |
| " " | 200g | |
| " " | 300g | |
| " 03 Coat Jujubes | 12pcs | |
| " Marsh Mellows | 50 pcs Loose | |
| " Gingilly Rolls | 10pcs | |
| " Gingilly 20 pcs | | |

5. Magic Time Yummy Tummy Cheese
Magic Time Yummy Tummy Orginal
Magic Time Yummy Tummy Hot Buffalo wing
Magic Time Yummy Tummy Saltn Vineger
Peacock Brand Rice Vermicelli 500g
Magic Time Yummy Tummy Sour&Onion
} 10% Discount

6. Sunquick Pssion Fruit 330ml
Sunquick Passion Fruit 840ml
Sunquick Orange 330ml
Sunquick Orange 840ml
Sunquick Orange 2 l
} 5% Discount

Horlicks 480g Canistor Buy one Get One Free
Boost 500g Buy One Get One Free
Kandos 160g +20g Kandos Free
Ambewala Milk Rs. 10/= OFF
Maliban Chick Tin +Gold Marie Free
Little Lione + 100g Butter Carole Free
Prima Chicken Rs.20/= OFF

7) Edgell French Fries 1kg
Edgell French Fries 500g
} 5% Discount

Ferrero Rocher (T-16) Small &Large- **20% Discount**
Nutella 350g - **10% Discount**

| | | Cost | Our Price |
|---|---|---|---|
| Dutch Lady Strawberry | 900ml | 400/= | 200/= |
| " " Chocolate Milk | 900ml | 400/= | 200/= |
| " " Fresh Milk | 900ml | 400/= | 200/= |
| " " Strawberry milk | 450ml | 300/= | 150/= |
| " " Fresh milk | 450ml | 300/= | 150/= |

**வாடிக்கையாளரை மகிழ்ச்சிப்படுத்தும் முகமாக மேலும் பரிசுப் பொருள்கள் வழங்கவுள்ளோம். இச்சலுகைகள், விலைக்கழிவுகள் 19.03.2013 இலிருந்து 15.04.2013 வரை மட்டுமே.**

**அன்னை நாகா பூட்சிற்றி**
**175 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

**வாழ்க வளமுடன்!**
**நிர்வாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுநர் மாளிகையை முற்றுகையிட முயன்ற மாணவர் 1000 பேர் கைது

சென்னை, மார்ச் 19

கிண்டி ஆளுநர் மாளிகை, நுங்கம்பாக்கம் இலங்கை தூதரகம், மீனம் பாக்கம் விமான நிலையம் ஆகிய வற்றை ஒரே நேரத் தில் 3 அணிகளாக பிரிந்து முற்று கையிடச் சென்ற மாணவர் கள் ஆயிரம்பேர் நேற்று கைது செய்யப் பட்டனர்.



தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பின் சார்பில் நேற்று சென் னையில் ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்று அறி விக்கப்பட்டிருந்தது.

சென்னையில் உள்ள 25 கல்லூரி மாணவர்கள் நூற் றுக்கணக்கானோர் சைதாப் பேட்டை பஸ் நிலையத்தில் ஒன்று திரண்டு முழக்கங் களை எழுப்பியவாறு ஆளு நர் மாளிகையை முற்றுகை யிடச் சென்றனர்.

அவர்களை பொலிஸார் தடுத்தி நிறுத்தி கைது செய்தனர். இதனால் தென் சென்னை பகுதி யில் போக்குவரத்து பாதிக் கப் பட்டது.

இதேவேளை நுங்கம் பாக்கத்தில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தை மாண வர்கள் முற்றுகையிட முயன் றனர். அவர்களை பொலி ஸார் தடுத்து நிறுத்தினர். சுமார் 300 இற்கும் மேற் பட்ட மாணவர்கள் கைது செய் யப்பட்டனர். இந்த இரண்டு போராட்டங்களைத் தொடர்ந்து சென்னை மீனம் பாக்கம் விமான நிலையத் தையும் 500 மாணவர்கள் முற்றுகையிட முயன்றனர். அவர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதுவரை கல்லூரி வளா கங்களுக்குள் போராட்டம் நடத்திய மாணவர்கள் தற் போது வீதிக்கு வந்து அணி அணியாக கைதாகி வருவ தால் பரபரப்பு ஏற்பட்டுள் ளது. (வ)

## ஈழமக்களின் நிம்மதியான வாழ்வுக்கு தமிழீழமே தீர்வு

### நடிகர் சரத்குமார் கருத்து



ஈழ மக்கள் சந்தோஷ மாகவும் நிம்மதியாகவும் வாழ தமிழீழம் தான் தீர்வு என்று சமத்துவ மக்கள் கட் சித் தலைவரும் நடிகரு மான ஆர்.சரத்குமார் தெரி வித்தார்.

இதுகுறித்து அவர் வெளி யிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது:-

இலங்கைப் பிரச்சினை யில் மாணவ சமுதாயம் தங்கள் உணர்வுகளை வெளிப் படுத்தியிருப்பதையும், இலங்கையில் இனியும் ஒரு தமிழனைக்கூட நாம் இழந்து விடக்கூடாது என்கிற அக் கறையை வெளிப்படுத்தியி ருப்பதையும் நான் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். மாணவர்கள் போராட்டம் நடத்துவது மட்டுமின்றி தமி ழக மக்களிடையே ஈழ ஆதரவு பிரசாரம் செய்து ராஜ பக்ஷவுக்கு எதிரான விழிப்பு ணர்வை எம் மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

இலங்கை அரசின் இனப் படுகொலையைவிட, மத் திய அரசின் மௌனமும், மெத்தனப்போக்கும் இன் னும் பல மடங்கு எரிச்சலை யும், வேதனையையும் ஏற் படுத்தி வருகிறது. நாடாளு மன்றத்தில் பிரதமர் தனது கவலையை வெளிப்படுத்து கிறாரே தவிர, மத்திய அர சின் தீர்க்கமான முடிவை இதுவரை தெரிவிக்கவில்லை.

தமிழினப் படுகொலை புரிந்த இலங்கை அரசு குற்ற வாளி என்பதும், இனியும் ஈழத்தமிழர்கள் மகிழ்வாக, நிம்மதியாக வாழ தமிழ் ஈழம் தான் தீர்வு என்பதும் நிலை நாட்டப்படும் வரை மத்திய அரசுக்கு எதிரான மக்கள் போராட்டத்தை சமத்துவ மக்கள் கட்சி தொடர்ந்து நடத்தும் என்பதை உறுதி யாக தெரிவித்துக்கொள்கி றேன்- என்றுள்ளது. (வ)

## சுங்க அலுவலக முற்றுகை சட்த்தரணிகள் நேற்றுக் கைது

சென்னை, மார்ச் 19

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வலியுறுத்தி சுங் கத்துறை அலுவலகத்தை முற்றுகை யிட்ட சென்னை உயர் நீதிமன்ற சட் டத்தரணிகள் கைது செய்யப்பட் டனர்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தை இந் தியா ஆதரிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் மத்திய அரச அலுவலகத்தை முற்றுகை யிடும் போராட்டத்தை அறிவித்தி ருந்தனர்.

அதன்படி நேற்றுக் காலை உயர் நீதிமன்ற வளாகத்தில் இருந்து பேரணி யாகப் புறப்பட்ட சட்டத்தரணிகள், சென்னை கடற்கரை ரயில் நிலையத் துக்கு முன்பாக அமைந்துள்ள சுங்கத் துறை அலுவ லகத்தை முற்றுகை யிடச் சென்றனர். அப்போது, அவர் களை தடுத்து நிறுத் திய பொலிஸார், பின்னர் கைது செய்தனர்.

இதேவேளை, தமிழ்நாடு சட்டத் தரணிகள் சங்கம் சார்பில் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தந்தி அனுப்பும் போராட்டமும் நடத்தப்பட் டது. (வ)

## உருவச் சிலை அமைப்பு

சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலய கிழக்குப் பக்கமாக சுழிபுரம் பெரிய பாரியார் என்று அழைக்கப்படும் அமரரின் திரு உருவச்சிலை அமரரது குடும்பத்தினர் உதவி யோடு நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆலய சந்ததிப் பூசகரான சிவத்திரு சி.பிறைசூடிக்குருக்கள் இந்தியா சிற்பக் கலைஞர்கள் மூலமாக நிறுவும் பணிகளை செய்து வருகின்றார். சிலைநிறுவும் வேலைகள் மே மாதத்துக்கு முன்பாக நிறைவுபெறும் என்று கூறப்பட்டது. (ம-28)


## மரண அறிவித்தல்

### திருமதி நாகமுத்து மாணிக்கம்



புதியபூமி, இடைக்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து மாணிக்கம் நேற்றுமுன்தினம் (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-சின்னாச்சி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற நாகமுத்துவின் பாசமிகு மனைவியும் சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர்), முருகேசு (ஓய்வுபெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர்) கந்தசாமி, சின்னத்தங்கம், வள்ளிநாயகி, நாகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), Dr.இராமநாதன் (ஆஸ்ரேலியா), மகேந்திரன் (கனடா), மகேஸ்வரன் (கனடா), செல்வபவன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் தேவசிகாமணி, சிறிவள்ளி, இராஜேஸ்வரியம்மா, முருகையா(ஓய்வுபெற்ற தொழிநுட்பவியலாளர்-இ.போ.ச) சங்கரப்பிள்ளை (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்), சிவபாலசுந்தரம் (பணிப்பாளர்-நீர்ப்பாசன திணைக்களம்-கொழும்பு), ராகினி (ஆஸ்ரேலியா), மைதிலி(கனடா), கலா(கனடா), சிவலோஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், சதீஸ்குமார் (பொறியியலாளர்-அமெரிக்கா), சகிலா(மருத்துவபீடம்),சூரியகுமார், பிரகலா(கனடா), கஜகுமார்(கச்சேரி-முல்லைத்தீவு), காஞ்சனா(மருந்தாளர்-கிளிநொச்சி), கஜரூபன் (கனடா), சோபனா (பிரான்ஸ்), விஜிதா (முகாமைத்துவ உதவியாளர்-மீள்எழுச்சித்திட்டம்), மகிபன் (கனடா), மனோஜா (நெதர்லாந்து), தர்சிஜா (ஆசிரியை), ரமணன் (கனடா), குமணன், Dr.ரகுராம், ஷகிராம் (மருத்துவபீடம்), சஞ்ஜெய் (மருத்துவபீடம்- ஆஸ்ரேலியா), கிஷானி (ஆஸ்ரேலியா), திவ்வியா (கனடா), வித்தியா(கனடா), அரவிந்(கனடா), ரவிந்(கனடா), சியாமி (கனடா), மீரா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சஞ்சீவ் (அமெரிக்கா), கிருஷிகா (கனடா), அபிஷனா (கனடா) அபினேகா (கனடா), தனுஸ்கா(கனடா), அபிவர்ஷா(பிரான்ஸ்), அபிநிஷா(பிரான்ஸ்), லவிற்சன் (கனடா), வித்தகி, கேசகி, ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2013) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மாணிக்கபதி புதியபூமி, இடைக்காட்டில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சாமித்திடல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மாணிக்கம் பதி",
புதிய பூமி,இடைக்காடு.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

(35412)(8.8.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



வெற்றிலைக்கேணி,முள்ளியானைப் பிறப்பிடமாகவும்
கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

### கணபதிப்பிள்ளை கறுவல்தம்பி

(இளைப்பாறிய கிராம சேவையாளர், வடமராட்சி கிழக்கு)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளைமறுதினம்
21.03.2013 வியாழக்கிழமை காலை 05.00 மணியளவில்
அம்மன் கோயிலடி, கரணவாய்தெற்கு, கரவெட்டி என்ற
முகவரியில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து
11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
மதியபோசன நிகழ்விலும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் அன்னாரின் இறுதிச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும்
தொலைபேசி மூலம் அனுதாபச்செய்தி தெரிவித்தவர்களுக்கும்
துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள், கண்ணீர் அஞ்சலிகள்
வெளியிட்டவர்களுக்கும், அனுதாப உரையாற்றியவர்களுக்கும்
மேலும் பல வழிகளில் உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அம்மன் கோயிலடி,கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உப்பாக, ஒளியாக உலகிற்குச் சான்றாகுங்கள்"

திருச்சபை என்ற மறை உடலின் தலையாக இருப்பவர் கிறிஸ்து உடலின் அங்கங்களாக இருப்பவர்கள் திருமுழுக்கின் மூலம் இறை மக்களாக்கப்பட்ட ஒவ்வொருவருமாவர். திருச்சபையின் செயற்பாடுகள் நிறைவுள்ளதாக அமைய தலைமையின் வழி நடத்துதல் முக்கியமானதாகும். மறையுடலாகிய திருச்சபையை கிறிஸ்து கண் காணா முறையில் வழி நடத்தினாலும் மானிடப் பிரதிநிதி ஒருவர் மூலமே நாம் கண்ணால் காணக்கூடிய பரிசுத்த திருச்சபையை பாப்பரசரை தம்முடைய வாரிசாக ஏற்படுத்தி கிறிஸ்து திருச்சபையை வழி நடத்தி வருகின்றார். இதன் அடிப்படையிலே பேதுரு முதல் பாப்பரவாக இருந்து அவரின் வழி வந்தவர்களாக தொடர்ந்து வரும் பாப்பரசர்கள் திருச்சபை ஒளியாக, உப்பாக திகழ வழி நடத்தி வருகின்றனர்.

எம்முடைய வாழ்வு சாரமுள்ள உப்பாகவும், மலைமேல் ஒளிர்கின்ற ஒளியாகவும் மற்றவர் வாழ்வில் அமையவேண்டும என்பதை எடுத்துக் காட்டவே இவ்வாறு கூறினார். தவக்காலத்தில் நாம் கடைப்பிடிக்கும் தப, செப, ஈகைச் செயல் கள் உப்பாக, ஒளியாக எம்மை வெளிப்படுத்துகின்றனவா? எம்முடைய தனிப்பட்ட வாழ்விலே எம்மை மற்றவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதைச் அியாக இனங்கண்டு கொள்ளும்படியான வாழ்வு மாதிரிகைகள் எம்மிடம் உண்டா? அல்லது தவறாக எடைபோடும் வாழ்வைத்தாம் நாம் வாழ்ந்து கொண்டு மரக்காலின் கீழுள்ள ஒளிபோல பயனற்றவர்களாக வாழ்கின்றோமா? உங்களை மற்றவர்கள் இல்லாதது பொல்லாதது எல்லாவற்றையும் சொல்லி குற்றம் சாட்டும் போது, நீங்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றீர்கள்? இருளகற்றும் ஒளிகளா? இருள் பரப்பும் இருள்களா?




உப்புச் சப்பற்ற வாழ்வு சுவையில்லாதது. சுவை கொடுக்கின்ற உப்பே சாரமுள்ளது. எம்முடைய வாழ்வு மற்றவர்களுக்கு பயன்கொடுக்கின்ற வாழ்வா? அப்படி என்றால் இயேசு கூறிய சாரமுள்ள உப்புக்கள் நீங்கள். எம்முடைய வாழ்வு மற்றவர்களுக்கு இடையூறாக மற்றவர்களைத் துன்பத்துக்கு உட்படுத்துவதாக இருக்குமானால் நாம் சாரமற்ற உப்புக்களாக இருந்து ஊட்டமளிக்காமல் ஊறு விளைவிக்கின்றவர்களாக சமுதாயத்துக்கு பாரமுள்ளவர்களாக இருக்கின்றோம். உண்மையுள்ள வாழ்வு துன்புறும் வாழ்வு, தியாகம் நிறைந்த வாழ்வு, இயேசுவின் ஒளி மூலமாக ஒளிர்வதைச் சாட்சியம் பகர்கின்றது. மாறாக தற்புகழ்ச்சியும், வெளிவேடமும், கபடமும் நிறைந்த வாழ்வு எம்முடைய உலகியற் போக்கை வெளிப்படுத்தி நிற்கின்றது. நாம் இயேசுவின் சாட்சிகளா? உலகத்தின் சாட்சிகளா?

- அன்ரனி பீற்றர்- ஆசிரிய ஆலோசகர்- (RC)

## இந்திய மீனவர் வைத்தியசாலையில்

வவுனியா, மார்ச் 19

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர் ஒருவர் சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் 19 இந்திய மீனவர்கள் கடந்த புதன் கிழமை இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த பாலமுருகன் (வயது-19) என்பவரே நோய்வாய்ப்பட்ட நிலையில் கையில் விலங்குடன் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன்வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ஐ-400-402)


**படி வான் விற்பனைக்கு**

**மகேந்திரா படி வான் விற்பனைக்கு.**

சுந்தரம் ஸ்ரோர்ஸ், சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.


## தாமதமாகக் கொடுப்பனவு பட்டதாரிப் பயிலுநர் சிரமம்

யாழ்ப்பாணம், மார்ச் 19.

மருதங்கேணிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு கடந்த மாதத்துக்கான சம்பளம் நேற்றே வழங்கப்பட்டது. இதனால் தாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டதாக பட்டதாரிப்பயிலுநர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்த மாதத்துக்கான சம்பளம் தமக்கு எப்போது கிடைக்கப் போகிறதோ என்றும் அச்சம் வெளியிட்டுள்ளனர். மருதங்கேணிப் பிரதேச செயலகத்தில் 54 பட்டதாரிப் பயிலுநர்கள் பிரதேச செயலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் கடமையாற்றி வருகின்றனர்.

இந்தப் பிரதேச செயலகத்துக்கென நிரந்தரக் கணக்காளர் ஒருவர் இல்லாத காரணத்தாலே சம்பளக் கொடுப்பனவு தாமதமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பளக் கொடுப்பனவுகள் தாமதமடைந்ததால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டதாக பட்டதாரிப் பயிலுநர்கள் தெரிவிக்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு தமக்கான மாதாந்த சம்பளக் கொடுப்பனவை தாமதமின்றி வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் கோரியுள்ளனர். (ஐ-14)




உ

-ஜெய்குருதேவ்-

உங்களை உணருங்கள்!

அன்பிலே மலருங்கள்!!

வாழும் கலைப்பயிற்சி பாகம் II

இடம்- சைவபரிபாலன சபை மண்டபம், நீராவியடி

காலம்- 23,24,25,26/03/2013 காலை 6 மணியில் இருந்து மாலை வரை

எமக்குள்ளே இருக்கும் ஆன்மபலத்தை உணரச்செய்து வேண்டாத பழக்கவழக்கங்களில் இருந்து எம்மை விடுவித்து எண்ணம் செயல், சொல் என்பவற்றில் சத்தியத்தை நிலைநிறுத்தும் அற்புதமான பயிற்சி. **பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி** அவர்களால் சிறப்பாக வடிவமைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக நடைபெறுகிறது. *பாகம்* I (Basic Course) எடுத்த அனைவர்களும் கலந்து பயன்பெற அழைக்கின்றோம்.

தொலைபேசி இலக்கங்களுக்கு பதிவுகளை செய்யவும்.

0776655408/0777607008/0774184484

குறிப்பு- தூர இடங்களில் வசிப்பவர்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.

**வாழும் கலைமையம்**
**யாழ்ப்பாணம்.**


## திருவிழா திருப்பலி

வடமராட்சி, மார்ச் 19

புலோலி சூசையப்பர் தேவாலய வருடாந்த திருவிழாத்திருப்பலி இன்று 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும். கூட்டுத் திருப்பலியும், திருச்சொருப சுற்றும் பிரகாரத்துடனும் திருவிழா நிறைவுபெறும்.

கடந்த 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் இத்திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-8)

## வெளியீட்டுவிழா

அச்சுவேலி, மார்ச்19

அச்சுவேலி மத்திய கல்லூரியின் சஞ்சிகை ''அச்சுமத்திய தீபம்-3'' வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அரங்கில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் வே. அரசசேகரி தலைமையில் நடைபெறும் சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக வடக்குமாகாண கல்வித்திணைக்கள மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (பொதுநிர்வாகம்) முத்து இராதாகிருஷ்ணனும் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் க. சற்குணராசா அவர்களும் கலந்து கொள்வர்.

நூல்ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அ. பௌநந்தி நிகழ்த்துவார்.

(ம-11)


**ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 25.05.1955

மறைவு 19.03.2006

அமரர் **செல்லக்கண்டு சந்திரோதயம்**

ஆண்டு ஏழு போனாலும் அம்மா
நாம் உம் மீது கொண்ட பாசம் மாறாது
என்றும் உம் நினைவோடு வாழுவோம் அம்மா

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. குடும்பத்தினர்.

(3542)


# மரண அறிவித்தல்

## செல்லப்பா வல்லிபுரம்

**(ஆயுர் வேத வைத்தியர்-தங்கபாஸ்கரன் வைத்தியசாலை நல்லூர்-உரும்பிராய்-புங்குடுதீவு)**



இராணி வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், இராச வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக கொழும்பில் வசித்தவருமான செல்லப்பா வல்லிபுரம் அவர்கள் (16.03.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வ.செல்லப்பா(ஆயுர்வேத வைத்தியர்)-பூரணம்(ஆயுர்வேத வைத்தியர்) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கா.சிவசாமி(ஆயுர்வேத வைத்தியர்)-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் பாஸ்கரன், சுதாகரன், சகீலா, ரோகிணி ஆகியோரின் அன்புத்தந்தையும் விஜயலக்சுமி, அனுசுயா, யோகேந்திரன், கேதீசன் ஆகியோரின் அன்புமாமனாரும், காலஞ்சென்ற சண்முகநாதன்(முன்னாள் வான் படை உத்தியோகத்தர்) மற்றும் இராசலக்சுமி, சுந்தரலிங்கம்(ஆயுர்வேத வைத்தியர்) ஆகியோரின் அன்புச்சகோதரரும், மனோன்மணி (இளைப்பாறிய ஆசிரியை), இராஜேஸ்வரி, அமிர்தலிங்கம், பரராஜசிங்கம்(இ.மி.ச) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிவிதா, பிரநோவன், மிதுனா, சுஜேன், சுவேதா, சஞ்சை, அகீஸ், சுரோமி, பிரவீன், அபிராம், அஸ்வின், அபிசன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.03.2013 வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.01, இராச வீதி, நல்லூர். தகவல்: குடும்பத்தினர்.

(35410)(8.6.7)

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம்



செங்குந்தா வீதி, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வடக்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம் நேற்று (18.03.2013) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கந்தையா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், பகீரதி (ஆசிரியை, யா/கனகரத்தினம் ம.ம.வி) தேவகி(ஆசிரியை நாவலர் முன்பள்ளி மீசாலை), மனோகரன்(சாரதி, இ.போ.ச) , கயல்விழி, சதயகுமாரி(கிளிநெச்சி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை), ஆகியோரின் பாசமிகு தந்தையும், பேரின்பராஜா, ஜெயராஜா, அருந்ததி, நக்கீரன்(ஆசிரியர், வவு/ கல்நாட்டியகுளம் வித்தி.) ஆகியோரின் அன்பு மாமனும், தேவகுமாரன்(யா/சென்ஸ் ஜோன்ஸ் கல்லூரி), தேவப்பிரயா(யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இயலினி(யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) விசாகன், அக்சயன், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.03.2013) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கச்சாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வடக்கு, கொடிகாமம் தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனக் கடன் செலுத்தவே கொள்ளையில் ஈடுபட்டோம்

தென்மராட்சி மார்ச் 19
''தவணை முறையில் வாங்கிய வாகனங்களுக்கான கட்டுப் பணத்தைச் செலுத்த முடியாமல் போனதாலேயே வேறுவழியின்றி கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டோம்.''

இவ்வாறு தெரிவித்திருக்கிறார்கள், அண்மைக்காலமாகக் குடாநாட்டைக் குலை நடுங்கச் செய்த கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த வர்கள்.

அண்மையில் கைதடிப் பகுதியில் பெண்ணொருவரின் சங்கி லியை அபகரித்துக் கொண்டு ஓடிய திருடனொருவன் பொது மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தான். அவன் கொடுத்த தகவலின் அடிப்படையில் குடாநாட்டில் மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வீதியில் பயணிப்போரின் ஆபரணங்களை அபகரித்தல், வீடுகளில் புகுந்து ஆயுதங்களைக் காட்டி மிரட்டி பொருள்களைச் சூறையாடுதல் போன்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கும்பலைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இவர்களிடம் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் போதே, தாம் தவணை முறையில் வாங்கிய வாகனங்களுக்கான கட்டுப் பணத்தைக் கட்டுவதற்காகவே இத்தகைய கொள்ளையில் இறங்கியதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை தென்மராட்சி பிரதேசத்தில் இடம் பெற்ற திருட்டுக்களின்போது பொதுமக்கள் பறிகொடுத்த பெருமளவு பொருள்களை பொலிஸார் மீட்டுள்ளனர். எனவே அவற்றை பறிகொடுத்தவர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தமது பொருட்கள் உள்ளதா என்பதை உறுதிப்படுத்துமாறும், திருட்டுடன் தொடர்புடையவர்களை அடையாளம் காட்ட உதவுமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (ங-9)

# வடக்கில் மீன்பிடிக்கு தொடர்ந்தும் 'பாஸ்'

யாழ்ப்பாணம்,மார்ச்19
வடக்கு மாகாணத்தின் எந்தவொரு பகுதியிலும் கடற்றொழிலுக்குச் செல்வதற்கு 'பாஸ்' நடைமுறை தேவையில்லையென்று வடக்கு கடற்படைக் கட்டளை அதிகாரி றியல் அட்மிரல் உடவத்த தெரிவித்துள்ள போதும், பல பகுதிகளில் 'பாஸ்' நடைமுறை இன்னமும் தொடர்வதாக வடமாகாண கடற்றொழிலாளர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

பொன்னாலைக் கடற்படை முகாமில் கடந்த 7 ஆம் திகதி மாதகல் கடற்படை அதிகாரி தலைமையில் கடற்றொழிலாளர்களுக்கும், கடற்படையினருக்கும் இடையில் கலந்துரையாடலொன்று இடம் பெற்றது.

இதன் போது கடற்படையினரின் 'பாஸ்' நடைமுறை தொடர்வதாக அந்தப் பகுதி மீனவர்களால் சுட்டிக்காட்டப் பட்டிருந்தது.

அதற்குப் பதிலளித்திருந்த வடமாகாண கடற்படைகளின் கட்டளை அதிகாரி றியல் அட்மிரல் உடவத்த,

நாட்டில் எந்தப் பகுதியிலும் 'பாஸ்' நடைமுறை கிடையாது. வடபகுதியிலும் 2012 ஆம் ஆண்டின் நடுப் பகுதியுடன் அது நிறுத்தப் பட்டு விட்டது. தற்போது தொழிலாளர்களின் நன்மை கருதி பெயர்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன என்று கூறியிருந்தார்.

ஆனாலும் இன்னமும் கடற்படையினரின் 'பாஸ்' நடைமுறை தொடர்வதாக மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். காரைநகரில், வடக்குக் கடற்படைக் கட்டளை அதிகாரியின் அறிவிப்பு வெளியாகிய பின்னர், புதிய 'பாஸ்' பெற்றுக் கொள்ளுமாறு மீனவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மாதகல், மண்டைதீவு, சுழிபுரம் ஆகிய பிரதேசங்களிலும் கடற்படையினரின் 'பாஸ்' நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

போர் முடிவடைந்த பின்னர் இந்த 'பாஸ்' நடைமுறை எதற்காகப் பின்பற்றப்படுகிறது என்றும் அவர்கள் கேள்வியெழுப்பினர். (த-5)

# 48 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

## வடக்கில் வியாழனன்று

யாழ்ப்பாணம்,மார்ச்19
வடக்கு மாகாணப் பட்டதாரிகள் 48 பேருக்கு, ஆயிரம் இடைநிலைப் பிரிவு பாடசாலைத் திட்டத்தின் கீழ் பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு மத்திய கல்வி அமைச்சில் வைத்து வழங்கப்படவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

பெலவத்த, பத்திரமுல்லையில் அமைந்துள்ள கன கேந்திர நிலையத்தில் வைத்து இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளது.

நியமனம் பெற்றுக் கொள்ளும் பட்டதாரிகளின் விவரம் பின்வருமாறு:-

திருமதி கருணானந்தன் பாலினி (838323448V), செல்வி ஆரணி பில்வ மங்களம் (837241600V), திருமதி விஜிதன் ரேணுகா (827852597V) செல்வி நர்மதா நாகேந்திரராசா (857062337V), செல்வி தபோதினி வேலுப்பிள்ளை (796322306V), செல்வி நிஷானாபேகம் முகம்மது ஹனீபா (855671204V), திருமதி தர்சிகா சியாமளரூபன் (816442737V), கஜேந்திரன் கணேசலிங்கம் (820764730V), இராசையா கமலதாசன் (851562583V), திருமதி அன்ரன் பிரான்சிஸ் அனற் பொப்சி (838340210V),

லோகேஸ்வரன் செந்தூரன் (810793538V), ராஜேந்திரா சீலன் (862382137V), செல்வி மேரி சிபானி அல்போன்ஸ் குரூஸ் (857482913V), திருமதி துளசி சிறீதரன் (857741340V), திருமதி அனுராதா மதன் (845134120V), செல்வி யசோதரா பில்வமங்களம் (826582170V), செல்வி தேவகி செல்வநாதன் (837132410V), நடராசா தமிழ்ச்செல்வன் (771472923V), செல்வி சோபனா இராசகுரு (846382178V), செல்வி வினுஜா தாமோதரன் (828360230V),

செல்வி துவாரகா விவேகானந்தன் (837070384V), செல்வி சியாமளா பத்மநாதன் (857002296V.), செல்வி கவிதா இராசேஸ்வரன் (857972015V), சிவராசா தினேஸ்குமார் (842821665V), திருமதி முகம்மது சாஹால் ஹமீது ஸாஜிதா (838110827V), கிருஸ்ணமூர்த்தி பிரஷாந்தன் (852591234V), திருமதி யசோதினி லஷ்மிவாசன் (816642825V), கனகரத்தினம் சிவசுதன் (830201726V), திருமதி வரலட்சுமி பத்மநாதன் (826772263V), செல்வராசா சதீசன் (782960571V),

திருமதி மாதங்கி மதியழகன் (848252050V), சச்சிதானந்தம் சந்திரகுமார் (852553405V), சுப்பிரமணியம் ஞானேஸ்வரன் (762564548V), சுந்தரலிங்கம் அருட்சுனன் (801973507V), செல்வி அகிலா பொன்குமார் (867953000V), கனேஸ்வரன் பார்த்தீபன் (831182105V), சின்னராசா ரஜீபன் (802501560V), பாலசுப்பிரமணியம் மயூரன் (800613728V), திருமதி சுபாஜி ஞானகுமார் (806992801V), சிவஞானசேகரம் அம்பிகாபதி (820564227V),

திருமதி அல்போன்சா றெயினோல்ட் சேவியர் (817140238V), இரத்தினசிங்கம் நவரூபன் (803512175V), தம்பிராசா அகிலேந்திரன் (821883563V), செல்வி சிந்துஜா சமதர்மபாலன் (847664517V), செல்வி வராகி வடிவேல் (855041561V), சத்தியானந்தன் தவசீலன் (821953510V), அமிர்தலிங்கம் அச்சுதன் (812790994V), சிற்சபேசன் மயூரன் (802363168V).

(த-5)

# மார்ச் 18 இல் சிவில் விமான தினம்

கொழும்பு,மார்ச் 19
மார்ச் 18ஆம் திகதியை சிவில் விமான தினமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியுள்ளார்.

சர்வதேச விமான நிலையமான மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.(த)

# புதிய கட்சி ஆரம்பிக்கும் முயற்சி பிசுபிசுப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 19
முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் ரணில் விக்கிரம சிங்க, மஹிந்த அரசின் அமைச்சர்களான டிலான் பெரேரா, ராஜித சேனாரத்ன ஆகியோரை ஒருங்கிணைத்து, நேற்றுமுன்தினம் இடம்பெறவிருந்த கட்சி ஆரம்ப நிகழ்வுக்கு மேற்குறித்த எவருமே வராமையால் அது பிசுபிசுத்துப் போனது.

எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில் முஸ்லிம் - தமிழ்த் தேசிய முன்னணி என்ற பெயரில் இயங்கிய கட்சியைத் தேசிய ஐக்கிய முன்னணி என்ற பெயரில் புதிய கட்சியாகத் தொடங்க அஸாத் சாலி முடிவு செய்திருந்தார்.

எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில் உள்ள ஒரு சில கட்சித் தலைவர்கள் மாத்திரமே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-5)

# சர்வ கட்சி மாநாட்டை 22 க்கு முன் நடத்துக

## அரசிடம் கோருகிறார் ரணில்

கொழும்பு, மார்ச் 19
சர்வ கட்சி மாநாட்டை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் அரசு கூட்டிச் சர்வதேச அழுத்தங்களில் இருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டுமென எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 21 திகதி இலங்கைக்கு எதிராக வெளியாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் பிரேரணைக்கு முன்னர் அரசு சர்வகட்சி மாநாட்டை நடத்திச் சர்வதேச அழுத்தத்தில் இருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டும்.

இந்த நிலையில் எமது நாட்டை லிபியாவைப் போலவோ இல்லது சிரியாவைப் போலவோ வருவதற்கு எம்மால் அனுமதிக்க முடியாது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்த வேண்டும்- என்றார். (த)


## வாடகைக்கு/ குத்தகைக்கு

யாழ். கே.கே.எஸ். வீதி யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் வெற்றுக்காணி வாடகைக்கு/ குத்தகைக்கு உண்டு.
தனியார் வகுப்புகள் நடத்த உகந்தது.
தொடர்புகளுக்கு: 0777464695


# மரண அறிவித்தல்

## நல்லையா கண்மலர்



ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி நல்லையா-கண்மலர்கடந்த (16.03.2013) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நல்லையாவின் அருமை மனைவியும், புவனேந்திரன் (றாசன்-ஓய்வு பெற்ற ஊழியர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்), புஸ்பராணி(கனடா), புவனபாஸ்கரன்(கனடா), புஸ்பலதா(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், தனேஸ்வரி(ஓய்வுபெற்ற ஆசிரியர், றோ.க.ப. அளவெட்டி தெற்கு), சற்குணலிங்கம்(கனடா), நிரஞ்சானதேவி(கனடா), தவசீலன்(கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும், சஜீபன்(இத்தாலி), தனுஜா, கௌசிக், காயத்திரி, சாருகா, சரணிகா, காவ்யா, றம்யா, சந்தியா, சுபன், தர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கவீனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2013) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.அன்றையதினம் பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானையில் உள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் துக்கம் அனுஸ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை,
077 4713981

தகவல்:
ந.புவனேந்திரன்(மகன்)

# மரண அறிவித்தல்

## அன்ரன் ஜெயக்குமார்(செல்லக்குமார்)



ஊறணி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், மாரீசன்கூடல் இளவாளையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் ஜெயக்குமார்(செல்லக்குமார்) நேற்று(18.03. 2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வஸ்தியாம்பிள்ளை ஞானப்பிரகாசம் (செல்லையா)- எலிசபெத் தம்பதியரின் அன்பு மகனும், மேரிகெலன் வசந்தராணியின் அன்புக் கணவரும், அன்ரன் ஜெயராஜ், அன்ரன் வசந்தகுமார், அன்ரன் உதயகுமார், அன்ரன் விஜியகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (20.03.2013) புதன்கிழமை மாலை 3.00மணிக்கு புனித கயித்தார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித கயித்தார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாரீசன்கூடல், இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகராயன்குளம், புளியங்குளம் எல்லேயில் வென்று சம்பியன்

வவுனியா, மார்ச் 19

நெடுங்கேணி கோட்டப் பாடசாலைகளுக்கிடையே எல்லே சுற்றுப் போட்டியின் ஆண்கள் பிரிவில் கனகராயன்குளம் மகாவித்தியாலயமும், பெண்கள் பிரிவில் புளியங்குளம் இந்துக் கல்லூரியும் சம்பியன்களாகின.

வவுனியா வடக்கு, நெடுங்கேணி கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான எல்லே சுற்றுப் போட்டிகள் புளியங்குளம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கனகராயன் குளம் மகாவித்தியாலய அணியும், நெடுங்கேணி மகாவித்தியாலய அணியும் மோதின.

30 பந்துகளைக் கொண்ட இறுதியாட்டத்தில் இரு அணி வீரர்களும் எந்தவொரு ஓட்டத்தினையும் பெறாத நிலையில் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக மேலும் 10 பந்துகள் வழங்கப்பட்டன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கனகராயன் குளம் மகாவித்தியாலய அணி 8 ஆவது பந்தில் கஜனின் துணையுடன் ஒரு ஓட்டத்தை மட்டும் பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய புளியங்குளம் இந்துக் கல்லூரி அணி இரண்டாவது பந்திலேயே ஒரு ஓட்டத்தைப் பெற்றுக்கொள்ள ஆட்டம் விறுவிறுப்பை அடைந்தது.

புளியங்குளம் இந்துக் கல்லூரி அணியினர் மேலும் ஒரு ஓட்டத்தைப் பெற்றுச் சம்பியன்களாக வேண்டும் என்ற துடிப்புடன் துடுப்பெடுத்தாடினர். ஆனால் வெற்றி கொள்ளவிடமாட்டோம் என்ற நிலையில் கனகராயன்குளம் மகாவித்தியாலய அணியினர் தமது களத்தடுப்பு வியூகங்களை மாற்றி அமைத்து ஓட்டம் பெறுவதனைத் தடை செய்தனர்.

இறுதியில் இரு அணியினரும் 1:1 என்ற ஓட்டங்களில் சம நிலை பெற்றிருந்தனர். இதனால் நாணயச் சுழற்சியின் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் கனகராயன் குளம் மகாவித்தியாலய அணி வென்று சம்பியனானது.

இதில் மூன்றாமிடத்தை ஒலுமடு அ.த.க. பாடசாலை பெற்றுக் கொண்டது. அடுத்து இடம்பெற்ற பெண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டியில் புளியங்குளம் இந்துக் கல்லூரியும், சின்ன அடம்பன் பாரதி வித்தியாலயமும் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய புளியங்குளம் இந்துக்கல்லூரி அணியைச் சேர்ந்த டனுசியா 5 ஆவது, 13 ஆவது, 17 ஆவது, மற்றும் 21 ஆவது பந்துகளில் 4 ஓட்டங்களைப் பெற்று அசத்தினார்.

இதனால் அதிர்ச்சிக்குள்ளான எதிரணியான சின்ன அடம்பன் பாரதி வித்தியாலய அணி எந்தவித ஓட்டங்களையும் பெறாது ஆட்டமிழந்தது. இதனால் 4:0 என்ற ஓட்டங்களை புளியங்கூடல் இந்துக் கல்லூரி அணி வென்று சம்பியனானது.

இதில் மூன்றாமிடத்தினை நெடுங்கேணி மகாவித்தியாலய அணிபெற்றுக் கொண்டது.

(த-400,422)

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி விநாயகர் சனசமூக நிலையம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு - 7மணி

தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் சங்குவேலி ஐக்கியம் விளையாட்டுக்கழகம்

★ ★ ★

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும், அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு :-

பி.ப 3 மணி

சக்கோட்டை சென் சேவியார் விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் மைக்கல் விளையாட்டுக் கழகம்.

பி.ப. 4 மணி

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ விளையாட்டுக் கழகம் எதிர் பொமர்ஸ் விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான மேசைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 மணி முதல் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

(த-288-23-400-422)

## வெற்றிக் கிண்ணம் இணுவில் அண்ணாவுக்கு



வலி. வடக்கு, மார்ச் 19

உடுவில் பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கபடிப் போட்டியில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் பிரதேச சம்பயனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் ஐயனார் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகமும், சுன்னாகம் ஐயனார் இளைஞர் சேவைகள் மன்றமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் உற்சாகமாக ஆரம்பத்தில் மோதிக் கொண்டாலும் அண்ணா இளைஞர் சேவைகள் மன்றத்தின் கைகள் ஓங்கிய நிலையில் முதல் பாதி ஆட்டத்தில் 23: 12 புள்ளிகள் என்ற முன்னிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் அண்ணா இளைஞர் சேவைகள் மன்றம் முன்னிலை பெற்ற நிலையில் 21:15 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் அண்ணா இளைஞர் சேவைகள் மன்றம் 44 : 27 புள்ளிகள் என்ற அடிப்படையில் ஐயனார் இளைஞர் சேவைகள் மன்ற அணியை வெற்றி பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. கடந்த சனிக்கிழமை இந்தப் போட்டிகள் இடம்பெற்றன.

(த-86)

## கபடியில் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 19

மன்னார் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் பேசாலை சென்.விக்ரறிஸ் விளையாட்டுக்கழகம், பெண்கள் பிரிவில் பனங்கட்டி கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றி பெற்றுச் சம்பியன் ஆகின.

ஆண்கள் பிரிவில் விக்ரறிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து எவகிறின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் பேசாலை விக்ரறிஸ் விளையாட்டுக்கழக அணி 32:31 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

பெண்கள் பிரிவில் பனங்கட்டிகொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து பேசாலை விக்ரறிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி 38:5என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

(த-23)

## ஆறு அணிகள் அடுத்த சுற்றுக்கு

கரணவாய்,மார்ச் 19

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்குப் பதினொரு வீரர்கள் பங்கு பற்றும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம், நவிண்டில் விளையாட்டுக் கழகம், சிவானந்தா விளையாட்டுக்கழகம், நக்கீரன் விளையாட்டுக்கழகம், கருணாகரன் விளையாட்டுக் கழகம் மற்றும் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகிய 6 அணிகளும் வெற்றியீட்டி அடுத்த கட்டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் அணி விளையாட்டுக்கழகம், உடுப்பிட்டி விளையாட்டுக் கழகத்தை 4:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் கரவை சுடர் விளையாட்டுக் கழகத்தை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. அன்றைய தினம் இடம் பெற்ற மற்றொரு ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை தண்டனை உதை மூலம் 3:1 என்ற கோல் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் பருத்தித்துறை விண்மீன்கள் விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டும், நவிண்டில் கொலிஸ் விளையாட்டுக் கழகம் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகத்தை 1:0 என்ற கோல் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை 1:0 என்ற கோல் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

(த-400)

## பரபரப்பான ஆட்டத்தில் வென்றது சென். பீற்றர்ஸ்

கரணவாய், மார்ச் 19

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பரபரப்பான ஆட்டம் ஒன்றில் சென். பீற்றர்ஸ் அணி அண்ணா சிலை இளைஞர் விளையாட்டுக் கழக அணியைத் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

**இரு அணி வீரர்களின் ஆட்டங்களினால் இரு பக்கங்களிலும் கோல் பகுதியை அடிக்கடி பந்து ஆக்கிரமித்த வண்ணம் இருந்த போதும் கோல் பெறும் வாய்ப்புக் களை இரு அணியினரும் தவறிவிட்டனர்.**

அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் வடமராட்சி பிரதேசத்துக்கு உட்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இமையயாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.

இதில் ஆட்டம் ஒன்றில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணியும், அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழக அணியும் மோதின.

ஆட்டம் தொடங்கி முடியும் வரை மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் எந்த அணி வெற்றி பெறும் என்று கூறமுடியாத அளவுக்கு ஆட்டத்தில் அனல் பறந்தது. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் தத்தமது அணிக்கான கோலைப் பெறும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இதனால் இரு அணி வீரர்களின் ஆட்டங்களினால் இரு பக்கங்களிலும் கோல் பகுதியை அடிக்கடி பந்து ஆக்கிரமித்த வண்ணம் இருந்த போதும் கோல் பெறும் வாய்ப்புக்களை இரு அணியினரும் தவறிவிட்டனர்.

இரு அணியினரும் கோல் பெறாத நிலையில் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் போட்டியில் இறுக்க நிலை காணப்பட்டது. இரு அணியினரும் வெற்றிக் கோலைப் பெறுவதற்காக கடுமையாகப் போராடினர். இந்நிலையில் சென். பீற்றர்ஸ் அணி வீரர் அசோக் தனக்குக் கிடைத்த பந்தை எந்தவித பதற்றமும் இன்றி கோல் கம்பத்துக்குள் புகுத்தி கோல் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தார். இந்தக் கோலை அந்த அணியின் வெற்றிக் கோலாகவும் அமைந்தது.

இதன் பின்பு இரு அணியினரும் பெரும் முயற்சிகளை மேற்கொண்ட போதும் கோலைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இறுதியில் சென். பீற்றர்ஸ் அணி 1:0என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

அதற்கு முன்னர் இடம் பெற்ற மற்றொரு ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம், சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இதில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (த-400-422)

## சதுரங்கத்தில் வென்றோர்

யாழ்ப்பாணம், மார்ச் 19

இலங்கைச் சதுரங்கச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட இளையோருக்கான சதுரங்கத் தெரிவுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளின் பெயர் விவரங்கள் வருமாறு:-

6 வயதுக்கு உட்பட்டோர் (ஆண்கள் பிரிவு)

1ஆம் இடம் - எ.தரன், 2ஆம் இடம் - திவ்வியன், 3ஆம் இடம் -ஜே.யாதவன்.

8 வயதுக்கு உட்பட்டோர்

1ஆம் இடம் -எ.ஆருத்ரன், 2ஆம் இடம் - ஜே.ஆரகன், 3ஆம் இடம் - எஸ்.ஆர்த்திகன்.

10 வயதுக்கு உட்பட்டோர்

1ஆம் இடம் - எஸ்.அனேஜ், 2ஆம் இடம் - எ.ஜயந்தன், 3ஆம் இடம் - எ.லக்ஷிகன். ஜெயந்த்.

12 வயதுக்கு உட்பட்டோர்

1ஆம் இடம் - லக்ஷனன், 2ஆம்இடம்- ஜே.ரிஷிகோபன், 3ஆம் இடம் - என்.மாதவன்.

14 வயதுக்கு உட்பட்டோர்

1ஆம் இடம் - ரி.அபினேஷ், 2ஆம் இடம்- வெரோஷன், 3ஆம் இடம்- கே.சாருஜ்.

16 வயதுக்கு உட்பட்டோர்

1ஆம் இடம் - எஸ்.விஜேசாந், 2ஆம் இடம் - தனுசியன்,3ஆம் இடம்- சிந்துஜன்.

18 வயதுக்கு உட்பட்டோர்

1ஆம் இடம் -ப.அருண்ராஜ், 2ஆம் இடம் - மதுஷன், 3ஆம் இடம் - ஞே.சிந்துஜன்.

6வயதுக்குஉட்பட்டோர் (பெண்கள்பிரிவு)

1ஆம் இடம் - ஜே.அஸ்மிலா, 2 இடம் - பி.நதுஷா, 3ஆம்இடம் -ஜே.கஜானி.

8 வயதுக்கு உட்பட்டோர்

1ஆம் இடம் - ஜே.அஸ்வினி, 2 இடம்- எஸ்.ஆரபி, 3ஆம்இடம்- ரி.அனுஜிற்றா.

10 வயதுக்குஉட்பட்டோர்

1ஆம் இடம் -கே.தரங்கா, 2 ஆம் இடம் - எஸ்.மதுமிதா, 3ஆம்இடம்- ஜே.துஷ்யந்தி.

12 வயதுக்கு உட்பட்டோர்

1ஆம் இடம் -எஸ்.மிருதி, 2 இடம் - ஆர். கம்ஷாயினி, 3ஆம்இடம் -ஆர். மாதங்கி

14 வயதுக்கு உட்பட்டோர்

1ஆம் இடம் - எ.சேனுகயானா, 2ஆம் இடம் - ரி.மதுராங்கி, 3 ஆம்இடம் - ஆர். விஜித்திரா.

16 வயதுக்கு உட்பட்டோர்

1ஆம் இடம் -சுமித்ரா தேவகி, 2 ஆம் இடம் - ஹம்சாயினி, 3ஆம் இடம்- ஏதீபிகா.

18 வயதுக்கு உட்பட்டோர்

1 ஆம் இடம் -ஸ்ரீ.தர்ஷிகா, 2 ஆம்இடம் - பகீரதி. (த-23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அம்லா, டிவில்லியர்ஸ் சதம்

## வெற்றி தென்னாபிரிக்கா வசம்

பாகிஸ்தான் அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்கு இடையிலான பரபரப்பான 3ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் தென்னாபிரிக்க அணி 34 ஓட்டங்களால் வெற்றி யீட்டியது.

ஜொஹன்னர்ஸ்பேர்க்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 343 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணி, ஒரு கட்டத்தில் 2 இலக்குகளை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதிலும், ஹசிம் அம்லா, ஏபி.டி.வில்லியர்ஸ் இருவரும் 3ஆவது இலக்குக்காக இணைந்து 238 ஓட்டங்களைக் குவித்தனர்.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஏபி.டி. வில்லியர்ஸ் 128 ஓட்டங்களையும், ஹசிம் அம்லா 122 ஓட்டங்களையும், பிளெஸிஸ் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் இர்பான், வகாப் றியாஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

344 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 48.1 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 309 ஓட்டங்களைப் பெற்று 34 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பாகிஸ்தான் அணி தோல்வியை நோக்கி நகர்ந்த சமயத்தில் சயீத் அப்ரிடி அதிரடியா ஆடித் திருப்புமுனையை ஏற்படுத்தினார். ஆயினும் அவர் 48 பந்துகளில் 7 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 88 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். இதன்பின்னர் தென்னாபிரிக்காவின் வெற்றி சுலபமானது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக றயன் மக்லரன், லொன்வபோ சொற்சொபி, றொபின் பீற்றர்சன் ஆகியோர் தலா 2 இலக்குக் களைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகர்களாக ஏபி.டி. வில்லியர்ஸ், ஹசிம் அம்லா இருவரும் தெரிவாகினர். இந்த வெற்றியின் மூலம் குறித்த தொடரில் தென்னாபிரிக்க அணி 2–1 என்ற கணக்கில் இத்தொடரில் முன்னிலை வகிக்கின்றது. [ந]



## மீண்டும் இந்தியாவுக்கு இரையானது ஆஸி.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரைக் கைப்பற்றியது.

இந்திய–ஆஸ்திரேலிய அணிகள் மோதும் 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மொஹாலியில் நடைபெற்றது. முதல் நாள் ஆட்டம் மழையால் நடைபெறவில்லை.

2 ஆவது நாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடி 408 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் ஆடிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 499 ஓட்டங்கள் குவித்தது. தவான் 187 ஓட்டங்களும், முரளிவிஜய் 153 ஓட்டங்களும் எடுத்தனர். சிடில் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

91 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை ஆடிய ஆஸ்திரேலியா 4 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 3 இலக்கு இழப்புக்கு 75 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஹியூக்ஸ் 53 ஓட்டங்களுடனும், லயன் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று போட்டியின் இறுதி நாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி இலக்குகளைத் தொடர்ச்சியாகப் பறிகொடுத்தது. இதனால் சகல இலக்குகளையும் இழந்து ஆஸி. அணி 223 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து 133 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய இந்திய அணி 33.3 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 136 ஓட்டங்கள் எடுத்து 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முரளி விஜய் 26 ஓட்டங்களும், புஜாரா 28 ஓட்டங்களும், விராட் கோஹ்லி 34 ஓட்டங்களும், சச்சின் 21 ஓட்டங்களும் எடுத்தனர். ஆட்டநாயகனாக ஷிகர் தவான் தெரிவானார்.

இதன் மூலம் 4 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 3:0 என்ற அடிப்படையில் இந்திய அணி தொடரைக் கைப்பற்றியது. [ந]

## போன வொட்சன் திரும்பி வந்தார்




இந்திய அணிக்கெதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் பங்குகொள்வதற்காக ஆஸ்திரேலிய அணியின் உப தலைவர் ஷேன் வொட்சன் இந்தியாவுக்கு மீண்டும் வரவுள்ளார்.

அணியை எவ்வாறு முன்னேற்றுவது என்ற அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறியதால், மூன்றாவது போட்டிக்கான அணியிலிருந்து ஷேன் வொட்சன் நீக்கப்பட்டிருந்தார்.

இதன்பின்னர் ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பியிருந்தார் ஷேன் வொட்சன். இந்தக் காலப்பகுதியில் அவர் மனைவி, குழந்தையை பிரசவித்திருந்தார். தற்போது நான்காவது போட்டியில் பங்குபற்றுவதற்காக அவர் இந்தியா வரவுள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் முதுகு உபாதையால் அவதிப்பட்டு வருவதால் அநேகமாக நான்காவது டெஸ்ட் போட்டியில் கிளார்க்குக்குப் பதிலாக ஷேன் வொட்சனே அணித் தலைவராகச் செயற்படவுள்ளார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. [ந]

## இலங்கை முன்னிலை



பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியை இலங்கை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்று வரும் இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய இலங்கை அணி ஆரம்பத்தில் இலக்குகளை இழந்து தடுமாறிய போதும் பின்னர் குமார் சங்கக்கார, சந்திமால் ஆகியோரின் அபார சதங்களின் உதவியோடு பலமான நிலையை எட்டியது. நேற்று முன்தினம் போட்டியில் இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுபெறும் போது, இலங்கை அணி 6 இலக்குகளை இழந்து 296 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் குமார் சங்கக்கார 127 ஓட்டங்களுடனும் நுவான் குலசேகர 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று ஆரம்பித்தபோது இலங்கை அணி, சங்கக்காரவை 139 ஓட்டங்களுடன் இழந்தது. அதன்பின் வந்த வீரர்கள் நிலைக்கவில்லை. விதானகே [12], ஹேரத் [3], எரங்கா [15], குலசேகர [22] ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற இலங்கை அணியின் முதல் இன்னிங்ஸ் 346 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு அதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் பலமான அடித்தளம் இட்டனர். எனினும் அதன்பின்னர் இலங்கை அணியின் எரங்காவும், ஹேரத்தும் கூட்டணி அமைத்து பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்ட முன்வரிசையைத் தகர்த்தனர். தமீம் இக்பால் 59 ஓட்டங்களுடனும், ஜாஹுருல் இஸ்லாம் 48 ஓட்டங்களுடனும், அஷ்ரபுல் 4 ஓட்டங்களுடனும், மொஹமதுல்லா ஓட்டமெதனையும் பெறாமலும் வீழ்ந்தனர். களத்தில் மோமினுல் ஹக் 36 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் முஸ்பிஹியூர் ரஹீம் 7 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

போட்டி முடிவடைய இன்னும் இரு நாள்கள் உள்ள நிலையில் இலங்கை அணி வெல்வதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளன. [ந]

## நடால், ஷரபோவா சம்பியன்

பரிபாஸ் பகிரங்க டென்னிஸ் தொடரில் ரபேல் நடாலும், மரியா ஷரபோவாவும் சம்பியனாகினர்.

அமெரிக்காவின் இந்தியனா வெல்ஸ் நகரில், பி.என்.பி., பரிபாஸ் பகிரங்க டென்னிஸ் தொடர் நடைபெற்றது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியை 6:2, 6:2 என்ற நேர் செற்களில் எளிதாக வென்று சம்பியன் ஆனார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் ஸ்பெயினின் ரபேல் நடால், அர்ஜென்டினாவின் ஜுவான் மார்டின் டெல் பெட்ரோவை சந்தித்தார். இதில் முதல் செற்றை 4:6 என்ற ரீதியில் நடால் கோட்டைவிட்டார். பின்னர் எழுச்சி பெற்ற நடால் அடுத்த இரு செற்களையும் 6:3, 6:4 என்ற ரீதியில் தன்வசப்படுத்தி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தார். [ந]

## சமனிலை

இங்கிலாந்து அணிக்கும், நியூஸிலாந்து அணிக்குமிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

வெலிங்டனில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஜொனதன் ட்ரொட்டின் 121 ஓட்டங்கள், நிக் கொம்ப்டனின் 100 ஓட்டங்கள், மற் பிரயரின் 82 ஓட்டங்கள், கெவின் பீற்றர்சனின் 73 ஓட்டங்களின் துணையோடு 465 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக புரூஸ் மார்ட்டின் 4 இலக்குகளையும், ட்ரென்ட் போல்ட்ற், நீல் வக்னர், கேன் வில்லியம்ஸன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து [illegible] களையும், பிஜே.வற்லிங் 60 ஓட்டங்களையும், கேன் வில்லியம்ஸன் 42 ஓட்டங்களையும் பெற்ற போதிலும், அந்த அணி 254 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி [illegible] இலக்குகளைக் கைப்பற்றினார்.

"பொலோ – ஒன்" முறையில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 2 இலக்குகளை இழந்து 162 ஓட்டங்களை நான்காம் நாள் முடிவில் பெற்றிருந்தது. ஆயினும் 5ஆம் நாள் ஆட்டம் மழை காரணமாக இடம்பெறாததால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. [ந]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
advt@uthayan.com
0215671111

கல்வி மேம்பாட்டிற்குரியவை



போட்டோக் கொப்பி
இருபக்கம் : 2/= மட்டும்.
கலர்பிறிண்ட் : 10/= முதல்
யாழில் கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்
666, கே.கே.எஸ் வீதி, யாழ். 0771974875

**வாகனம் விற்பனைக்கு**

Isuzu Canter வாகனம்
விற்பனைக்கு உண்டு.
14 அடி நீளம், அலுமினிய Body,
WP LE-xxxx.
தொடர்பு- 0214925102
(35423)

## சிறுபோக...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

கொள்ளப்படவுள்ள சிறுபோகச் செய்கைக்கான முன்னோடிக் கலந்துரையாடல்கள் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்றுள்ளன.

கல்மடுக்குளத்தின் கீழான சிறுபோகச் செய்கை தொடர்பான கூட்டம் புளியம் பொக்கணை கமநலசேவை நிலையத்தில் இடம்பெற்றது. இதில் கல்மடுக்குளம் நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் உள்ள காணிகளின் சொந்தக்காரர்கள், குத்தகைக்காரர்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கடிதம் மூலமாக அறிவித்தல் விடுத்திருந்தார்.

கல்மடுக்குளத்தின் கீழ் உள்ள கல்மடுப் பகுதியில் 450 ஏக்கர் நீர் வரியுள்ள காணிகளும், கண்டாவளைப் பகுதியில் 3 ஆயிரத்து 500 ஏக்கர் நீர் வரியுள்ள காணிகளும் உள்ளன. கல்மடு கமக்கார அமைப்பின் கீழ் உள்ள 450 ஏக்கரிலும் 225 ஏக்கரிலும் கண்டாவளைக் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள 3 ஆயிரத்து 500 ஏக்கரில் 606 ஏக்கரும் சிறுபோகச் செய்கை மேற்கொள்ள முடியுமென இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் நாகேந்திரபுரம் குடியேற்றத்திட்டக் காணிகளுக்கு அரை ஏக்கர் வீதம் பயிர்ச் செய்கைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகள் கல் மடுக்குளத்தின் கீழான நீர் உரிமையை ஒருபோதும் பெற்றிருக்கவில்லை.

இந்தப் புதிய நடைமுறை அரசியல் கட்சி ஒன்றின் தலையீட்டினால் அவர்களது அரசியல் தலைவர்களுக்காக வகுக்கப்பட்டதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

(க-6)

**மணல் விற்பனைக்கு**


பூநகரி, கண்டாவளை மண், கருங்கல் சல்லி என்பன டிப்பர் மூலம் பறிக்கப்படும்.
தொடர்பு- 0757278676 (ஜனா)

**வேலை வாய்ப்பு**

கணினியில் Pagemakerஇல் தட்டச்சு செய்யக்கூடியவர் தேவை.
முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (இடம்- யாழ்)
மாதவேதனம் 15,000/=
0212219815, 0718474325
(35426)

# மரண அறிவித்தல்

## திருமதி வீரகத்தி சின்னப்பிள்ளை



அனலைதீவைப் பிறப்பிடமாகவும், நாயன்மார் கட்டு, இராஜேஸ்வரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி சின்னப்பிள்ளை நேற்று(18.03.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வீரகத்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னாச்சி, நாகலிங்கம் மற்றும் ஆறுமுகம், பொன்னம்மா, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வ நாயகம், திலகவதி, கனகலிங்கம், இராசலிங்கம், கந்தசாமி, ரூபாவதி, புஸ்பராணி ஆகியோ ரின் பாசமிகு தாயும், செவ்விய தாமரா, துரைச்சாமி, சிதம்பரம், யோகேஸ்வரி, கனகேஸ்வரி, பஞ்சாட்சரம், தில்லைக்காத்தலிங்கம் ஆகியோரின் மாமியும், ஜெயவதனி, ஜெயகௌரி, விஜயமோகன், ஜெயகீதா, விஜயகாந்தன், ரூபன், ரூபி, சிவகௌரி, சிவசங்கர், பிரவீணா, அனோஜா, அசோக்தா, அநபாயன், சிவகோகிலன், தேனுகா, அனித்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜனுயா, கபிஷன், திஷயா, விதூஸ், டிருஸ், நக்சிகா, தீப்தயா (லூலா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

25/1, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(35416)

# மரண அறிவித்தல்



## ஆறுப்பிள்ளை வேலாயுதம்

*(ஓய்வுநிலை இ.போ.ச சாலை பரிசோதகர், வவுனியா)*

புண்ணியர் வீதி, தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், சோயா வீதி, தாண்டிக்குளம் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை வேலாயுதம் நேற்று (18.03.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், துசிகரன் (இ.போ.ச- முல்லைத்தீவு), மேகலா (கனடா), கிரிதேவி (சுவிஸ்), சரநேசன் (கனடா), நரேந்திரன் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவமணி, செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வேணி (கட்டடத் திணைக்களம், வவுனியா), தயாபரன் (கனடா), சயந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், தங்கநாயகம், இளமுருகன், செல்வராசா, பரமேஸ்வரி, கண்ணப்பநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், திருநாவுக்கரசு, தனிகாசலம், பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், டனுஜன், தானிகா (கனடா), அவனிதா (கனடா), அபிமன்யூ (சுவிஸ்), அனந்தினி (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2013) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தியார் மகிழம்குளம் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாழ் வீடு,
சோயா வீதி ஒழுங்கை, வவுனியா.

(சி/7134)

தகவல்:
குடும்பத்தினர்.

**Walk in Interview**

On 20th March 2013 from 10 a.m to 12 Noon
wanted a qualified English Lecturer
Age below 35 years
Preferably a Lady

Directors
British College Of Higher Studies
No 15, Sirambiyady lane, off Stanley road,
Jaffna
Contact no: 0212224550,0777222422, 0777730074
(c/7112)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

வங்கியில் கற்கை நெறிகள்

**CBF & DBF**
Batch 1- Saturday & Sunday 7.00- 1.00 Medium English
Batch 11- Saturday & Sunday 7.00- 1.00 Medium Tamil
Batch 111- Saturday & Sunday 12.00- 5.00 Medium Tamil
Batch IV- Weekdays 3.00- 6.00 Medium Tamil

**Chartered CAB & CAB 11**
Batch 1- Saturday & Sunday 8.00- 1.00 Medium English
Batch 11- Saturday & Sunday 8.00- 1.00 Medium Tamil
Batch 111- Weekdays 3.00- 6.00 Medium Tamil

**External degree**
GAQ, BA1, BA (Final)
1st in com, BCOM (part 1), BCOM (part 11), BCOM (final)

Further Details.
**JAFFNA COLLEGE**
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382, 2221947
(c/7464)

**அரிய வாய்ப்பு**

கனடாவில் படிக்க, உழைக்க, நிரந்தர குடியுரிமை பெற
சட்டரீதியான ஆலோசனை (Hotel Bakery முகாமைத்துவம்)

பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி
சட்டரீதியாகச் செல்ல இலவச ஆலோசனை

IELTS இல்லாமலே நியூசிலாந்தில் படிக்கலாம்
2 வருடத்தில் PR பெற வாய்ப்பு

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
**(PV 82703)**

முன்மாதிரியான சாதனை விசா
ஆலோசனை நிறுவனம்.
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090



(35406)

(7 நாள்களும் காலை 8.00 - இரவு 8.00 மணி[illegible])

## சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா-2013

### அம்பிகை அடியார்களே!



மேற்படி ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் நந்தன வருடம் பங்குனி மாதம் 06 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (19.03.2013) விளக்கேற்றும் வைபவம் நடைபெறும்.

26.03.2013 செவ்வாய்க்கிழமை முதலாம் பொங்கலும் 02.04.2013 இரண்டாவது பொங்கலும் நடைபெறும்.

குறிப்பு- பொங்கல் தினத்தன்று வியாபாரம் செய்ய விரும்புவோர் 24.03.2013 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்குப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
தேவஸ்தான பரிபாலன சபை.

(34693)(8.16.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.